உ

ஸ்ரீசற்குருவேநம:

வேதாந்தசாரம்.

கோவிந்ததீரசுவாமிகள்

சிஷ்யராகிய

சந்திரசேகரசுவாமிகளால்

தமிழில்மொழிபெயர்க்கப்பட்டது

இஃது

சேலஞ்ஜில்லாசிவில்கோர்ட்டுவக்கீல்

ம-௱-௱-ஸ்ரீ

அப்பாசுவாமிப்பிள்ளையவர்களாலும்

பாலக்காட்டுச்சேரி

சுலுத்தான்பேட்டையிலிருக்கும்

ம-௱-௱-அருணாசலம்பிள்ளைகுமாரர்

சிவராமன்பிள்ளையவர்களாலும்

பாரிப்பாக்கம்

முனியப்பமுதலியாரது

மெய்ஞ்ஞானவிளக்கவச்சுக்கூடத்தில்

பதித்தது

1862.

ஸ்ரீ சற்குருவே நம:

வேதாந்தசாரம்.

தெய்வவணக்கம்.

சுலோகம்.

அகண்டசச்சிதானந்தமவாங்மனசகோசரம் *
ஆத்மானமகிலாதாரமாச்ரயேபீஷ்டசித்தயே..*

ஸ்ரீ அகண்டசச்சிதானந்தபரிபூரணமாகியும் அவாங்மனோகோசரமாகியும் சமஸ்தத்துக்கு மாதாரமாகியுமிருக்கிற வாத்மாவை இஷ்டசித்தியின்பொருட்டு ஆச்ரயித்து அனேககோடிப்பிரமாண்டங்களைப் பூதரத்தில் வைத்திருக்கிற பெருத்தவயிறுடைத்தான விக்கினேஸ்வரருடைய பாதபத்மங்களை வணங்கி, பரமார்த்தமாயும் அத்துவிதானந்த ஸ்வரூபமாயும் அத்வைதத்தைக் கடந்தவராயும் ஆத்மார்த்தமாயும் சிவ சொரூபமாயுமிருக்கிற ஸ்ரீ குருமூர்த்திகளுக்கு நமஸ்காரஞ் செய்து, சகலவேதாந்தசாத்திரங்களினுநிச்சயிக்கப்பட்டசித்தாந்தசாரங்களையெல்லாஞ்சங்கிரகித்து இதைப்பார்க்கிறதற்கு யோக்கியருள்ளமூடர்களுக்கு அனாயாசமாய்ச் சுஞானம் பொருந்தும்பொருட்டுச்சொல்லப்படுகிறது. மேலும் இந்தச் சாத்திரமானது மூலசாத்திரார்த்தங்களையனுசரித்திருப்பதால் அந்தமூலசாத்திரத்திற்சொன்ன அனுபந்த சதுஷ்டயங்களைச் சொல்லுகிறோம்.

அனுபந்தசதுஷ்டயம்.

வினா- அவ்வனுபந்தசதுஷ்டயமாவதேதெனின்,

விடை- அதிகாரி, விஷயம், சம்பந்தம்பிரயோசனமென்று நான்குவிதமாயிருக்குமிந்த நான்குஞ்சாத்திரார்த்தபலத்துக்குப்பலம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- இந்தச்சாத்திரத்தின் பொருட்டுப்பிரவிர்த்திக்கபுருடனுக்குப்பலலட்சணமாயிருக்கிறதே பிரயோசனம், அந்தப்பிரயோசனமில்லாதவிடத்தில் மூடனுக்குக்கூடப்பிரவிர்த்தியில்லை.

வினா- ஆருமிந்தச்சாத்திரத்திற்கு அதிகாரியாரெனின்,

விடை- சாதனசதுஷ்டய சம்பத்தியுள்ளவனுமாய் யுத்திசாமர்த்தியமுள்ளவனுமாய் வித்துவானுமாய் மேதாவியுமாயிருக்கிறபுருடனையதிகாரியென்று சொல்லப்படும்.

வினா- விடயமாவதேதெனின்,

விடை- யாதொரு சொரூபத்தினிடத்தில் சகலவேதாந்த அர்த்தங்களுங் கூடியிருக்கிறதோ அந்தவேதாந்த அர்த்தங்களிற் சீவப்பிரமமாயிக்கிய சொரூபமாயிருக்கிற சுத்தசைதன்னியமே விடயமென்பது.

வினா- சம்பந்தமாவதேதெனின்,

விடை- இப்போது சீவப்பிரமமாயிக்கியமான வஸ்துவைப் பிரமாணமாய்ச் சொல்லுகிற சாத்திரத்திற்குப் போதகபோத்தியலட்சணமாவதே சம்பந்தமென்று சற்புருடர்களாற் சொல்லப்படும்.

வினா- பிரயோசனமாவதேதெனின்,

விடை- பிரத்தியகான்மாவும் பிரமமுமயிக்கானுபவமானதே யானந்தம், அவ்வானந்தானுபவத்திற் சகலசமுசாரபந்தங்களு நிவர்த்திக்கிறதே பிரயோசனமென்பது, இப்படியனுபந்தசதுஷ்டயஞ் சொல்லப்பட்டதில் யாதொரு புத்திசாலியாயிருக்கிறபுருடனுக்குச் சாதனசதுஷ்டய சம்பத்தி பொருந்தியிருக்கிறதோ அவனுக்கேயிப்போது சொல்லப்பட்ட பிரயோசனஞ் சித்திக்குமிதிலொன்று குறைந்தாலும்பலனில்லையென்றும். இந்த அர்த்தத்தில் மகாரிஷிகளானவர்களும் சாதனமாவது நான்குவிதமாயிருக்குமென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். ஆகையாலந் நான்கு சாதனமும்பொருந்தினவனுக்கே முத்தி, அவற்றுள் ஒன்று குறைந்தாலு முத்தியில்லை,

சாதனசதுஷ்டயம்.

வினா- சாதனசதுஷ்டயமாவதேதெனின்,

விடை, நித்தியா நித்தியவஸ்து விவேகமொருசாதன மென்றும், இகமுத்திரார்த்தபலபோகவிராகமிரண்டாஞ் சாதனமென்றும், சமாதிசட்கசம்பத்தி மூன்றாஞ் சாதனமென்றும், முமூட்சுத்துவம் நாலாஞ்சாதனமென்றுஞ் சாத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

முதற்சாதனம்.

வினா- நித்தியாநித்தியவஸ்துவிவேகமாவதேதெனின்,

விடை- பிரமமே நித்தியம் அநித்திய மாயிருக்கப் பட்டதே தேகேந்திரியாதிசகல செகத்து மநித்தியமென்றறிவது,

வினா- இதற்குத்திருஷ்டாந்தமெப்படியெனின்,

விடை- மிருத்திகையானது காலத்திரயத்திலு மொன்றாய்க் காண்கிற படியினால் நித்தியமென்றும் அதின் காரியமான கடாதிகளழிந்து போகின்றபடியினால் அநித்தியமென்றுங்கண்டோமப்போலத் தோன்றுகிறதேகாதிசெகத்தெல்லாம் பிரமத்தின் காரியமான படியினால் அநித்தியமென்றும் இவ்வநித்தியமான செகத்துக்குப் பிரமங்காரணமானதால் கடத்துக்கு மண்ணெப்படி நித்தியமோ அப்படிபிரமமேநித்தியமென்றுஞ் சொல்லப்படும்.

வினா- ஆனாலிந்தத்தேகாதிசெகத்துப் பிரமத்தின்காரியமென்பதற்குப்பிரமாணமேதெனின்,

விடை- ஆத்மாவிலேநின்று மாகாசாதிபஞ்சபூதசெகத் துண்டானதென்று யசுர்வேதாய நிஷத்திலேவருணன்பிருகுவுக்குச்சொல்லியிருக்கிறாராதலால் செகத்துப் பிரமத்தின் காரியமானபடியினால் அநித்திய மென்பதிற்சந்தேகமில்லை மேலும் சகல செகத்துஞ்சாவயவமானபடியினா லநித்திய மென்று சகலத்திராருங் கண்டிருப்பதால் வைகுண்டாதிகளை நித்தியமென்றெண்ணியிருப்பது மூடர்களுடையபுத்திப்பிரமையே யொழியவேறில்லை, ஆகையால் நித்தியாநித்தியங்களிரண்டையுஞ்சுருதியினாலும் யுத்தியினாலும் பகுத்தறிகிறதே நித்தியாநித்திய வஸ்துவிவேகமென்று சொல்லப்படும்.

இரண்டாஞ்சாதனம்.

வினா- இகமுத்திரார்த்தபலபோக விராகமாவதேதெனின்,

விடை- இஃலோகபரலோக போகங்களிரண்டிலுமநித்தியங்களென்றிருப்பதாலதுகளில் துச்சபுத்திசெய்து வெறுப்பது.

வினா- அதெப்படியெனின்,

விடை- புருடனாயிருக்கிறவனுக்குநித்தியாநித்தியபதார்த்தவிவேகத்தினால் புஷ்பசந்தனவனிதாதிகளான வநித்தியவத்துக்களாயிருக்கிற சகலவிடயங்களிடத்திலும்வயிராக்கியமுடனேயுண்டாகுமென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை- காக்கையெச்சமாதிகளிலெல்லாருக்குமசங்கிதபுத்தியெப்படிதோற்றுமோ அப்படியேவிடயபோக்கியங்களிலும் அசங்கிதபுத்தியுண்டாம் ஆனதாலிதுவே தீவிர விரத்தி யென்று சொல்லப்படும்.

வினா- தீவிரவிரத்திக்கடையாளமேதெனின்,

விடை- போகபோக்கியங்களில்தோஷ திருஷ்டியாய்ப்பார்க்கிறதே யடையாளமென்று பெரியவர்களாற்சொல்லப்பட்டிருக்கின்றது ஆதலாலவனுக்குத்தான் பிரவிர்த்திக்கிறகாரியங்களில் தோஷங்கண்டபிறகுதிரும்பவும் பிரவிர்த்தியாகாது ஆகையால் இகபரலோகங்களிலிருக்கிறபதார்த்தங்களின் உண்மையைநன்றாய்விசாரிக்கவேணுமெந்தவஸ்துவினுடையகுணத்தை நிச்சயம்பண்ணி விசாரித்தறிகிறபோதும் அந்தவஸ்துவினிடத்திலிருக்கிறதோஷங்காணப்படும்.

வினா- ஆனால் அந்தத் தீவிரவிரத்தியையடையப்படுவதெப்படியெனின்,

விடை- மாதாவினுடைய உதரத்தின்மலமூத்திரமத்தியிலிருந்து விடக்கிருமிகளாற்கடிக்கப்பட்டு மூலாக்கினியினால் தகிக்கப்பட்டதும் விசாரிக்கிறவனெவன்தான் வைராக்கியத்தையடையான்—தாயார் கெர்ப்பம் விட்டுதித்தும்தன்னுடல் மலமூத்திரங்களிலே புதைந்து மல்லாக்கச்சயனித்தும் புரண்டு விழுகிறதும் பாலக்கிரகங்களினால் பீடிக்கப்படுகிறதுமான குழந்தைப்பருவங்களை விசாரித்தவனெவன்தான் வைராக்கியத்தையடையான்—இதல்லாமல் பந்துக்களாலும்பிறத்தியாராலுமடிபட்டுக்கொண்டு மந்தஞானபாவமாகவு மதிசஞ்சலமாகவும்அசத்துக்கிரியைகள் செய்துகொண்டுமிருக்கிறகௌமாரபருவத்தை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்—மதத்தினாலுன்மத்தர்களாகவும் பெரியவர்களை நிந்தித்துக்கொண்டுங்காமாதுரர்களாகவும் வேளைதப்பினவேளையில் ஸ்திரீகளுடனனுபோகிக்கிற துன்மார்க்கர்களாகவும்பொருந்தினயௌவனத்தை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான் —ரூபஹீனமும் சர்வாவமானமும் சர்வத்திலுந் தீனத்துவமும் புத்திக்குறைச்சலுமாயிருக்கிறமூப்பில் தன்னை வந்தடுத்த துர்த்திசைகளை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்—வாதபித்தசுரங்குன்மம்லயம் குலேசஷயமுதலான ரோகங்களினாற் பிறந்ததீவிர துக்கமும் சரீர[illegible]ற்கெடு

ஸ்வரூபமான சொந்தமில்லாமலிடைவிடாதிருக்கிற கைவல்லியமா
கி. ஒழப்பைவிசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்—
சிவத்துவம் பெறுகிறபோது எமனைக்கண்டாப் போலிருக்
கிறபயமும் மரணமாலுண்டான நடுக்கமும் உணர்த்துகைகாக
ம்விழுகிறபோது கெர்ப்பத்தில் கட்டுப்பட்ட வேதனை பொ
ருந்திய பிராணனைப் பிரயாணகாலத்திற் காண்பிக்கிற துக்கத்
தை விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்—சகலத
த்துவங்களும் பொங்கி இந்திரியங்கள் பறைபட்டு அந்தக்க
ரண விருத்தியழிந்து அஞ்ஞானாந்தகாரத்திலமிழ்ந்திச் சுழ
லுகின்ற மரணவேளையிலுண்டாகும் மகத்துக்கத்தை விசாரித்
தவனெவன்தான் விரத்தியடையான்—பிராணன் பிரிந்த
போது நெருப்பாற்றிலுந் தகிக்கப்படாநின்ற பாவயிலு
ம்கும்பிபாகமான நரகத்திலுமசிபத்திரவனத்திலுமியமதூ
தர்களால் தெண்டிக்கப்பட்ட யாதனைகளைவிசாரித்தவனெ
வன்தான் விரத்தியடையான்—அப்பால் புண்ணியம்பண்ணின
பேர்கள் பரலோகமாகிய சுவர்க்கத்தில் நக்ஷத்திரரூபமாக
விருந்து அந்தப்புண்ணியங்க்ஷயமானவுடனே தேவதைகளி
னால்தள்ளப்பட்டுத்தேகங்கள் சிதறிப் பூமியில்விழுகிறதைக்க
ண்டு விசாரித்தவனெவன் தான் விரத்தியடையான்—வாயுவ
க்கினி சூரியனிந்திரன் முதலாகிய தேவதைகளும் ஈசுவர
னுக்குப்பயத்தினால் கலக்கமுள்ள மனதோடு கூடினவர்களாய்
சத்துருபட்சங்களினாலடிபடுகிறதுக்கத்தைவிசாரித்தவனெ
வன்தான் விரத்தியடையான்—பிரமதேவன் முதல் சக்கிரவ
ர்த்திகள் பரியந்தமிருக்கிறவானந்ததாரதம்மியங்களுஞ்
சுருதியினால் சொல்லப்பட்டிருக்கிற வுபாதிகளானதாலிது
வாஸ்தவமல்லவென்றாலோசித்தவனெவன்தான் விரத்திய
டையான்—சாலோகசாமீப சாரூபமுதலாகிய பேதங்கள்
புண்ணிய கன்மசத்தினாலுண்டானதாலிந்தக்கன்மத்தினா
ல் கிடைத்த சாலோகாதிகளுக்கும் நித்தியத்துவங்கூடாதெ
ன்று விசாரித்தவனெவன்தான் விரத்தியடையான்—யா
தொருலோகத்திலேற்றக்குறைச்சலான தாரதம்மியங்க
ளிருந்தாலும் இகலோகங்களில் துக்கமெப்படியோ அப்ப
டியே அந்தப்பரலோகங்களிலும் துக்கமுண்டென்று வி
சாரித்தவனெவன்தான் விரத்தியடையான்—உலகத்தில் வி
வேகிகளாயிருக்கிற புருடருள் நசிக்கப்பட்டவைகளா
யிருக்கிறகதிகளை நன்றாயிடைவிடாமனித்தியமாயப்பா

ரிக்கிறவன் எவன்சான் அதுகளிலாசையை வைப்பான் ஈது
[illegible] கஞ்ஞானிகள் விபரீதமாய் மோக்ஷத்திற்கு [illegible]
[illegible] கிறார்கள்— அப்பால் சொல்லப்பட்ட இரா
காதிகளின் [illegible] துன்மையாய் விசாரிக்கிறபோது [illegible]
[illegible] விருக்கின்றது இதுகளொப்பமையாகிற விருவிஷம் [illegible]
[illegible] பட்டிருக்கிறவன் [illegible] தாகியவேதாந்த ஞானி
களே [illegible] ப்பாரின்— ஆகையால் போக்கியங்களான [illegible]
[illegible] திரியங்களுக்கு பொருக்குமென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை- அத்திப்பட்சத்தைப் பிரித்துப் பார்க்கிறதற்கு முன்
[illegible] ள்ளதாக [illegible] ஞானிக்கு [illegible] பொசிக்கிறதற்கு யோ
க்கியமாகவுமிருக்கிற [illegible] படியே [illegible] போக
போக்கியங்கள் [illegible] விசாரிக்க [illegible] யிருக்கிற
போர்களொருக்காலும் பொசிக்கப்படுகிறதல்ல— [illegible]
[illegible] பிரிக்கப் [illegible] பட்டு [illegible] பற
ம்போகமட்டாமல் [illegible] பிருந்து
போகங்களை [illegible] ராகாதி [illegible]
[illegible] விட்டுப் பிரியமாட்டாமல் பிராந்தியிலுழல்கிறா
ன்— [illegible]
[illegible]
[illegible] லில்லாமல் [illegible] திருந்திறக்கிறதெப்
படியோ அப்படியே புத்திரகளத்திர மித்திரர்களிடத்தில்
சினேக [illegible] கூட்டிறவிருக்கும் [illegible]
ன் ஒருக்காலுமிந்தப் பந்தத்தில் [illegible] விடமாட்டாமலே இ
ராகாதிகளிலிருந்து விபரீதமாயிறந்து போகிறான்— அப்பா
இந்தக்கிராகாதிகளுக்குங் காராகிரகத்துக்கும் நன்றாய் விசாரிக்
கும் போது விசேடமென்னவிருக்கின்றது ஆதலால் காராகிரக
மும் இராகாதிகளுமிரண்டுஞ்சரியே.

வினா- அதெப்படியெனின்,

விடை- காராகிரகமானது, புருடப்பிரவிர்த்திக்கெப்படிவிக்
கினமோ வப்படியே இராகாதிகளு மோட்சத்துக்குத் தடை
செய்கிற விக்கினமாம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- இராக ஆசையே காலில் தளையப்பட்ட விலங்கு, ஸ்திரீயா

னைசயே கண்டபாசம், அதனைப் பேசாதிக்கிறதுபோரிடியா
ய் சாட்சாத்பிராணனுக்கு வேதுவாயிருக்கப் பட்டது—ஆகை
யாலிவ்வாஸனைகளா கிறவிஸ்வைகடாசங்களிற் கட்டுப்பட்ட பாசத்
தையுடைத்தானவெளமூர்த்திருக்க மாட்டாமல் காமக்குரோதா
திகளா கிற வாகைத்காரர்களாற் அழைப்பட்டுக் கொண்டு அகோ
ராத்திரமூ சோகமாகிற ஆவரணத்தினால் மறைக்கப் பட்டிருக்
கிறசமுசாரமாகிறவிலங்குக் கூட்டத்தில் நின்று இடரொன்கிற
னைகளால் பரவசனானவ னெப்படிவெளியே வருவான்—மே
லும், காமாந்தகாரத்தினால்மறைபட்டகண்ணுடையவன் குருபி
யாயிருக்கிற ஸ்திரீயினிடத்திலுமோகிக்கிறான்.

வினா- அதெப்படியெனின்,

விடை- அந்தனுடைய திருஷ்டிக்கு நல்லது பொல்லாதெ
ன்கிறதினிடத்திலெப்படிவிசாரணையில்லையோ அப்படியெ
ன்றறி.

வினா- ஆனால் ஸ்திரீலட்சணமாவதேதெனின்,

விடை- இவ்வஷ்டமொழுகுகிற நாளியும் பீளைதள்ளுகிற நேத்
திரமும் சேர்வைவடிகிற சர்மமுமலமூத்திர நிறைந்து
ள்ற [illegible] கப்பட்டவுடலும் மற்றும் பன்னாகுத் [illegible]
ம் இச்சையுடைய [illegible] இப்ப
டிக்கொத்த [illegible] புத்தியுள்ளார்களுடைய
கண்பார்வைக்கெப்படி [illegible] போகின்றது—விட்டி
லானது தீபத்தைக்கண்டு [illegible] நமைப்புத்தியை
த்து அதில் வந்து விழுந்தப்படி மடியுமோ அப்படியே
மதுல் ஸ்திரீயைப் [illegible] மனுஷீனும் மூடனிரு
ஷ்டியாய் படிந்து போகிறான்—மயிசம் அசுத்தம் [illegible]
[illegible] நிறைந்ததாயிருக்கிற ஸ்திரீயைத்தமக்
குத்தானே ரமணியமாய்ப்பார்க்கிறார் ஆதலால் அப்படி கண்
கெட்டவன் குருபமாயிருக்கிற மூத்திரையை யெப்படி
பார்க்கப்போகிறான்— சாட்சாத்காமனே யமனுகையால் வி
வேகிகளாயிருக்கிறவர்களுக்கு ஸ்திரீயேயெமாலயம்
ஆகையால் [illegible] பாலயத்திலாவது வீட்டிலாவது தாப
[illegible] நிவிர்த்தியில்லை—அதினுக்கிரகத்திலி
ருக்கிறவனிதன் செத்துப்போகிறபோது தாபத்திரயமில்லாத
[illegible] கிரகாதிகளைச்சுகம் போலெண்ணு
கிறான்— மேலும், உலகத்திலே யமனுக்குங்காமனுக்குந்தார
தம்மியம்விசாரிக்குமளவில்வெகுவித்தியாசமுண்டு-

வினா- அதெப்படியெனின்,

விடை- யமனானவன் சத்துருவாயிருந்துக் கொண்டு பாபங்களைச் சோதித்துத் தண்டனையைக் கொடுக்கிறான் காமன் பிரியனாயிருந்துக் கொண்டு அனர்த்தத்தைக் கொடுக்கிறான் — அதிலும் யமனானவன் சத்துருக்களுக்குத் துன்பத்தைக் கொடுத்துப் புண்ணிய புருஷாளுக்குச் சுகத்தைக் கொடுக்கிறான் காமனானவன் சற்புருஷாளுக்கும் விவேகமில்லாதபேருக்குங் கூடப் பிரியனாயிருந்துக் கொண்டு நரக மார்க்கத்தைக் கொடுக்கிறான் ஆதலால சத்துருவாயிருக்கிறதேனாக் கெடுக்கிறதற்குக் கேட்கவேண்டியதில்லை— பிரமாவானவர்தான் தானே பிரவிருத்தியைக் கோரிச் சிருஷ்டி விருத்தியாகக் காமனையுண்டாக்கினார் அந்தக் காமனால் உலகம் மோகிக்கப்பட்டுச் சந்திரனைக்கண்ட கடலானது எப்படிப் பொங்குமோ அப்படியே சகலமெல்லாம் பிரவிர்த்தியாகின்றது— சகத்தைப் பிரமிக்கச்செய்கிற காமனென்பவன் ஸ்திரீபுருஷாளுடைய மனதிற்குடியாயிருந்துக் கொண்டு சரசசல்லாபலீலைகளைச் செய்வித்து அன்னியோன்னியமோகமுண்டாக்கிக் காமாந்தகாரத்தினால் ஒருவர்க்கொருவராசையாகிறகயிற்றினால் கட்டிப் பிரபஞ்சத்தை விருத்தியடையப் பண்ணிப் பிரமதேவனுக்கினையை நிசப்படுத்துகிறான் — ஆதலால் சகலசெந்துக்களுடைய மனதிலுங்குடியாயிருக்கிற காமவேகத்தினால் போகத்தினிடத்தில் சதாவாசையாலதுசித்தமாயிருக்கின்றது அப்படியில்லைவிட்டால் அறியாதபதார்த்தங்களிலப்படி ஒருவன் பிரவிர்த்திக்கப்போகிறான் — சகல செந்துக்களுக்கும் மாசையே பலவந்தமாகையாலெத்தத்தேகமரித்தாலு மாசையானதுகுறைகிறதில்லை — ஆதலால் விவேகிகளுக்குள் விடயங்களிடத்தில் தோஷமென்றுகண்டு அதிலழுந்தின புத்தியையும் விட்டுக்காமபாசத்தில் நின்றவன் விடுபடுகிறானோ அவனே முத்திமார்க்கத்திற் கூடுவான்,

வினா- ஆனால் சற்புருஷாளுக்குக் காமனைச்செயிக்கிற சூட்சுமமாகிய வுபாயமெங்ஙனமெனின்,

விடை- நினைப்பாகிறசங்கற்பத்தை விடுகிறதே சுலபமான வுபாயம்— அப்பா இதல்லாமலும் கேட்கப்பட்டுங் காணப்பட்டுமிருக்கிற சந்தபோக்கியவஸ்துவினிடத்திலும் நன்மையென்கிற புத்தியை விட்டால் காமப்பிரவிர்த்தியில்லை— காமனுக்குவித்து சங்கற்பமத்தச் சங்கற்பத்தினால் சகலப் பிரவிர்த்தி

தியுமுண்டாகும் ஆகலால் வித்தைக்கெடுத்தால் முளையெப்படி யில்லையோ அப்படியே சங்கற்பநாசத்தினால் காமனும் நாசமா வான் மனிதனானவன் போகபோக்கியங்களிடத்தில் நன்மையென்கி றபுத்தியினாற்பிரவிர்த்திப்பதேதவிர வொருத்தனுமாசையினால் பிரவிர்த்தியான் ஆகலால் காமனைச்செயிக்க வேணுமென்கிற விச்சையுள்ளவன் விஷயங்களிடத்தில் நல்லதென்கிறபுத்தியை த்தவிரவேணும்.

வினா- சங்கற்பம்பிறவாதிருக்கிறதற்குக்காரணமேதெனின்,

விடை- விஷயத்தினுண்மையையெதார்த்தமாய்க் காணுகிறது மதையனர்த்தமாயெண்ணுகிறதுமான விரண்டிருனுங் கா மப்பிரவிர்த்திக்கவகாசமில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- மாணிக்கத்தினிடத்தில் கல்லாய்ப்பார்த்தவனுக்குப் ப யந்தோன்றாது அதுநன்மையென்கிறபுத்தியுமில்லை அதை க்கிரகிக்கவேணுமென்கிறபுத்தியுமில்லை—ஆகையால் ஒருவ த்துவினுண்மையை யெதார்த்தமாய்ப் பார்க்கிறது மனர்த்த மாயெண்ணுகிறதுமே சங்கற்பரூபமாயிருக்கிற காமன்பிர விர்த்தியாதிருக்கிற வுபாயமென்று சொல்லப்படும்.

வினா- இனிதனலட்சணமாவதேதெனின்,

விடை- அதுபாபங்களுக்கெல்லாமிருப்பிடமாகவுஞ்சதாகாலமும் துக்கத்தைவளர்ப்பிக்கிறதாகவும் மிகவுங்கெர்வத்தைக்கொ டுக்கிறதாகவும்பந்துக்களுடையபகையையுண்டுபண்ணு கிறதாகவும் சற்குணத்தைக் கெடுக்கிறதாகவும் லோபிகளு டைய சித்தத்தினால் வணங்குவதாகவும் மூத்திரபிடைக்கொ டுக்கிறதாகவுமந்தக்கரணத்துக்குமலினத்தைக் கொடுக்கிறதாகவு மிருக்கும்—அதல்லாமல் ராசாக்களால்பயமுஞ் சோரர்களால் பயமும் அக்கினியினால்பயமுந்தாயாதிகளால் பயமுமா யிருக்கிறதனமானது, பயத்தினால் மூழ்கியனர்த்தத்துக்கெ ல்லாமூலமாயிருக்கிறபடியினால் சற்புருஷர்களுக்குச் சுகங் கொடுக்கமாட்டாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- தனத்தைச்சம்பாதிக்கிறதிலும் ரட்சிக்கிறதிலும் தான

ம்பண்ணுகிறதிலும் செலவழிக்கிறதிலும் மனுஷனுக்குச் சதாது க்கங்கொடுப்பதால் தனஞ்சகத்துக்குச் சாதனமாகமாட்டா து — மேலும், சற்புருஷர்களுக்குக் கூடத்தனலோபம் வருமானா ல், லோபத்தைக்கொடுக்குமந்தலோபத்தினால் விவேகங்கெட்டு ப்போம்விவேகங்கெட்டுப்போனால் நசித்துப்போவான் — மே லும்தனமானது கிடையாமற்போனால்மனதுக்குக்கொடுக்கும் கிடைத்தென்றால் லோபமிகவுண்டாக்கும் ஆகையால் சதாவி சனத்தைக்கொடுக்கிறதனமானது எவனுக்குத்தான் சுகங்கொ டுக்கப்போகிறது — மனுஷனுக்குஜனன யோகத்தினால் மதங் கொடுக்குந்தானஞ் செய்தார்ப்பிறப்பைக்கொடுக்கு மிந்தவிர ண்டுவகையிலு மவனுக்கு நல்லெண்ணக்கூடாமல் வியர்த்தமாய் ப்போகின்றது ஆகையால் தனத்தில் மதம்பிறக்கும் மத த்தினால் நினைவுகெட்டுப்போம் நினைவுகெட்டால் புத்திகெட்டு ப்போம் புத்திகெட்டால் தானுங்கெட்டுப்போவான் — தனமா னது சுகங்கொடுக்குமென்று ஆசையாகிறபாசத்தினால் கட்டுண் டாவிக்கனம்பண்ணப்பட்டு அந்தத்தனசமீபத்திலே சதாகால மு மிருந்து பார்த்திருந்தமூடர்களுடைய பிராணனானது போகிறபோது கூடத்தானே கொண்டுபோய்விடும் தனசம்பன் னனானவன் அந்தகன்போலழுன்பின்மதான்றமல சற்புருஷ ராலனுக்கிரகிக்கப்பட்டு நன்மார்க்கங்களிற் சூழன்று நன்மார்க் கக்கூட்டிற்போகக்கூடியபடிக்கொருக்கால்தமோத்துபட்டு மு டிவில் அந்தகார கூபத்தில் விழுவான் இப்படிப்பட்டதன ச ம்பன்னக்குருடனுக்குக் கண்ணாகப்படுமவுடதமாவது தரித்திர மாகியவேயாம் — மேலும், லோபமுங்கோபமும் டம்ப மும்மதமாச்சரியமும் தனங்கிடைத்தமாத்திரத்தினால் வர்த்திக்கு ம் இப்படிவர்த்திக்கச்செய்யப்பட்டதனம் சித்தநிர்மலத்தை யெப்படிக்கொடுக்கும் — இந்தத்தனமானது கிடையாமற்போ னாலிரட்டிப்புத்துக்கம், கிடைத்ததனம் செலவாகக்கண்டால தைவிடமொட்டிப்புத்துக்கம் விவேகிகளுக்குத் தீர்விஷயத்தினா ற் கிலவுவந்தாலதைவிடவிரட்டிப்புத்துக்கமாம் — இப்படி நித்தி யம் சதாகவலையைக்கொடுத்துப்பயத்தை யிடைவிடாமல் செ ய்கிறதனத்தினால் தன்கிரகத்திலேசற்பமிருந்தாலந்தவீட்டிற் சஞ்சரிக்கின்றவனுடைய சித்தமெப்படி நிலைக்கடையில்லை யோ அப்படியே சித்தநிலைக்கவரமாட்டாதென்றறி.

சிஷ்- இனித்தனமில்லாதவனுடையலட்சணமெப்படியெனின்,

குரு- மனுஷர்சஞ்சாரமில்லாதவனத்திலுமனுஷர்களாடுகிறப

ட்டினத்திலுங்கள்ளர்சஞ்சரிக்கிற விடத்திலுமனுஷர் கூடி
யிருக்கிறவிடத்திலு மனுஷரில்லாத விடத்திலுந் தரித்திரம
டைந்தவன் சொஸ்தமாய் சகலஜனங்களாலு மாதரிக்கப்பட்
டுச்சுகமாயிருப்பன் தனமுள்ளவன் சதாகவலைபொருந்தின பு
த்தியோடேதான் பெற்றபிள்ளையினிடத்திலும் பயப்பட்டுச்ச
தாகிலேசத்தையடைவன்—ஆதலால் தனமானது அனேகது
க்கத்துக்கிருப்பிடமாகையாலிந்த அர்த்தத்தினால் பிரதிகூலமே
ன்றிப்புருஷார்த்த சித்தியில்லை யென்று சாதுக்களானவ
ர்கள் அர்த்தத்தைவிட்டொழித்து வனமேபோய்விடுவார்கள்—
இதுவுமல்லாமல் பத்திவிசுவாசகுணம் பொருந்தினகிரிகை யு
டனே பெரியோர்களுக்குச் சம்மதியாய் நடக்கிற புத்திரனை
யுந்தானத்துக்கும் போகத்துக்குமனுகூலமாயுபயமாயிருக்கி
றதனத்தையும் லட்சுமிகடாட்சம பொருந்தின கிரகத்தையும்
சற்புருஷாளாயிருக்கின்றபேர்கள் சுருதியினாலும் அனுபவத்
தினாலும் அநித்தியமென்றெண்ணி விட்டொழிவார்கள்—அஞ்
ஞானிகளாயிருக்கிறபேர்கள் நித்தியமென்றெண்ணி மோகமா
கிற சமுத்திரத்திலழுந்திப்போவார்களென்பது—யாதாமொ
ருவர்மலக்கூட்டமாயிருக்கிற கிரகத்தினால் சுகமென்றெண்ணி
மலத்திலிருக்கிறபுழுக்களைப்போல க்ஷேத்திரபாத்திரவாசையி
னால் அதைத்தேவதாசரீரம்போலெண்ணிவாழ்ந்துக் கொண்டி
ருக்கிறார்களோ அவர்களுக் கொருக்காலு மோட்சமென்கிற
சொல்காதிலுங் கேட்கக்கிடையாது திரும்பவுங் கெற்பவாசா
தி துக்கங்களைக்கொடுக்கும்—எவர்கள் தாரபுத்திர தனங்களிலி
ருக்கிற வாசையைநிராசையா யொழிக்கிறார்களோ அவர்களுக்
கு மோட்சவிச்சாபமானது சித்திக்குமென்றியதாருக்கில்லை-
ஆதலாலீஸ்வரார்ப்பண புண்ணியகன்மங்களினால் பாவங்களை
யத்தியந்தம்போக்கடிக்கிறவர்களையும் வேதத்திற்சொன்ன அ
ர்த்தத்தினிடத்திற் பிரவிருத்திக்கிறவர்களையும் சித்தசுத்தியுள்
ளபேரையும் புத்திசாலிகளையும் நித்தியாநித்திய பதார்த்தசோ
தனையையன்புடனேயடிக்கடிசெய்துகொண்டதினாலுண்
டாகிற மகாவயிராக்கியமென்கிறவாளைப் பொருந்தினவர்க
ளையும் மோட்சமொன்றே வேணுமென்கிற வேட்கையோடு
கூடினவர்களையுமிருக்கிற சந்நியாசிகளுக்குச் சமஸ்த விஷ
யங்களிலும் படர்ந்திருக்கிறஆசையாகிற கொடியை யறுக்கி
றதுசுலபம்—மேலும், பெலயாயிராநின்ற இந்தச் சமுசார
விருத்தியுவானை கோட்டைக்குப் பெரிதாகியவாசல் கள்ளமன்
னன்றி.

வினா- அதேதெனின்,

விடை- காந்தையென்றுங் கனகமென்றுஞ் சிங்ஙனையென்று ஞ்சொல்லப்பட்ட இந்தவாசல்களை யெவனடைக்கிறானோ அவனுக்குமிருத்தியுபயமில்லை—மோட்சலட்சுமி நகரத்து க்கு ஒருத்தராலும் பிரவேசிக்கப்படாதபடிக்கிருக்கிற மூ தல்வாசல் ஒன்றுண்டு அந்தவாசலானது, தனம்ஸ்திரீயென்கிற இரண்டு கதவினால் மூடப்பட்டுக் காமமென்கிற தாழ்ப்பூட் டியிருக்கும், யாதொருதீரனாயிருக்கிறவனிந்த மூன்றையும் பிளந்தெறிந்து போகிறானோ அவன்மோட்ச லட்சுமியுடை ய சுகபோகத்தை யனுபவிக்கிறதற்கு யோக்கியனாவான் — ஆ கையால் விவேகமாகிறபரியின் மேலேறிக் கொண்டு தீவிர வை ராக்கியமாகிறவாளைத்தரித்துக் கொண்டுசீதோஷ்ணாதி சுகதுக் கலாபநட்டங்கள் வந்தாலுஞ் சமமாய்ப்பொறுத்துக் கொண் டிருக்கிற உபசாந்தனுக்குச் சத்துருவானவனில்லை — விவேகத் தினுண்டான தீவிரவைராக்கியத்தாலே மோட்சத்துக்கு நிலைக் கடையென்று சற்புருஷர்கள்சொல்லியிருக்கிறார்க ளாகையால் மோட்சம் வேணுமென்று இச்சித்த புருஷனானவன் மேலா ன தீவிர வைராக்கி யத்தைப் பிரயத்தனம் பண்ணியாகிலுஞ் சம்பாதிக்க வேணும் — யாதொரு புருஷனானவன் வைராக்கி யமில்லா திருக்கிறானோ அவன் தேகாதிபந்தங்களைவிட்டொ ழிய மாட்டான் ஆகலால் வைராக்கிய மானது பந்தங்களை யறுக்கிறதற்கு வொருவாளா யிருக்கும் — யமாலயம் போலிரு க்கிற வீட்டில் மகா பெரியவர்களாகவிருந்தாலும் வைராக்கிய மில்லாதபடியினால் தாபத்திரயங்களா லிடைஞ்சல் பட்டுக்கி லேசிப்பார்களாகையால் பிரயத்தனம் பண்ணியாகிலும் இந் தத்தீவிர விரத்தியைச் சம்பாதிக்கவேணுமென்றறி,

மூன்றாஞ்சாதனம்.

வினா- இனிசமாதி சட்கசம்பத்தியாவதேதெனின்.

விடை- சமம், தமம், உபரதி, திதிட்சை, சிரத்தை, சமாதானமா கியவாறுமேசமாதிசட்கசம்பத்தியென்றுசொல்லப்படும்.

வினா- இதில் சமமாவதேதெனின்,

விடை- மனதுக்குத்தன்னுட்டத்தி லொருமைப்பாடா யிடை விடாமல் நிலைத்திருப்பதேசமமென்று சொல்லப்படும் — மேலும், இந்தச்சமமானது, உத்தமசாந்தியென்றும் மத்திம சாந்தியென்றும் அதமசாந்தியென்றுமூன்றுவிதமாயிருக் குமெனப் பெரியோர்கள்சொல்லுவார்கள்.

வினா - உத்தமசாந்தியாவதேதெனின்,

விடை - மனமானது விசாரத்தையொழிந்து லட்சியவஸ்துமாத்திரமாய் நின்றிருப்பதே பிரமந்நியான லட்சணமான வுத்தமசாந்தியென்றுசொல்லப்படும்.

வினா - மத்திமசாந்தியாவதேதெனின்,

விடை - பிரத்தியேகான்மசொரூப வனுபவத்தைச் சதாவனுசந்தானம்பண்ணுகிறதே சுத்தசத்துவலட்சணமான மத்திமசாந்தியென்று சொல்லப்படும்,

வினா - அதமசாந்தியாவதேதெனின்,

விடை - விஷயவியாபாரத்தை விட்டுச் சிரவணமனனாதிகளைச் செய்துக்கொண்டிருக்கிற நேமமென சத்துவ லட்சணமான அதமசாந்தியென்றுசொல்லப்படும்—இப்படிப்பட்ட சமமானதற்கு முன்னங்கமென்றும் பின்னங்கமென்று மிரண்டங்களுண்டு அவ்விரண்டங்களும் பொருந்தினவிந்தச்சமமானது சித்திக்கும்இல்லாதிருந்தால் சித்தியாது.

வினா - அவையேதெனின்,

விடை - தீவிரவைராக்கியமே முன்னங்கமென்றும் சிவசாருண்ணியமுதலானதுகளே பின்னங்கமென்றுஞ்சொல்லப்படும்—ஆயினும், இந்தச்சமமானது, காமக்குரோதலோபமோகமதமாச்சரியங்களாகிறவாசத்துருக்களையுமெவனாற் செயிக்கப்படவில்லையோ அவனுக்குச்சித்தியாது, சத்தாதிவிடயங்களைவிடம்போலெண்ணித் தீவிரமோட்சவிச்சையிலிருப்பிப்பாரிருக்கிறவனெவனோ அவனுக்குச்சித்தியாது—எவனால் ஈஸ்வரனையாராதிக்கப்படவில்லையோ எவனுக்குக்குருகடாட்சமில்லையோ எவனுடைய சித்தம்நிர்மலமாகவில்லையோ அவனுக்குச்சித்தியாது, ஆகையால்மனது நிருமலமாகும்பொருட்டும் பெரியவர்களாற் சமாதானஞ் சொல்லியிருக்கிறபடியிந்தச்சமமானது சித்தித்தால்மனது நிருமலமாகும் சித்தியாவிட்டால் நிருமலமாகாது—பிரமசரியமும் அயிம்சையுந்தயவும் வைக்கமும் விஷயாசத்தியம்அனுசாரமும்டம்பமும் அசத்தியமுமமதையுமில்லாதிருக்கிறதுந் துயிரியமும் தேகாபிமானமுமில்லாதிருக்கிறதும் ஈஸ்வரதியானம்பண்ணுகிறதும் பிரமவித்துக்க

ளுடன் சாவகாசம்பண்ணுகிறதும் ஞானசாஸ்திரார்த்தங்களை அருமைப்பாடாய் விசாரிக்கிறதும் சுகதுக்கங்களைச் சமமாய்பார்க்கிறதும் சதா ஏகாந்தவிருத்தியாயிருக்கிறதும் மோட்சவிச்சையுமாகிய இந்த ஏழுதலானவைகள் எவனுக்குண்டாயிருக்குமோ அவனுடைய சித்தம் நிருமலமாகும்—எவனுக்காகிலு மிந்நில்லாமல்பலவழியில் சுழன்றால் அவனது சித்தம் நிருமலமாகமாட்டாது—மேலும், ஸ்திரீகளை நினைக்கிறதும் பார்க்கிறதுமவர்களுடைய குணதர்மங்களைக் கவனிக்கிறது மவர்களை நன்மையென் றெண்ணுகிறது மவர்களிடத்தில் பிரியமவர்களிடத்திலிச்சைவைக்கிறது மவர்களுடைய கூட்டுறவுமவர் களைக்கலக்கிறதுமாகிய இந்த வெட்டுவிதமானதை யென்றும் அதற்கு விலட்சணமேயிருக்கிறது நிருமலமான பிரமசரியமென்றுஞ் சொல்லப்படும்—ஆகையால், மஹாவாக்கியங்களில் லுயிர்களைப்பீடியாமலிருப்பதும் பூததயவுந் திரிகரணசுத்தியாய் சதாவனைக்கரும் அயிசுவரிய தபசுரூபகுலவர்ணாசிரமாதி சனிருக்கு அகங்காரம் பிரவிர்த்தியாத படிக்கபிமானத்தை விட்டொழிகிறதும் குரு வேதாந்தவாக்கியார்த்தங்களில் திடநிச்சயமும் எவனுக்கிருக்குமோ அவனுக்குமனசு நிருமலமாகுமென்றறி.

வினா- இனி-தமமாவதேதெனின்,

விடை- பிரமசரியாதிதர்மங்களில் சித்தமேகாக்கிரமாயிருந்து சத்தாதி விஷயங்களிலிந்திரியங்கள் செல்லாதபடி நிறுத்துகிறதே தமமென்று சொல்லப்படும்—மேலும், இந்திரியங்களுடைய பிரவிருத்திவிஷயங்களிற் செல்லாமல் நிறுத்துகிறதுக்குச்சித்தசாந்திக்குச்சாதனமானது தமமென்றும்யோகிகளாற்சொல்லப்பட்டிருக்கிறது.

வினா- அதேதெனின்,

விடை- இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லும்போது மனதும் கூடவும் அதுகளிற்பாய்ப் போகுமாகையாலிந்திரிய நிக்கிரகம்பண்ணினால் மனம் வெளியிலே போகிறவேகமொடுங்கிச் சாந்தியாயவசத்தையடைந்து மேலும் நிருமலமுண்டாகும்—ஆதலால் மனப்பிரசாதத்துக் கடையாளமிந்திரியங்களை விஷயங்களிற் செல்லாதபடி நிறுத்துகிறது, அப்படி நிறுத்தினால் மனதுக்குப் பாகியார்த்தம்போகங்களொழியும் அப்போது சித்தமானது தன்னுடைய மலினபாவங்களொழிந்து மெள்ளமெள்ளச்சாந்தியை யடையுமாகையால் சித்தத்தினுடைய பா

ஷியார்த்தபோகங்களை விட்டொழிகிறதே மோட்ச மென்று
மோட்சலட்சணத்தை யறிந்தபெரியோர்கள் சொல்லுவார்கள்
ஆகலால்—முமுட்சுக்களுக்குமனோ நிருமலமாகிறதற்குச்சு
லபமான உபாயம் சமத்தைத் தவிரவேறொன்றில்லை மேலும் இந்தச்
சமத்தினால் மனசுக்கு நிச்சலமும் நிருமலமு முண்டாகுமாத
லாலிந்தப் பிராணாயாமத்துக்குத்திக்குத் தேசகாலமிது முத
லான நியமமும்வேண்டியபடியினால் பத்திமானாயிருக்கிற வ
ஸ்துக்களெல்லாமனதுக்கு விரோதமென்றெண்ணிச் சித்தசாந்தி
யடைகிறதின்பொருட்டுச்சோம்பலில்லாமல் இந்தச்சமத்தை
யே அப்பியாசிக்கவேணும்— இந்தச்சமாப்பியாசத்தால் சக
லவிந்திரியங்களுடைய போக்கைநிறுத்துகிறதினாலும்போக
போக்கியங்களைத்தோஷ திருஷ்டியாய்ப் பார்க்கிறதினாலு மீ
சுவரப்பிரசாதத்தினாலுங் குருப்பிர சாதத்தினாலுங் கொஞ்ச
காலத்தில் சித்தசாந்தியடையும்.

௯௬. இனி-தீட்சையாவதேதெனின்,

விடை- பிராரத்தகன்மவேகத்தினால் ஆதியாத்மீகமாதிபவுதிக
மாதி தெய்வீகமாகிற தாபத்திரயாதிதுக்கங்கள் தன்னைவந்
தடைந்தாலுமவைகளையெண்ணாமல் பொறுக்கிறதே தீட்
சையென்றுசொல்லப்படும்— முமுட்சுக்களுக்குத்தீட்சைக்
குச் சமானமானவங்க மொட்சைவேறொன்றில்லை ஆகையால் தீ
ரபுருஷராகவிருக்கிறபேர் களிந்தத்தீட்சையைத்தவசமா
கத்தரித்துக்கொண்டு சகல விக்கினங்களையுந்திரணீ கரித்து
மாயையைச்செயிப்பார்கள்— இந்தத்தீட்சையுள்ளபேர்களு
க்கேயோகசித்தியுமோட்சசாம்பிராச்சியலட்சுமீகபோக சித்
தியுமுண்டு, எப்படிப்பட்டவர்களும் தீட்சையில்லாத வரை
யில் விக்கினங்களால் அடிபட்டு மரத்தில் நின்றஇலைகளானது
பிரசண்டவாயுவினாலேயெப்படி பூமியில் விழுந்து போகு
மோ அப்படியே யாக்காந்தமாகிவிடுவார்கள் தீட்சையுள்ளவ
ன் தபசையக்கியந்தீர்த்தம் விரதம் கேள்விஐசுவரியம் சொர்
க்கமோட்ச முதலானதுகளில் எதுகளை யிச்சித்தாலுமவைகளை
யடைவான்— இதுவன்றியும்— பிரமசரியம்அயிம்ஸை சா
துக்களைப் பூசித்தல் பிறர்தூஷிக்கிறத்தைப் பொறுத்தலாகியவி
வைகளெல்லாந்தீட்சையுண்டானவனுக்கே சித்திக்கும் —இ
ந்தத்தீட்சையானது, சகல சாதனங்களிலு முத்தமசாதனமா
கையால் எந்தத்தாபத்திரயாதிவிக்கினங்களானாலுமிதனால் நிவா
ரணமாகும்—ஆதலால்தனக்குவருகிற துக்கங்களை தீட்சையி

னால் பொருந்திக்கொண்டு சத்தியானுசாரமாய் மெள்ளமெள்ளச் சிரவணாதிகளைப்பிரயத்தனம் பண்ணவேணும்.

வினா- அப்படிப்பிரயத்தனம்பண்ணித் திதிக்ஷை சாதித்ததற்குப்பிரயோசனமேதெனின்,

விடை- பிராரத்தகன்மவேகத்தினால் அனேகவிதத்துக்கங்களைப்பொறுக்கிறதே பிரயோசனம்.

வினா- இனி உபரதியாவதேதெனின்,

விடை- சித்தசுத்திக்குச்சாதனங்களாய்க்கண்ட நித்தியநைமித்தியாதிசகலகன்மங்களையும்வைராக்கியமென்கிற விதியினால்விட்டொழிகிறதே சந்நியாசமென்றும் உபாயமென்றுஞ்சற்புருஷர்களுக்குச்சம்மதமாய்ச் சொல்லப்படும்—மேலும் உபரதியென்கிற சப்தார்த்தமாவது—சகலகன்மத்தியாகம்பண்ணுகிறதற்கேயானதாலிதுவேகன்மசந்நியாசமென்றுஞ்சொல்லப்படும்— வேதத்திலுஞ் சகல கன்மத்தியாகமே சந்நியாசமென்று சொல்லப்பட்டிருக்கின்றது இதுவன்றியுங்கன்மங்களினாற்சாதிக்கப்பட்டலோகாதிகளுக்கும்வேதங்களினால் அனித்தியத்துவங்கேட்டிருப்பதால் நித்தியபலத்தையிச்சித்திருக்கிறபரமார்த்தனுக்குஇப்படியழிந்துபோகிறகன்மங்களினாற்பிரயோசனமேதிருக்கின்றது, மேலுங்கன்மத்தினாற்சாதிக்கப்பட்டபலம்உற்பாத்தியமென்றும்ஆப்பியமென்றுஞ் சமஸ்காரியமென்றும்விகாரியமென்றும்நான்குவிதமாயிருக்கும்இதைவிடவேறில்லை நித்தியமாயிருக்கிறபிரமத்துக்கு இந்நான்குங்கூடாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- சுதசித்தமாயும் சாஸ்வதானந்தமாயும் நிஷ்களமாயும்நிஷ்கிரியமாயுமிருக்கப்பட்ட பிரமத்தையும் பெறவேறொருவஸ்துவுமில்லையென்று வேதத்தில் நிஷேதிக்கப்படுகிறது ஆகையால் பிரமமுற்பாத்தியமாகமாட்டாது—யாதொருபோகத்தையடைகிறவனுக்கு மந்தப்போகத்துக்கும் பேதமுண்டானாற்போது அடையப்படுகிறவனுக்குப் போகமடையப்படும் அப்படி பேதமில்லாமல் சர்வதாயத்தனாயடைந்திருக்கிறபிரமத்துக்கொருக்காலுமாப்பியங்கூடாது--மேலும் உலகத்தில் மலினமாயிருக்கிற கண்ணாடிமுதலானதுகளுக்குத்துலக்குவிக்கிறதான சமஸ்காரியம் வேணும் அப்படியில்லா

மஹாகாசம்போல் நித்திய சுத்தமாயிருக்கிற பிரமத்துக்கொரு ரூபகாரியரூபமில்லை—இதுவன்றியும் நிட்களமாயும் நிட்கிரியமாயுமிருக்கிற பிரமத்துக்கு எந்தத் தோஷங்கூடப் படாதென்றது, சன்னகுடிரூதலான அனேகம்போல உருவமிருந்தால் பரிணாமமல்லையும் போக்கச் சுரூபகாரியம் வேணும்—அதுவுமின்றி வேதத்தில் கேவலமென்றும் நிர்க்குணமென்றும் பிரமத்தைச் சொல்லியிருப்பதால் அப்படி நிர்க்குணமாயிருக்கிற பிரமத்துக்குச் சுரூபகாரியம்போலொருகுணத்தையுஞ் சொல்லக்கூடாது—மேலும், லோகத்துக்குத் திராவியமாயிருக்கிற பஞ்சபூதங்களுக்குப் பரிணாமாதி விகாரங்களுண்டானதுபோல நிர்விகாரமாயிருக்கிற பிரமம் விகாரியமாகப்பட்டாது.

வினா- அதேதெனின்,

விடை- சுருதியானது நிஷ்களம் நிஷ்கிரியஞ் சாந்தம் நிரஞ்சனமென்று வஸ்துவினுடைய தத்துவத்தை யுள்ளபடி சொல்லுகிறது—ஆகலால் கர்மத்தினால் சாதிக்கப்பட்ட உற்பாத்தியவிகாரங்கள் பிரமத்துக்கொருக்காலுஞ் சொல்லக்கூடாது.

வினா- பிரமங் கன்மத்தினால்தான் சாதிக்கப்பட்டதோவெனின்,

விடை- கன்மம், அசத்தியம்- பிரமம் அநாதி நித்தியமாகையால் கன்மத்தினாற் சாதிக்கப்படுகிறதல்ல.

வினா- கன்மசாத்தியமானதை அசத்தியமென்கிற தெப்படியெனின்,

விடை- கன்மத்தினாலுண்டுபண்ணப்பட்டிருக்கிறதேகாதிப்பிரபஞ்சம் இதுநிலைப்படி யழிந்துபோகுமோ அப்படியே புண்ணிய கன்மத்தினாற் சம்பாதிக்கப்பட்ட பரலோகங்களானது அழிந்துபோகும் சகலருக்குஞ்செய்யப்படுகிற கிருத்தியங்களழிந்து போகுமென்கிற ஏது ஜாக்கிரதையாய்த் தோற்றிக்கொண்டிருக்கின்றது ஆகையால் கன்மசாத்தியமானசொர்க்காதி லோகங்களை விரும்புவாருயிருக்கிறவன் நித்தியமென்றுமோகப்பட்டான்—மேலும் ஜகத்காரணமான பிரமம் நித்தியமென்கிறது சகலருக்குஞ்சம்மதம் சுருதியிலுமிந்தப் பிரமந்தானே ஜகத்காரணமென்றும் சொல்லுகிறது, அதிலுஞ் சாமவேதோபநிஷத்தானது, சகலமும்பிரமமென்றுஞ் சத்தியமென்றுஞ்சொல்லி அந்தப்பிரமத்துக்குத்தானே நித்தியத்துவமுஞ்

செகத்காரணத்துவமுந் நிறமாய்ச் சொல்லுகின்றது ஆகையாலப்பி ரமமே சர்வநித்தியமென்கிறதிற் சந்தேகமில்லை, மேலும் வேதவா க்கியமானது கன்மத்தினாலும் புத்திரனாலும் தனத்தினாலும் மோட்சம்வரமாட்டாதென்று கன்மாதிகளைப்பிரத்தியட்சமாய்நி ஷேதிக்கின்றது — ஆகலால் எவனொருவன் பிரத்தியட்சமான வைது பிரமணித்தென்று சதாவிசாரித்துச் சகலகன்மமும் நிஷே தம்பண்ணுகிறானோ அவனுக்குப்பரப்பிரமலட்சணமான கை வல்லியஞ்சித்திக்கும் அதுதவிரக் கெங்காஸ்நானங்களினாலுமிர் த்தனங்களினாலுஞ் செபங்களினாலுஞ் சாந்திராயண முதலான த பசுகளினாலும் அசுவமேதாதியக்கியங்களினாலும் இருக்குவேதா திகளினாலும் பிரமத்தையடையமாட்டானென்பது நிச்சயம் — ஞானத்தினாலே மோட்சமென்றுஞ் சகல கன்மங்களையு நிஷேதி த்தஞானமே மோட்சமேயது என்றுஞ் சுருதியிற் சொல்லுகி ன்றது — அப்பா, விவேகியாகவும் விரத்தனாகவும் பிரமமே நித் தியமென்றறிந்தவனாகவும் பிரமந்தானாகவேணுமென்கிற இ ச்சையுடைத்தாயிருக்கிறவனாகவுமிருக்கின்ற புருஷனுக்கு அ நித்தியமாயிருக்கிற கன்மகாமக் கிரியங்களில் பிரீதிவரமாட் டாது — ஆகலால் அநித்தியமான சொர்க்காதிசாதனங்களாய்ச் சொல்லப்பட்டிருக்கிற நித்திய நைமித்திகாதி சகல கன்மசாத னங்களையும் பிரமபதமடைய வேணுமென்கிற முமூட்சுவான வன் நன்றாய் விட்டொழியவேணும்.

வினா— முமூட்சுவானவனுக்குச் சாதனங்களேதெனின்,

விடை— இரண்டுகையுடையவனுக்கு எப்படிதன்னுடைய சகல காரியமுஞ் சாதிக்கப்படுமோ அப்படிபோலவிரண்டுகளே சாதனம், மேலும், தீபமானதைத் தூண்டிக்கொடுத்தா லெப்படி பிரகாசமாமோவப்படியே சிரவணத்தினால் ஞா னமும் பிரகாசிக்கும் மோட்சத்துக்குச் சாதனம் ஞானமென் று பிரமவித்துக்கள் சொல்லியிருப்பதால் ஞானத்தை நச்சி த்தமாயப்பியாசம் பண்ணவேணும் — அப்பா விகிதமாய்ப் பண்ணவேண்டிய கன்மங்களை முமூட்சுவானவர்க ளெப்ப டிவிடப்படுமென்று மூடனைப்போல் நீயுஞ்சங்கை பண் ணவேண்டாம்.

வினா— அதெப்படியெனின்,

விடை— கன்மத்தினுடையபலம் வேறு ஞானத்தினுடைய பல ம்வேறு கன்மசாமக்கிரியம் வேறு ஞானசாமக்கிரியம் வேறு

கன்மாதிகாரியென்று ஞானாதிகாரியென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா- அதெப்படியெனின்,

விடை-ஆசையுடன் கூடினவன் கன்மாதிகாரி, நிராசையுடன் கூடினவன் ஞானாதிகாரி, அயிசுவரியவானாகவுஞ் சாமர்த்தியவானாகவுமிருக்கிறது கன்மாதிகாரியினுடைய லட்சணம், சிரவணாதிகளைப் பொருந்தினவனாயிருக்கிறது ஞானாதிகாரிலட்சணம்—மோட்சத்துக்கதிகாரி இகமுத்திரார்த்த பலபோகத்திலே யாசையில்லாத ஞானியாகிய சந்நியாசி, கன்மத்துக்கதிகாரிகிரகஸ்தனாகிய விடையவன்—கன்மிக்குச் சாதனம் ஸ்திரீ யக்கியபாத்திரங்கள், ஞானிக்குச்சாதனம் குரு சிரவணத்தைத் தவிரவேறு சாதனமில்லை—கன்மத்தினால் நாளாய் மேன்மேலும் அகங்காரம் விருத்தியடையும் ஞானமான சிரவணத்தினாலடிக்கடியகங்காரமழிந்துபோம்—கன்மசாத்திரமானது பிரவிருத்தியைக் கொடுக்கும் இதையனுட்டிக்கிறவதிகாரிகளுக்கு மொன்றுக் கொன்று பின்னமாயிருக்கும்—கன்மிக்கும் ஞானிக்கு மொருத்தருக்கொருத்தர் கூட்டுறவுமில்லை, கன்மிக்குச் சாமக்கிரியம்புறம், ஞானிக்குச்சாமக்கிரியம் அகம், ஞானம் உயர்ந்த கதியைக்கொடுக்கும், கன்மம் அதோகதியைக் கொடுக்கும், அப்படிப்பட்ட ஞானகன்மங்களிரண்டையு மொன்றையொன்றெப்படியபேட்சித்திருக்கும் ஒன்றிலேயொன்றெப்படிக்கூடியிருக்கும். அக்கினிக்குந்திரணத்துக்குமிருட்டுக்கும்பிரகாசத்துக்கு மெப்படியொன்றுதல் கூடாதோ அப்படியே ஞானகன்மங்களுக்கு மொன்றுதல் கூடாது, ஒன்றுக்கொன்று சத்துருக்களானதால் ஒன்றுக்கொன்று எப்படியதிகமாயிருக்குமாகையால் ஞானத்தின் சந்நிதான விசேஷத்தினால் கன்மமானது மறைந்துபோம், கன்மத்தினால் ஞானமறைபடமாட்டாது.

வினா- அதெப்படியெனின்,

விடை-அநேகமாயிரங்கோடி விறகுகட்டுப்போட்டெரித்தஅக்கினிஜ்வாலையானதும் சூரியபகவானுக் கெவ்வளவாகிலுமறைப்பாகிறஉபகாரம்பண்ணமாட்டாதெப்படியோ அப்படியே லட்சசகஸ்ரகோடிகன்மங்கூடியும் ஞானத்தைமறைக்கமாட்டாது, அந்தக்கன்மங்களும் — ஞானத்துக்குள்ளே யொடுங்கிப்போம் ஒருபுருடனிடத்திலாசிரயித்துக்கொண்டிருக்கிறவிரண்டுமைகளுக்கூடித்தொழிற்செய்யும் அதுபோல்ஞானக்

ண்டமங்களொன்றாய்க்கூடித்தொழிற் செய்யமாட்டாது—கன்மங்
கர்த்துருதந்திரம், ஞானம்வஸ்துதந்திரம், சாத்தா விருத்தகன்மங்க
ள்செய்யவுஞ்செய்யாதிருக்கவுங்கூடும்அப்படிவஸ்துவைக்குறித்த ஞா
னத்துக்குமாறுகொளவுங்கர்த்துருதந்திரங்கூடாது—இருவகையா
யானது, கண்ணுக்குநேராகவெப்படிகாணுகிறதோ அப்படியே
ஞானமானதுமனுபவப்பிரமாணங்களினுண்டாகும்படியிராக்
கன்மங்களைப்போற்புத்திபூர்த்தியையுமபேட்சியாது—ஆகலானும்
வஸ்துதந்திரமென்கிறதிற்சந்தேகமேதிருக்கின்றது, பெரியவ
ர்களாலும்ஞானம்வாஸ்தவமல்லவென்றுசங்கிக்கக்கூடாது.

விரு- அதெப்படியெனின்,

விடை- லோகத்தில் பிரத்தியட்சப் பிரமாணமாய்ப் பதார்த்தத்
தில்சமுசயாதிகளெப்படி வாஸ்தவமாயில்லையோ அப்படி
யே அனுபவப்பிரமாணமாய்க் கண்ட ஞானமும் சமுசயாதிக
ளில்லாமல்சத்தியமாயிருக்கையால் வாஸ்தவமல்லவென்பதுகூடா
து, நித்தியசித்தமாயும்நிரவயவமாயுமிருக்கின்ற பரப்பிரமம்
அவனாது தன்மனதிலேயனுபவமாய்க்காண்கிறபோது வேறொ
ருதொழிலையுமபேட்சியாது.

விரு- அதெப்படியெனின்,

விடை- கண்ணினாற்பார்க்கிறவனுடைய ஞானமானது தன்முயிப்பார்
க்கிறபோது மற்றொன்றில்கூடாமல்பிரத்தியட்சமாயெப்படி
தோற்றப்படுமோ வப்படியேசந்தேகமறத் தோற்றுமன்றி
வேறொன்றிற்செல்லாது ஒருபுருடன் ரூபத்தைப்பார்க்கிறதற்கு
நயனத்தைத் தவிரவேறொன்றையபேட்சிக்கவில்லை
யோ அப்படியேபரப்பிரமவஸ்துவைப்பார்க்கிறதற்கும் பிர
வணாதிகளுண்டாகிற ஞானத்தைத்தவிரவேறொரு தொழிற்செய்
யத்தேவையில்லை—கர்த்துருவினுடையகாரியங்களைப் பதினு
ருடையகாரியங்கள் சுபாசுபங்களினுகளைப்பிரமாணமாயறிகிறது
அனுபவமானதாலிந்தஞானத்துமாயாகாரியமென்பதிற்சந்தே
கமில்லை—உபோபநிஷத்தில்வித்தையவித்தையிரண்டையுமொ
ருமித்ததியலேனுமென்று சொல்லியிருப்பதுங்கன்மோபாச
னையைச் சொல்லியதே தவிர ஞானத்தையுங் கன்மத்தையுமொ
ருமைப்பாடாய்ச் சொல்லவில்லை—ஆகையால் நித்தியாநித்திய
வஸ்துவிவேகமும் இகமுத்திரார்த்தபலபோகவிராகமுமில்லாம
லிருக்கிறமூட்டுக்கேகன்மோபாசனை பண்ணுகிறது சமாவம்
தீவிரவைராக்கியம் பொருந்திப்புத்திசாலியாய்ப் பிரமாணத்தைத்

தைவிரும்பின முமுட்சுவுக்குக் கன்மங்கள் தேவையில்லை— யாதொருவனுக்குமோட்ச விச்சையிருந்து வெப்போது தீவிரவைராக்கிய முண்டாகுமோ அப்போதே கன்மசந்நியாசம் பண்ணுகிறது கடமையம்—ஆகையால் புத்திமான்களிதுவே பிரமாணமென்று நிச்சயிக்கவேண்டும்.

வினா. அதெப்படியெனின்,

விடை— அபரோட்சஞானத்துக்குக் கன்மசாதனங்கள் தேவையில்லையென்றுவேதங்களால் நிஷேதிக்கப்படுகிறது. இதையிலும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூடத்தானவர் வேதத்தினும் தபசினும் காணப்படுகிற வரல்லவென்றுசொல்லியிருக்கிறார்—மேலும், சுருதியில்பிரவிருத்தியென்றும், நிவிர்த்தியென்றுமிரண்டு விதஞ்சொல்லி யிருக்கின்றது, அதில்பிரவிருத்தியினால் மனுஷனுக்குப் பெந்தமும் நிவிர்த்தியினால் மோட்சமுமாகையால் மோட்சத்தைவிரும்பினவர்கள் கன்மசந்நியாசம் பண்ணவேணுமே தவிர ஞானகன்மங்களிரண்டையுமொன்றாய்க் கூட்டுகிறது ஒருக்காலுங் கூடாது ஆகையால் ஞானம் வேணுமென்கிறவன் சகல கன்மங்களையும் விடவேணும் யாதொருவன்கன்மங்களைச்சாதனமென்றும்இஷ்டமென்றுங்கிரகித்தானோ அவனே அந்தவத்துக்களழிந்துபோமென்றுநன்றாய்த் தெரிந்தபோதினுமேலே நாசப்படுவான்—உபரதிசத்தார்த்தமானது முன்கண்டயா தொருவிடயவஸ்துக்களையும் விட்டொழிகிறதாகையால் அந்தஉபரதிமுக்கியமென்றும்கௌணமென்றும் தொழிலினவிரண்டுவிதமாகும்.

வினா- அதேதெனின்,

விடை— விருத்திக்குத்திரியமான விஷயங்களைப்பரித்தியாகம் பண்ணுகிறதே முக்கியோபரதியென்றும்வேதாங்கங்களாயிருக்கிற கன்மங்களை விடுகிறதே கௌணோபரதி யென்றுஞ் சொல்லப்படும்.

வினா— அதேதெனின்,

விடை— யாதொருபுருஷனும் பிரதானமான உபரதி சித்தியார்த்தமாகும் பொருட்டுவேதாங்கமான கன்மங்களைச் சந்நியாசம் பண்ணவேணும் அந்தக்கன்மசந்நியாசமான அங்கமில்லாமல் பிரதான உபரதிசித்திக்க மாட்டாது—ஆதலால் இ

ஜஹாமுத்திரார்த்த பலபோகங்களில் நன்ருய் விரத்தி வந்தவுடன் கன்மசந்நியாசம் பண்ணவேணும் அப்படியே வைராக்கியமில்லாமல் கன்மசந்நியாசம் எவன்பண்ணுகிறனே அவனுக்குஞ் சண்டாளனுயிருக்கிறவ னிடத்தில் வேதமந்திரங்க ளுபதேசித்தாலெப்படிப்பலமில்லாமல் நிஷ்பலமாய்ப் போகுமோ அப்படியே நிஷ்பலமாய்ப்போகும், மோட்சம் வேணுமென்று ஒரு தேவதையைக்குறித்துக் கழுத்தையரிந்துகொள்ளுகிறனெவனே அவனுக்கும், கெங்காப்பிரவேசமிறவனுக்கும், புத்திர தேகாதிகளிடத்திலெப்படி வெறுப்போ அப்படிஎவனுக்குவிரத்திவருகின்றதோ அவனுக்குச்சந்நியாசங் கூடுமன்றி யிதரராளுக்குக் கூடாது—ஆகையால் வைராக்கியம் வந்தவன் சந்நியாசம்பண்ணவேணும்மற்றவன் கிரகஸ்தனாயிருக்கவேணும், சந்நியாசம் பண்ணியும் விஷய விச்சையிருந்தானுல் நரகங்களில்வாதைப்படுவான்—ஆதலால்சகலகன்மங்களையும்விட்ட சந்நியாசியானவன் பூர்வங்கிரகஸ்தனாயிருந்தாலும்மப்போதுண்டான விஷயவாசனைகளைவாந்தியசனம் போல் வெறுப்பாயெண்ண வேணும்.

விரு- இனிசிரத்தையாவதேதெனின்,

விடை- குருவேதாந்த வாக்கியங்களில் சத்தியபுத்தியுண்டாயிருப்பதே மோட்சசாதனமான சிரத்தையென்று சொல்லப்படும், இந்தச் சிரத்தையுள்ளபுருடரெவர்களோ அவர்களுக்கேபுருஷார்த்த சூட்சுமமாயும்பரமதத்துவமாயுமிருக்கிற சித்தியுண்டாகும் இதராளுக்குண்டாகமாட்டாது, சாமவேதோபநிஷத்தி லுத்தாலகரிஷியானவர் புத்திரனுயிருக்கிற சுவேதகேதுவைப்பார்த்து அப்பாநீ சிரத்தையைப்பொருந்தியிருவென்று சொல்லியிருக்கிறர்—ஆகையால்யாதொருவனுக்குஞ்சிரத்தையன்றிச் சன்மார்க்கப்பிரவிருத்தியில்லை, சன்மார்க்கப்பிரவிருத்தி யில்லாதவனாயிலதனுலே சாதிக்கப்பட்ட புருடார்த்தமில்லை, அந்தப்புருடார்த்தசித்தியாகிலது சிரத்தையினுல்சகலசெனங்களுமடிபட்டுச் சமுசாரசாகரத்தில் மூழ்கிப் போவார்கள்—ஆதலால் வேதத்திலுங் குருவினிடத்திலும் தெய்வத்தினிடத்திலும்மந்திரத்தினிடத்திலும்தீர்த்தங்களிடத்திலும்மகாத்துமாக்களிடத்திலுமெப்படி யெப்படிவிசுவாச மிருக்கின்றதோ அப்படியப்படியே சித்திக்கும்—அப்பா வஸ்துசற்பாவநிச்சயத்தினுல் பிரமமுண்டென்றறிய வேணுமந்தச்சற்பாவ நிச்சயம் சாத்திரயுக்திசித்தமான சிரத்தையினுல்வரும்— ஆ

கையால் குருவேதாந்தவாக்கியங்களில் சிரத்தையுண்டான முமுட்சுவுக்கேபலஞ் சித்திக்கும்அதுதவிரச்சித்தியாது.

வினா- அந்தச் சிரத்தை பிரவிருத்திக்கிறதற்குக்காரணமேதெனின்,

விடை- ஸ்ரீ சற்குருசொன்னவார்த்தையை யெதார்த்தமாயெண்ணுவதேகாரணம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- வேதமீசுவரவாக்கியமென்பது, எதார்த்தமென்கிறதில் சந்தேகமெப்படியில்லையோ அப்படியேமுமுட்சுவாயிருக்கிறவனுக்குச் சற்குருவும் ஈசுவரசொரூபமானதாலவர் வசனமும் யெதார்த்தமே—சற்குருவேதாந்த வாக்கியங்களினால் யுத்திமான்களாயிருக்கிற சற்புருடாளுக்குச் சிரத்தையானது சித்திக்கும்.

வினா- இனிசமாதானமாவதேதெனின்,

விடை- வேதத்திற் சொல்லபட்ட அர்த்தமறிகிறதின்பொருட்டு வித்துவாம்சிசாளாயிருக்கிறபேர்களுக்கு அறியவேண்டியவஸ்துவினிடத்திற் சித்தத்தைநன்றாய் நிறுத்துகிறதே சமாதானமென்று சொல்லப்படும்.

வினா- இதற்குக்காரணமேதெனின்,

விடை- சித்தம், சாத்தியமான பிரமத்தினிடத்தில் நிலைத்திருப்பதேபுருடார்த்தமான நியமத்துக்குக்காரணம் அதுவன்றிவேறொன்றினாலுஞ் சாதிக்கப்பட்டசாத்தியஞ்சித்தியாது, சாத்தியமானது சித்தியாதபோதுமனதுசஞ் சலப்படும் மனதுசஞ்சலப்பட்டால்பண்ணினபிரயத்தினம்பலியாது, ஆகையால்சித்தமுந்திருஷ்டியுங்கரணமும்ஒருமைப்பாடாயொருவிடத்திலேநிறுத்தினால் அந்தலெட்சியம்பொருந்தும் அது தவிரவொன்றுகுறைந்தாலும்லெட்சியம் பொருந்தாது,

வினா- எப்படியெனின்,

விடை- தனுநாணிலேபூட்டினவம்பானது குறிதப்பினாலெப்படிதப்பியதோவப்படியேவியர்த்தமாய்ப்போம்-அதுசித்திக்குச்சித்தசமாதானமேஅசாதாரணகாரணமானதால் முமுட்சுக்களாயிருக்கிறபேர்களிந்தச் சமாதானத்தில்சதா நிலைத்திருக்கவேணும்மிகுந்ததீவிரவைராக்கியமும் பிரமத்தையடையவே

னுமென்கிறவிசாரரூபமாகியவிசிரவணஞ்சசாதனத்துக்குக் காரணம்மேலும்பிரமனை வல்லுவையடைகிறதற்குப்பாகியாங்கமென்றும் அந்தராங்கமென்றுமிரண்டுவகைகளுண்டு அவற்றுட். பிரமசரியமாதிகள்பாகியாங்கமென்றுஞ்சமாதிஷட்கசம்பத்தி அந்தராங்கமென்றும்பெரியவர்களாற்சொல்லுவார்கள்— பாகியாங்கத்தைக் காட்டிலுமந்தராங்கம் வலிதானதால் சொரூபத்தையறியவேண்டியவனந்தராங்கமானசமாதிஷட்கத்தையே யப்பியாசிக்கவேணும்— யாதாமொருவனந்தராங்கமப்பியாசியாதபடிக்குக்கேட்டிருந்சிரவணம் பண்ணினாலுஞ்சொரூபநிட்டைபொருந்தாது.

வினா- எப்படியெனின்.

விடை- தைரியமில்லாத புருஷனுக்குச் சகலவாயுதமிருந்தும் யுத்தமுகத்திலெப்படிப்பயோதோவப்படிபோலென்றறிக.

நான்காஞ்சாதனம்.

வினா- இனிமுமுட்சுத்துவமாவதேதெனின்,

விடை- எந்தவிவேகியானவன் பிரமாணமாய் வைராக்கியானுபவஞானத்தினுஞ் சமுசாரபெந்தத்தை விடவேண்டுமென்றெண்ணியிருக்கிறானோ அவனை முமுட்சுவென்று சொல்லப்படும், அப்பாசகல சாதனங்களுக்குள்ளும் முமுட்சுத்துவமூலகாரணம் அந்தமுமுட்சுத்துவத்தின் இச்சையில்லாமலுமதின்பிரவிருத்தி யில்லாமலும் ஒருவனிருக்கிறானோ அவனுக்கு வேதாந்தசிரவணமும் அதன்பலமும் வரமாட்டாது— இந்தமுமுட்சுத்துவமானது தீவிரமென்றும் மத்திமமென்றும் மந்தமென்றும் அதிமந்தமென்றும் நாலுவிதமாயிருக்குமென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினா- அதேதெனின்,

விடை- அனேகரூபமாயிருக்கிற அதிதாபத்திரயங்களினால் நித்தியமுந்தகிக்கப்பட்டு வெகுவாயத்தக்கரவைகலக்கமடைந்து பெண்டுபிள்ளைபண்டபதார்த்தங்களையனித்தியமென்றெண்ணிச் சுட்டசட்டிகைவிட்டதுபோல் விட்டொழிகிறவனெவனோ அவனைத்தீவிரமுமுட்சுவென்று சொல்லப்படும்— மேலும் மனுத்தன்னைவருத்துகைடகிறதாபத்திரயங்களைக்கண்டும் சொரூபத்தினுடைய நிலவரங்கண்டும் பெண்டுபிள்ளைபண்டபதார்த்தங்களைவிட்டொழியமாட்டாமல் சஞ்சலம்பொ

ருந்திய மனனுடன் கூடியிருப்பவனேயன்று. அவனே மந்தமு மூட்சுவென்றும், மோட்சமடைகிறதற்குக் காலமின்னும் பின்னுமே யிருக்கின்றது. இப்போது தீவிரமென்கை, போசங்களெல்லாம் போகிறதுக்குச் சகலபிரபஞ்ச வியாபாரமும் விட்டு முடித்து அநந்தமேல் மோட்சத்தைப் பெறுவோமென்றெண்ணமேயிருக்கிறவனெவனோ அவனே மந்தமுமூட்சனென்றும், வழியார்க்கப் போகிறவனுக் கெதிரே மாணிக்கங்கிடைத்தாற்போல வெகுக்கோட்சம் கிடைத்ததாகில் நான் இருந்தாற்றானுக மேனுமாகவன்றியில் பிராரத்தம் பண்ணவேண்டிய மென்னவென்று மூடபுத்தியாயிருக்கிறவனெவனோ அவனே அதிமந்த முமூட்சுவென்றுஞ் சொல்லப்படும்.—ஆகையால் வெகுகாயிரஞ் சென்மங்களில நல்வரவினையாராதித்ததினால் மனோமலங்கள் நிவிர்த்தியாய் சகல சாஸ்திரங்களையு நன்றாய்த் தெரிந்து குணமென்று மோட்சமென்று மறிந்து போகபாக்கியங்களிலாசையொழிந்து நித்தியாநித்திய பதார்த்தத்தை யறிந்து மோட்சகாமனாய் அக்கினியிலகப்பட்டவன் தீர்த்தத்தை நாடி டவன் உடனே ஓடிப் போறாப்போலப் படபடத்து வேகமாய் விட்டுவிடுகிறதுபோல் அப்படிப்போய் தீவிர மோட்சேச்சையினால் கிரகாதிகளையெல்லாம் விட்டுவிடுகிறானோ அவனித்தச்செகமாரணங்களை விறசமுசாரத்தைக் குருகடாட்சத்தினாலே விட்டோடுகிறான்.—ஆகையால் யாவனொருவன் தீவிர முமூட்சுவாயிருக்கிறானோ அவனொருத்தன் சென்மத்திலேதானே ஞானத்தை யறிவான், மற்றவனோவெனில் சென்ம மூன்றில் மோட்சமடைவான், மந்தனோவெனில் பல சென்மத்தில் முத்தியடைவான், அதிமந்தனோ வென்றால் கோடிகாலங்களிலும் முத்தியடையமாட்டான்.—அப்பா! நானுனக்குப் போதித்த மூமுக்ஷுச் சாதனசதுஷ்டயம் பட்டசென்மங்களில் பலவித சென்மமெடுக்கப்பட்ட மகானுபாவர்களெனப் பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அதினுப்பதேசங்கள் நடைகொள்ளால் பருவதிசென்மமாய்ப் பிறக்கிறது மகானுபாவன் அதினுப்போடுபோவாயிராமல் விவேகத்துடனேயிருந்து பரமானுபவ மான ஞானத்தையடைந்து மாதாவைப் போல நினைத்து அடைந்தோர் பட்டபோதுத் தியிருக்கிறார் ஞானவான் தீவிர வைராக்கியத்துடனே கூடிமுத்தியடைகி

றதின்பொருட்டு இந்தத்தீவிரமோட்சவிச்சையைப்பிரயத்தனம்ப
ண்ணவேணும் — அப்பா! புத்திரமித்திரகளத்திராதி சகம்போகங்
கள்ஜென்மங்கடோறுமுண்டாகும் அதில்மனுஷஜென்மமும்ம
னுஷஜென்மத்திற்புருஷஜென்மமும்அதில்விவேகமுங்கிடைக்
கமாட்டாது — ஆகலா லரிதாயிருக்கிற மனுஷஜென்ம மெடுக்
கிறதிலும்புருஷஜென்மமெடுத்தும்புருஷஜென்மத்திலும் நித்
தியாநித்தியமீதென்றுபகுத்தறிகிற விவேகத்தையடைந்தவன்
நித்தியத்தைப்பொருந்தாமலிகலோகவிச்சையைப்பொருந்தி
விட்டானாலப்படிக்கொத்த அற்புதத்தியோடேகூடின புருட
ன் தனதுஜென்மத்தைச்சுடவேண்டுமென்பதிற்சந்தேகமில்லை.

வினா— அதேதெனின்,

விடை— மிருகபட்சியாதிகள் தினந்தோறும் பெண்டுபிள்ளை
யோடேகூடிப் போகபாக்கிய விஷயாதியசனங்களைப் பொ
சித்துக் கொண்டிருக்கின்றன, அந்தச் ஜென்மங்களும் இக
லோகசுகத்தையிச்சித்திருக்கிற அர்மார்க்கர்களுடைய ஜென்ம
ங்களுஞ்சரியானதால் தீவிரமோட்சவிச்சையுள்ளோர் திரும்ப
வுமிகலோகசுகத்தை இச்சிக்கலாகாது — அப்பா! சரீரத்திற்ரோ
கப் விருதாப்பியம் வந்தடுக்கிறதற்கு முன்னும் புத்திக்ஷீணமா
கிறதற்கு முன்னும் மிருத்துவைப் பார்க்கிறதற்கு முன்னும்
இந்ததானமான சஞ்சலமில்லாமல் வேதாந்த சாரத்தைக்கிரகி
க்கிறதில் வேகமுள்ளவனை விவேகி சீக்கிரமாக முத்தியடைகி
றதின்பொருட்டுத்தீவிரமோட்ச விச்சையில் பிரயத்தனம்ப
ண்ணவேணும் — உலகத்தில் தேவர்களெண்மர் ரிஷிகளெண்மர்
பிதிர்க்களெண்மர் இதுவுமன்றியில்மனுஷாளெத்தங்கோடியு
ண்டு. அதில்ஜெனனமாகிறபெந்தத்தை நன்றாய்விட்டுவிட்டுப்பி
ரமநிஷ்டனாயிருக்கிறவனொருவனிருப்பானென்றறி — அப்பா
அந்தர் பெந்தத்தினால் கட்டுப்பட்டிருக்கிற வனுக்குப்பாகிய
பெந்தம்விட்டதினால்பிரயோசனமேதிருக்கிறது ஆனதாலந்த
ர்பெந்தத்தைவிட்டுவிடுகிறதின் பொருட்டெந்தத்தொழிற்செ
ய்யவேணுமோ அந்தத் தொழிற்செய்கிற பேர்களோடே கூடி
அதுசெய்யவேணும் — அந்தத்தொழிலினுடைய ஒருமிப்பே
தீவிரமோட்சவிச்சையென்றுசொல்லப்படும் அதைவிட அன்
னியமான தெல்லாஞ் சொல்லுக்குயோக்கியமானதே தவிரச்சு
ருதிசம்மதமில்லை — ஆனதால் கிரகபுத்திரதனாதிகளை யெல்லா
ம் அனித்தியபுத்தியாயெண்ணிவிட்டுப் புருடசவுக்கிய விச்சை

யினால் மிர்தமாய்ப்போன புருடனோடேகூட அக்கினிப்பிரவேசம் பண்ணுகிற ஸ்திரீகளுக்குத் திடவைராக்கிய மெப்படி பொருந்தியிருக்கிறதோ அப்படி தீவிரவைராக்கியம் பொருந்தியிருக்கிறவனுக்கே மோட்ச இச்சையான பலன் சித்திக்கும்,

வினா- இந்தமோட்சவிச்சாபலன் சித்திக்கிறதற் குக்காரணமேதெனின்,

விடை- நித்தியாநித்திய வஸ்து விவேகமும் தேகத்திலிடத்திலனித்தியத்துவபுத்தியு மிருக்குமிவிடத்தில்வருகிற பயமும் பயத்தினாலுண்டானதாபமுமறிகிறதேகாரணம், ஆயினும் வைராக்கியம் வருகிறதற்குக்காரணம் நித்தியாநித்திய வஸ்துவிவேகமே, சந்நியாசத்துக்குக்காரணம் தீவிரவைராக்கியம், சிரவணாதிகளுக்குக்காரணம் சந்நியாசம், ஞானத்துக்குக்காரணம் சிரவணாதிகள் என்றறிந்த இந்தஞானமானது மோட்சத்துக்கேதுவானதாலிதற்குமுன்சொன்னலட்சணங்களைப்பொருந்தின விவேகிகளைச்சதாகாலமும் பசனைபண்ணவேணும்— அப்பால் நித்தியாநித்தியவஸ்துவிவேகமே சிரசு, இகமுத்திரார்த்த பலபோகவிராகமேகழுத்து, வைராகமேசரீரம், சமாதிசட்கசம்பத்தியேஅங்கங்கள், முமூட்சுத்துவமேபிராணனென்றுசொல்லப்படும்— இப்படிக்கொத்தவடிவுடனே கூடியசொரூபத்தை யறியவேணுமென்று புத்திசாலியானவன் ஞானகுரு வேதாந்தவாக்கியங்களைக்கூறுகிற சாலையில் இட்டப்பட்ட நல்லஞான மென்கிறவாளினால் மிருத்துவைச்சங்கரிப்பன்— ஆனதாலிப்படிசொல்லப்பட்ட சாதனசதுட்டயசம் பத்தியுள்ளவனு யான்மாவையடையவேணுமென்கிற புருடன் தன்னையறிகிறதின் பொருட்டுக்குருவைக்குறித்து உபசாரபாணியாகவொடுக்க வணக்கத்துடன் போகவேணும்.

ஆசாரியலட்சணம்.

வினா- அந்தக்குருவானவரெப்படியிருக்கவேணுமெனின்,

விடை- சகல வேதார்த்தங்களை யறிந்தவராயும் பிரமநிட்டை பொருந்தினவராயும் சாந்தியுடையவராயுஞ் சத்துருமித்துருசமசம்பன்னராயும் மதவகங்கார மில்லாதவராயுஞ் சீதோஷ்ணசமத்துவம்பொருந்தினவராயும் விடயாசத்தியில்லாதவராயும் ஒன்றின்மேலபேட்சியாதவராயும் ஆசாரசாமர்த்தியமுள்ளவராயுமிருக்கிறவரெவரோ அந்தப்பிரமநிஷ்டரே சிரேஷ்டமான சற்குருவாம்— அப்படிக்கொத்த சற்குருவைத்தன்னை யறிய வேண்டினவன் அந்தவஸ்து சித்திக்கும் பொருட்டு அவரிடத்

குருவிடம் விசாரித்து அந்தக்குருவினுடைய சரணாரவிந்தயுகள
னும் அனந்தங்கோடி சென்மங்களிலுமன்புடனே செய்திடைகை இல
லட்சணம் பொருந்தியிருந்த பக்தியோடே தெண்டனிட்டதன் பூ
ஜைகள் பண்ணப்பட்டுச் சந்தோஷிக்கவல்லவன்றியனாகப்பிரதி
யட்சமாகக்குருவுருவங்கொண்டு இடன் பாரிசை சேர்ந்து விட்
டுத்தத்துவத்தை நேராகப்போதித்து அந்தச் சிவசொரூபசா
ரமாகிற பஞ்சாட்சரமந்திரத்தைக் கடக்கப்பண்ணுவார் — ஆதலா
ல் சாட்சாத்சிவமே குரு, குருவே சிவம் ஆகையால் முமூட்சுக்க
ளாயிருக்கிறவர்களிந்தவிருவரையும் பேதபுத்தியாய்ப்பார்க்
கலாகாது — அப்பா! அவித்தியாரூபமான இருளைக் கிரந்தியா
கிற பாசபந்தங்கள் எவரால் விமோசனமாகின்றதோ அவரே
குருவென்று குருசத்தார்த்தத்தை யறிந்தபெரியவர்கள் சொ
ல்லுவார்கள் — ஆகலால் திருவிருத்தியனுகியும் பெருத்த
னுகியும்பிரபத்திடனுகியுமிருக்கிற குருவைத் தேடிக்கொள்ளும்,
ஸ்ரீ சற்குருகடாட்சத்தினுலுண்டாகிற சம்சாரசாகரமா
னது பசுவினுடைய குளம்படி போலவாகும். ஆகையால் மனி
விசேடயினுலுஞ் சத்தியினுலும் மந்தேசாத்திரப்படியினுலும்
வணக்கமுள்ள உத்தரவினுலும் குருவைத்திருப்தி செய்து பிரீதி
யுள்ளவராக்கிக்கொண்டு அறியவேண்டிய சொரூப நிச்சயத்தை
க்கேட்கவேண்டும்,

சிஷ்யலட்சணம்.

விணு- ஐய், கருணைக்கடலா யிருக்கிறசுவாமீ! பவமாகிறசமுத்தி
ரத்தைக்கடக்கிறதற்குத்தெரிந்த தோணிபோல விருக்
கின்றது ஐய்சுவாமீ! பாவத்தாற்பெரியவர்களும் வந்து பணிந்தபோல
விருக்கிற சற்குருவை ஆசிரயித்ததினால் சம்சாரசாகரத்தை
க்கடந்தார்கள். சென்மாந்தரத்தில் நான் செய்த அனந்தபுண்
ணியபலத்தினாலின்றைக்கு நீர் என்கண்ணுக்கெதிர் பிரத்
யட்சமானீர் அடியேனும் தேவரீருடைய கிருபைக்கு
ப்பாத்திரனானேன் — பிரம விஷ்ணுக்களாயிருக்கிற உங்கள்
பார்வையானது நேத்திரங்களுக்குச் சந்தோஷமும் சித்
த்துக்குப் பிரசன்னமும் அந்தக்கரணத்துக்கு ஆனந்தமும்
கொடுத்துமோக பாசத்தையுமறுத்து நற்கதியையும் கொ
டுக்கும் — பதினாயிரஞ் சந்திரர்கள் பதினாயிரஞ் சூரியர்கள் ப
தினாயிரமக்கினிகள் கூடியும் அந்தப்பிரகாசமாயிருக்கிற அஞ்ஞா
னமான உள்ளிருளை நீக்கமாட்டார்கள் உம்மைப்போல ஆன்
ம சொரூபத்தை யறிந்த பெரியோர்கள் ஒருக்கால் நேத்திர
ப்பார்வையினாலிந்த அஞ்ஞானமான விருளை நீக்குவார்கள் —

ஆகையால் ஆசைகளாகிற பிரவாகங்களைக்கொண்டதாயு
ம் பூரணமில்லாதிருக்கிற சென்மக்கடலின் வியாதிதுக்கங்
களாகிற சேத்துக்கள் மேலும் மேலுந்திரளாய்க் கடிக்கக்கோர
மான பத்தமித்திரகளத்திராதி பாசங்களான முதலைகள் விழு
ங்கக் காமங்களாகிற வன்காற்றலைகளால் தூக்கப்பட்டுப்போய்
ச் சுழன்றுகொண்டிருக்கிற வென்னை அநு
கிரகத்துக்காமேயத்திபிரகடிக்கிற தற்று இதுகாறு தெரு
காயுங்காணேன் — நான் இப்போது என்னையுன்னடியில் சேர்ப்
பேன்று அந்தப்புண்ணிய பலத்தினால் உங்கள் பாதாரவிந்த
தரிசனங்கண்டு பெற்றேன் இப்படிக்கொத்த ஆப்தனாயிருக்கிற
வென்னைக் கிருபைக் கண்டாரையிருந்தா லிருந்து விடுதலை
யமில்லாமல் இரட்சிக்கவேணுமெனின்,

விடை- அப்படி, சொன்ன சீடனைப்பார்த்து குருவானவர் இ
ருடையபிறால் அடிக்கடி பயப்படாதே என்று அபயப்பிர
தானம்பண்ணி காருண்ணியவேசுள்ள சீடனே அநுகிரகத்
தையும் பரமானந்தத்தையும் நித்தியத்தையும் பரப்பிரமமாயுமி
ருக்கிற வுனக்குமிருக்கிற யுபய மோக்ஷத்துக்கு இல்லை பிரமை
யிலிருக்கிறபடியின் பயமுண்டென்றெண்ணி அந்தப்பய
த்தை நானொட்டிபுமென்றுபோய் சொல்லுகிறாய் அதே
தேவன்றால் நீக்கினா போனவன் புலம்பின தெப்படி குணி
யார்த்தமோ அப்படியே நீ புலம்புவதுஞ் சத்தியப் பொய்யெ
ன்றறி.

வினா- அதேதெனின்,

விடை- ஒருவன் காடாந்தகாரமான ராத்திரிபோகிறான் தெரு
ப்பக்கத்திலே தன்னை ஒருசர்ப்பந் தீண்டிக்கொண்டு அந்தப்ப
யத்தினால் மரணாந்த சோதனையறியாமல் துக்க ஆட்சமு
யிருக்கிறவன் கண்டு அனேகவையினால் நட்டுவைத்தியனை
யை யென்னைக்கட்டுவிடத்திலெடுத்து பிழைப்பிக்கவேண்டுமென்றானே
னுபோல் நீ சொன்னதுசொல்லுமப்படியே பொய்யென்றறிமே
னும், ஒருபுருஷன் அவனாற் கூவினதில் கட்டுலக்காணுமதை
யைக்கட்டாமல் என்னைக்கடித்ததோகத்தில் விரோதமாய் என்று
சப்தித்தப்பயந்து நடுங்கித்திரும்பி வீட்டுக்குப் போனவனுக்
கெட்டபடிபாம்பென்கிறது பொய்யாய்ப்போனதோ அப்ப
டியே அஞ்ஞானமாயிருக்கிறவுனக்குச் சென்மமரண வியாதிபாதி

ச்சங்கங்களும் பொய் என்னும்பிரமையாய்ச் சொல்லப்பட்டனவாகிச்
சனங்களும் பொய் ஆனாலுன்னுடைய ஆன்மாவைநன்றாய் வி
சாரித்துப் பயத்தை விட்டொழி. அப்பா! நீ அஞ்ஞானமாயிரு
க்கிறபோது சரீராதிகளே ஆன்மசொரூபமானவனென்று சீவ
போதித்துச்சொன்னதினாலே நினைக்கிறாய் அந்த அஞ்ஞானமிருந்தகா
ரணபயத்தை விட்டுச்சுகமாயிரு.

வினா. என்றிப்படி குருவானவர் சொல்லச் சீடன் கேட்டுவாரு
ம் சுவாமீ! மோட்சலட்சுமி கடாட்சம்பொருந்தின உங்களா
ல் சகலமும் பொய்யென்று திஷ்டாந்தத்துடன் சொல்லப்
பட்டதைத்தாஷ்டாந்தத்திலே பார்க்கிறபோது பிறவிமூலமா
னதுக்கங்கள் சகல சனங்களுக்கும் பிரத்தியட்சமாய்ப் பிரசி
த்தமாய்க்காண்கின்றது — இப்படிப்பிரத்தியட்சமாய்க் கண்டப
தார்த்தமானது எப்படிப் பொய்யாய்ப் போகுங் கண்ணுக்குவி
டயமாய்க்கண்டகடத்தைனப்படி பொய்யென்றேன்னுமேவன்
நிசமாயிருக்கிற பதார்த்தத்தைப் பொய்யென்றேன்னுமதெ
ப்படிகூடும் — இது சகல சனங்களுக்கும் பிரத்தியட்சப்பி
ரமாணமே. பின்னுமென்னுடைய கியானுஞ் சென்மாதி துக்கங்களு
ண்டானதாயும் அதற்பாயசாயுமிருக்கின்றனக்குப் பிரமத்துவ
மும் நித்தியத்துவமும் பரமானந்த சொரூபத்துவமும் எப்
படிகூடும் — ஆத்துமாவானவர்? அநாத்துமாவானது? இந்த ஆத்
துமாநாத்துமாக்களுடைய லட்சணமெப்படி? அநாத்துமாவா
யிருக்கிற தேகாதிகளின்மேல் யானெனென்கிற பிரமையாகிறதெப்
படி? அஞ்ஞானமாவதேது? அந்த அஞ்ஞானத்திலுண்டான பய
மேது? அந்தப்பயத்தை விடுகிறதெப்படி? இதுவெல்லாந்
றப்பூர்வமாகக் கரதலாமலகம்போல் எனக்குத் தெரியக் கருணைக்
கடலாயிருக்கிற தேசிகர் அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்ன,

விடை - வாராய் சீடனே நீயே தன்னியன் கிருதார்த்தன் அநேகா
நீயினி உனக்குச் சிவகடாட்சம் பொருந்துவுண்டாயிருக்
கின்றது.

வினா - அதெப்படியெனின்,

விடை - பிராகிருதராயிருக்கிறபேர்கள் சஞ்சரிக்கிற மார்க்க
ங்களைவிட்டு மார்க்கத்தையறிகிற திண்பொருட்டு எத்தனம்ப
ண்ணுகிறதால் நீதன்னியன் — மேலும், சிவகடாட்சத்தி
னாலேயொழியச் சித்திவரமாட்டாது, சிவப்பிரசாதத்தையொழிய நற்புத்தி வர
மாட்டாது, சிவப்பிரசாதத்தையொழிய மோட்சஞ்சித்தியாது, சிவகடா

ட்சத்தினால்சுகர்வாமதேவாதிகள் அஞ்ஞானங்களைவிட்டுச்செ
னனமரணரூபமானசமுசாரபந்தங்களைவிட்டொழிந்தார்கள்.
அப்படிக்கொத்த இலட்சணமானது அநந்தஜெனனமெடு
த்துத்தபசுசெய்ததினாலே பிறவிவிடுகிறதற்கு ஏதுவாகவரும்.
அப்பா! லோகத்திலே மனுஷனுக்கு கோடிசென்மங்களிலே சுக
ரார்ப்பிதமாய்ச்செய்ததபசுகளினாலும் ஈசுவரப்பிரசாதத்தினா
லும்விவேகம்பிறக்கும் ஆனதால் நீயும்பரமார்த்தத்தையடைகி
றதின்பொருட்டு ஆரம்பம் பண்ணினவனானாயல்லவோ மனு
ஷனுக்கு விவேகம் வந்ததற்குப்பலன் — அப்பா! மனுஷசெ
ன்மமெடுக்கிறதிலும் புருஷசென்மமாகவும்அதிலும்பிராமண
சென்மமாகவும்அதிலும் விவேகம் பொருந்தினவனாகவுமிருக்
கிறது மோட்சத்துக்கு முக்கியபலமென்று பெரியவர்களால்
சொல்லப்பட்டிருக்கிறது — இந்தவிவேகமில்லாமற்போனால்
எல்லாம்வியர்த்தமாய்ப்போம் மோட்சமுமில்லை ஆனதால்நீ சங்
ட்சங்கைகள்நல்லதே, ஆன்மதத்துவத்தையடைகிறநிலையின்
சையுடன் கூடினவனாயிருக்கிற உனக்குச்சங்கைகளையும் ஆதிமு
தற்கொண்டு நன்றாய்த்தெரியும்படி சொல்லுகிறோம், சந்தோ
ஷத்துடன் கேட்பாயாக — அப்பா! மனுஷத்துவமுன்னிட்டுத்தி
ற்பிரமையினால்கற்பிக்கப்பட்டிருக்கின்றது அதினாற்பிறவிமுத
லானதுக்கங்களுண்டாயிற்று அதினாலுண்டானதுக்கங்களுக்க
இல்லை அந்தத்துக்கங்களெதைப்போலே அதெப்படியென்றால் தி
த்திரையாகிற மோகத்தினா லடையப்பட்டிருக்கிற சுகதுக்கங்க
ள் நித்திரை தெளிந்தெழுந்த போது ஒருவிடத்திலுமில்லா மெ
ய்யாய்க் கண்டானே — அப்படியிருக்கச் சகலஜெனங்
களாலும் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டிருக்கிற இந்தப்பிர
பஞ்சத்தைப்பொய் யென்றெப்படி சொல்லப்படு மென்று நீ
மோகத்தினால்விசாரணையில்லாமற்சொன்னசங்கை கூடாது.

வினா— அதெப்படியெனின்,

விடை— கூகையினுடைய திருஷ்டிக்குப் பிரகாசமான பகலா
னது பிரத்தியட்சமா யெப்படி யிருளாகத் தோற்றுகிற
தோ அப்படியே பிரமையினா லடையப்பட்ட பிரத்தியட்
சாதி விவகாரங்க ளெல்லாம் பிராந்தனுக்குச் சத்திய மாய்த்
தோற்றும்,

வினா— அதெப்படியெனின்,

விடை— இதுகடமென்கிறபோது அந்தப்பேருடனே பிரத்திய

ட்சமாகக்கண்ணுக்குரூபமாய்க்காணுகிறது, பரமார்த்தமா ய் விசாரிக்கும்போது அந்தக்கடமென்கிற நாமமில்லாமல் கடமாவதுக்குவிலட்சணமான மிருத்திகையாயிருக்கிறது. இதுவன்றியும் சூரியனைப்பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறவர்களு டையகண்ணுக்குச்சூரியன் ஒருசாணளவாய்க் காண்பிக்கிறது, சாஸ் திரத்திலேயோவென்றால் லட்சம்யோசனை விஸ்தாரமுள்ளதாய்ச் சொல்லுகின்றது இப்படி பிரத்தியட்சப் பிரமாணத்துக்கும் சாஸ்திரப்பிரமாணத்துக்கும் சரிபார்க்கிறபோது பிரத்தியட் சப்பிரமாணந் தள்ளுபட்டதால் இப்போது நீசொன்ன பிரத் தியட்சப்பிரமாணம் கூடாது — ஆனதினாலிவ்விடத்தில் இந்தவே தாதிப்பிரயத்தனங்களெல்லாம்பிராந்தியினால் காணப்பட்டது. இந்தப்பொய்யைச்சத்தியமென்றெண்ணுகிறபிரமையைநீத்துச்சொ ரூபமானபரப்பிரமம் நீயானதால் உனக்குப் பின்னமான வஸ்து வேறொன்றில்லையென்றபுத்தியினால் நன்றாய் விசாரித்தறி — லோகாந்தரங்களிலும் புராணாந்தரங்களிலும் இதிகாசங்க ளிலும் கண்டமாவாந்தரங்களிலும் சாஸ்திராந்தரங்களிலும்பி ரமத்தைக்காணக்கூடாது அப்படிக்கொத்த பிரமத்தை நன்று ய் விசாரிக்கிறபோது தான் பிரமமாவன் — அப்பா! தனக்குள் ளிருக்கிற தத்துவத்தையறியாத மூடனுயிருக்கிறவன் சாஸ்திரங் களைப்பார்த்துச்சடமாகிறான்.

வினா— அதெப்படியெனின்,

விடை— இடையனொருவன் கக்கத்தில் குட்டியையிடுக்கிக்கொண் டு கூடத்தைப்பார்க்கிறபோது அந்தக்கூடத்தில் குட்டியி ருப்பதாய்க்கண்டு தானெண்ணின குட்டியானது கூடத்தில் விழுந்ததென்று தானுங்கூடவிழுந்தப்போலாகும் — மேலும், ஆத்மாவாயிருக்கிறவர்கள் தன்னைப்பரமாத்மாவென்றும் அந்தப்ப ரமாத்மாவேநானென்றுமெண்ணியிருக்க அஞ்ஞானிகளாயிரு க்கிறபேர்கள் வெளியிலிருக்கிற பஞ்சகோசங்களிலும் ஆத்து மாவிருக்கிறதென்று தேடுகிறார்கள் — அப்படியே நீயும்பரமா ர்த்தமாயிருக்கிற வஸ்துநிச்சயத்தைமறந்து அந்தவஸ்து வி விடத்தில் அவஸ்துவான தேகாதிகர்மங்களை யாரோபித்துக் கொண்டு வியர்த்தமாகக்கிலேசிக்கின்றாயேயல்லாமல் வேறொன்றில் லை — ஆனதால் ஆத்துமானாத்துமவிவேகத்தையுணர்த்துச்சொல் லுகிறேன் அன்புடனே கேள் இதைச்சிரவணப்படுத்துகிறதி லுனக்கு அனாத்மாவாகிய தேகங்களைவிட்டொழிய வாவென்று குரு வானவர் சீடனைத்தன்வயப்படுத்திக் கொண்டு கருணையினாலெ

க்கிரமமான அத்தியாரோப அபவாதயுக்தியினாலே குருவும் நிஷ்
ட்பிரபஞ்சமான பிரமத்தைச் சீஷன் அறிந்தவனாய் சாதனத்தில்
கண்டு முடியாப்போதிக்கத் தொடங்கினார்.

குருவுபதேசம்.

வினா - ஆத்மாவுக்கு அவித்தையால் வந்ததென்னெனில்,

விடை - வாராயிச்சீடனே வஸ்துவானபரப் பிரமத்தினிடத்தில் அவஸ்துவான நாமரூபமுதலியவற்றைப் பிரபஞ்சத்தைக் கற்பிக்கிறதெதுவோ அதுவே அத்தியாசமென்று சொல்லப்படும்,

வினா - அதெப்படியெனின்,

விடை - பாம்பல்லாதிருக்கிற பழுதையினிடத்தில் பாம்பை யாரோபிக்கிறது போலச் சச்சிதானந்தலட்சணமான பரப்பிரமமே தன்னிடத்திலே நாமரூபாதிப் பிரபஞ்சத்தை அஞ்ஞானத்தினாலே கற்பித்தது போலக் கற்பிக்கப்பட்டது.

வினா - இப்படிக் கற்பிக்கப்பட்டதற்குக் காரணமேதெனின்.

விடை - அஞ்ஞானமே காரணம் அந்த அஞ்ஞானம் சத்தினுடையதாகி யமாயிருந்தாலும் லட்சணமல்ல அது ஞானத்தை மறைத்துப்போய வது கண்டிருப்பதால் அவ்வளவு மெய்யிது மேடிமையார்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினா - அதெப்படியெனின்,

விடை - சுத்தியினிடத்தில் வெள்ளி யாரோபமானதைத் திரும்பிவிசாரிக்குமளவில் பின்புறங்கண்டுப்ப புறக்கோணமாயிருக்கிறதுங் கண்டு இதுசிப்பியென்று நிச்சயத்தபின்பு வெள்ளி யுருவப்படியாதிக்கப்பட்டதோ அப்படியே குருயுக்தி அநுபவத்தினால் பிரமத்தைக் கண்டபின்பு அவஸ்துவான அஞ்ஞானம் மறைந்துபோம் — மேலும், திரிகாலங்களிலேயுஞ் சத்திச்சுழியில்லாமல் அதிலாரோபிதமான வெள்ளியுருவுக்கெப்படி அனித்தியத்துவங்கண்டதோ அப்படியே அஞ்ஞானம் மறைந்துபோகப்பிரமம் மூன்றுகாலத்திலும் அழியாமல் நித்தியத்துவமாயிருக்கும்,

வினா - அப்படிக்கொத்த அஞ்ஞானமான அத்தியாசத்துக்குக் காரணமேதெனின்,

விடை - சத்தோவென்றால் சத்துமல்ல, அசத்தோவென்றால் அ

சத்துமல்ல, அசத்தோவென்றால் அசத்துமல்ல, ஆனதால் அ
நிர்வசனியமென்றுந் திரிகுணங்களோடே பொருந்தினதென்று
ம் வஸ்துத்துவத்தையறிந்ததினால் வாதிக்கப்பட்டுப் போ
மென்றும் அபாவலட்சணமென்றுஞ்சொல்லப்படும் — அவ்
வஞ்ஞானம் பொய்யான கூட்டுறவினால் பிரமத்தினிடத்தில்
ஆசிரயித்துக்கொண்டிருக்கிறது.

வி-ரு - பிரமத்தினிடத்தில் அஞ்ஞானமாசிரயித்துக் கொண்டி
ருந்தால் ஆசிரயதோஷமுண்டாமோவெனின்,

விடை - சுத்தியில் வெள்ளியாசிரயித்திருந்ததினால் சுத்திக்கெ
ப்படியாசிரயதோஷம் வரவில்லையோ அப்படியே பிரமத்
துக்குமாசிரயதோஷமில்லை.

வி-ரு - இப்படிச்சொன்னால் பிரமமென்றுமஞ்ஞானமென்றுமிர
ண்டுவிதமாயிற்றேயெனின்,

விடை - அவ்வஞ்ஞானத்துக்குப் பிரமத்தைத்தவிரச் சுதா சத்
தையில்லாதபடியினால் இரண்டாகமாட்டாது.

வி-ரு - அஞ்ஞானமுண்டென்கிறதிலடையாளமேதெனின்,

விடை - சராசரமானசெகத்திருக்கிறதும் வேதசாத்திரங்களிரு
க்கிறதும் நானஞ்ஞானி யென்கின்றவனுபவமிருக்கிறதும் அ
டையாளம் — ஆனதால் இந்த அஞ்ஞானத்தையே மூலப்பிர
கிருதியென்றும் சத்தியென்றும் அவித்தையென்றுஞ் சொல்
லப்படும் அது சத்துமல்ல, சத்தைத்தவிரப் பின்னமுமல்ல
அபின்னமுமல்ல.

வி-ரு - ஆனால், தீபமும்பிரகாசமுமான சாவயவமோவெனின்,

விடை - சாவயவமுமல்ல.

வி-ரு - வித்துமுளையுமான நிரவயவமோவெனின்,

விடை - நிரவயவமுமல்ல ஆனதால் அநிர்வசனியமென்றே பெ
ரியவர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது — இப்படிக் கொ
த்தவஞ்ஞானத்தைச் சமஷ்டிவியஷ்டியென்றிரண்டு விதமா
கச்சொல்லப்படும்.

சமஷ்டி.

வி-ரு - அதேதெனின்,

விடை - நானாவிதமாய்த்தோற்றப்பட்ட அஞ்ஞானங்களொன்

ருய்க்கூட்டிச் சமட்டியென்றும் தனித்தனியே பிரிப்பது வி
யட்டியென்றுஞ் சொல்லப்படும்.

வினா - சமட்டியாவதெப்படியெனின்,

விடை - நானாவிதமாய்த் தோற்றப்பட்டிருக்கிற மரங்களெல்லா
ம் ஒன்றாய்க்கூட்டி ஒரு தோப்பென்பதுபோல, நானாவிதமான
அஞ்ஞானங்களை அபேதமாய் ஒன்றாய்க்கூட்டுகிறதே சமட்டி யெ
னப்படும் - இந்தச் சமட்டி அஞ்ஞானமானது அநந்த சாத்துவிகுண
ம் பொருந்திச் சித்தி விசிட்டமானதால் மாயையென்று சொல்லப்படு
ம், அந்த மாயையில் பிரதிவிம்பித்த சைதன்னியஞ் சர்வஞ்ஞத்து
வாதி குணங்களுஞ் சிருஷ்டிஸ்திதிசம்மாரமும் பொருந்தினதா
ல் அவ்வியாகிருதமென்றும் அவ்வியத்தமென்றும் ஈசுரனென்
றுஞ் சொல்லப்படும் - இந்த மாயாப்பிரதிவிம்பமான ஈசுரனுக்
குச் சர்வசத்தி குணங்களுஞ் சகல அஞ்ஞானங்களை விளங்கச்செய்
கிறதுஞ் சுதந்தரத்துவமுஞ் சத்திய சங்கற்பத்துவமுஞ் சத்தியகா
மத்துவமுமிருக்கையால் ஈசுவரனென்றும் - இந்த ஈசுவரனுக்
குச் சர்வஞ்ஞத்துவமும் ஈசுரத்துவமும் சத்திய சங்கற்பத்துவ
முஞ் சுதந்தரத்துவமுமுண்டாகிறதற்குக் காரணமான சுத்தசா
த்துவிகம் பொருந்தின சமட்டி அஞ்ஞானமாகிய மாயையே யவ
னுக்குக் காரண சரீரமென்றும் பெரியவர்களாற் சொல்லப்படு
ம் - இந்த மாயையானது, ஈசுரனுக்குப் பிரியமான ஆநந்தம் பொரு
ந்தச்செய்து சத்தியைப் புறையானது மறைத்ததுபோல ஆவர
ணமாக ஈசுரசொரூபத்தை மறைக்கையால் ஆநந்தமயகோச
மென்றும் - இப்படிப்பட்ட மாயைதானே ஈசுரனுக்குச் சர்வ
சங்காரத்துவ காரணமான சுழுத்திஸ்தானமென்றும் பிராகிரு
தப்பிரளயமென்றுஞ் சொல்லப்படும் - இந்த மாயையாகிய அ
ஞ்ஞானத்தை வியட்டிப் பிராயமாய் விசாரிக்கும்போது
அனேகவிதமாய்ப் பின்னமாயிற்று, அந்த அஞ்ஞான விருத்திக
ளேயென்று கொண்டு குணவிலட்சணமானதால் நானாவித
மென்று சொல்லப்படும்.

வியட்டி.

வினா - அதெப்படியெனின்,

விடை - வனத்தைத் தனித்தனி வியட்டியாய் விசாரிக்கும்போது மரங்களனே
கவிதமாவதெப்படியோ அப்படியே அஞ்ஞானம் வியட்டியி
னால் அனேகவிதமாகவிருக்கும் - இந்தச் சமட்டி வியட்டிகளி
ரண்டுங் குணத்திரயங்களில் வியாபித்திருப்பதால் விருத்
தி சமட்டி வியட்டியென்கிற பேருண்டாயிற்று - இவ்வியட்

டியஞ்ஞானமானது மலினசத்துவப் பிரதானமாகையாலும் இ
ராசதாமதங்களிடமாய்ப் பொருந்தியிருப்பதாலும் நிக்ருஷ்
டமாய்ப் பிரத்தியகாத்மாவுக்குபாதியாயிருந்து இந்தமலினசத்து
வப் பிரதானமான வியஷ்டியஞ்ஞானத்துக்கு அதிஷ்டானமான
சைதன்னியமே, பிரத்யகான்மா இந்தவித்தையில் பிரதிபி
ம்பித்த சைதன்னியமே பிராஞ்ஞனென்று சொல்லப்படும் —
இந்தவித்தையானது பிராஞ்ஞனுக்கு மிகவும் ஆனந்தத்தைக்
கொடுத்து, கத்தியையுறைமறைத்தது போலத்தனைக் கவிழ்ந்திட்டான
மான பிரத்தியகானந்தமயமானதுவிருத்தியானந்தமயகோ
சமென்றும் வியஷ்டியிலுள்ள சூட்சமங்களுக்குக் காரணமான
தால் காரணசரீரமென்றும் — இந்தப் பிராஞ்ஞனுக்குத் தனியே
ந்திரியங்கள் வியாபாரங்களை யொழித்து ஆனந்தத்தைக் கொ
டுப்பதாலிதற்குச் சுழுத்தியவஸ்தையென்று சொல்லப்படும்.

வினா - இதற்கு உபமையெதெனின்,

விடை - பலவிருட்சங்கள் நாலு சமமாய் நிற்கின்றபடியினாலே
ன் ஒன்றுபடியேனென்று நினைக்கப்படும் நெருங்கியிருந்த
போது அவைகளுடைய சமஷ்டியைச் சொல்லுகிறதற்கு வனமெ
ன்பது நிச்சயம் — மேலும், அவ்வவ் விருட்சங்கள் போலிருக்கிற
சமஷ்டி வியஷ்டிக்கு ஒரு சாதியல்லது ஒன்றுபடியும் பேதமி
ல்லாமலிருப்பது போல அப்படியேயிந்தப் பிரதிவிம்பி
த்த சீவர்களுக்கும் அபேதமே.

வினா - அதெப்படியெனின்,

விடை - சமுத்திரஞ்சலத்தையுமலையையுமொன்றாய்ப் பார்க்கி
றபோது அதில் பிரதிவிம்பித்த சூரியனும் ஒன்றாகிறாப்போல
டிதோற்றுகிறதோ, அப்படியேயுபாதியான சமஷ்டி வி
யஷ்டி ஞானபிம்பமும் பேதமாகிறபோது அதில் பிரதிவிம்பி
த்த சீவர்களுக்கும் அபேதந்தவிரப் பேதமில்லை — மேலும் இ
ந்த வியஷ்டி சமஷ்டியான அஞ்ஞானங்களுக்கும் அதில் பிரதிவி
ம்பித்த ஆபாசவிராண்டிப் பருக்கும் ஆதாரமான சுத்தசைதன்
னியமே துரீயமென்றும், அந்தத் துரியவஸ்தை
களான குணங்களோடே கலந்து பிரியாமலிருக்கும்போது மகாவா
க்கியத்துக்கு வாச்சியார்த்தமென்றும், பிரிந்தபோது லட்சியா
ர்த்தமென்றுஞ் சொல்லப்படும் — இதுவல்லாமலேயே பாதி
க்கரண நுகரான் அனேகசந்திசகலத்தையும் கூடக்கொண்டு பார்
வையிருக்கும் சராசரமான செகத்தையும் சிருஷ்டிக்கிறார் ஆதலால்

ஆன்மாவாகியும் அந்நுவையாகியும் மேற்சொன்னவிதத்திலே வைபவத்தாலேயிருக்கிற வராகியும் சிருட்டியாதிசாதனங்கள் தன்னிடத்திலேயாகியுமிருக்கிற ஈசுவரன் தனக்குத்தானே யேற்பட்டதாயிருந்து இச்சகத்தைச் சிருட்டித்தானென்றுசங்கற்பித்துக்கொண்டான்.

வினா — அதெதெனின்,

விடை — பிரபுவான ஆன்மாவிருக்கையாரன்றானே இந்தச்சகத்துக்கு வுபாதானகாரணமும் நிமித்தகாரணமுமாயிருந்து இந்தத்தாபரசங்கமமான பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்துச் சங்காரம் பண்ணுகிறார்.

வினா — அதெப்படியெனின்,

விடை — இந்தச் செகத்தினுடைய சிருஷ்டிக்குத்தானே முக்கியமாயிருப்பதால் நிமித்தகாரணமாகவும் தம்மையாசிரயித்த வுபாதிப்பிரதானமாயமாயையிருக்க உபாதானகாரணமாகவுமிருந்தது ஆன்மாவன்றி வேறில்லை.

வினா — அப்படியானாலிருக்கிற ஆன்மாவுக்கு நிமித்தகாரணமாகவுமுபாதான காரணமாகவுங்கூடுமோ வெனின்,

விடை — பட்டுநூற்பூச்சியானது தான்பிரதானத்தினால் நிமித்தகாரணமும் சரீரப்பிரதானத்தினாலுபாதான காரணமுமாயெப்படியிருந்ததோ வப்படியேபோலவே யீசுவரனுக்கு நிமித்தகாரணமுமுபாதானகாரணமுங்கூடுமென்றறி, அதற்குமேல் சத்த தாமத குணம் பொருந்தியவிகாரசத்தியோடேகூடின ஆன்மாவினிடத்தில் நின்று ஆகாசம் பிறந்தது அவ்வாகாசத்தில் வாயுபிறந்தது அவ்வாயுவில் அக்கினிபிறந்தது அவ்வக்கினியில் அப்புபிறந்தது அவ்வப்புவில் பிருதிவி பிறந்தது — இப்படித்தாமச விகாரமான சத்தியிலுண்டாக்கப்பட்ட பஞ்சபூதங்களில் ஒருபூதமாகிலுமசையமாட்டாமல் நிற்கில்லாமற் செடமாயிருப்பதுகண்டதால் அந்தச்சத்திக்குத்தாமதப்பிரதானமென்பதிற்சமுசயமில்லை, ஆனதால் செடமாயிருக்கிற பஞ்சபூதங்களைச், சிருஷ்டித்ததாமதசத்தியுஞ் செடமே, காரணத்திலிருந்த குணத்தைக் காரியத்திலுஞ் செடமாகக் கண்டதால் காரணமுங் காரியம்போற் செடமென்றறி — இப்படியுண்டானபஞ்சபூதங்கள் சூட்சுமமாயிருப்பதால் சூட்சும பூதங்களென்றும் தன்மாத்திரைகளென்றுஞ்சொல்லப்படும், இந்தத்தன்

மாத்திரைகளோடு கைத்தசைதன்னியத்துக்குச் சதாசிவனென்று மகேசுவரனென்று மூருத்திரனென்றும் விஷ்ணுவென்றும் பிரமாவென்றும் பேராயிருக்கும் இப்படிக்கொத்த சூட்சும பூதங்களில் நின்றும் சூட்சுமதேகங்களுண்டாயின.

வினா — அதேதெனின்,

விடை — இந்தச் சூட்சும பூதங்களைந்தும் ஒன்றோடொன்று கலந்து ஸ்தூலபூதங்களாகிறதற்கு முன் அபஞ்சீகிருத பூதங்களியமாகப் பதினேழுதத்துவத்தைப் பொருந்தினதே சூட்சுமதேகமென்றும், சூக்ஷுமசாரமானதாலி லிங்கசரீரமென்றும் ஆன்மாவினுடைய போகத்துக்குச் சாதனமானதால் போகசாதனமென்றுஞ் சொல்லப்படும்.

வினா — இந்த லிங்கசரீரமாகிய பதினேழுதத்துவமேதெனின்,

விடை — சுரோத்திராதிகளான ஞானேந்திரியங்களைந்தும் வாக்காதியான கர்மேந்திரியங்களைந்தும் பிராணாதிவாயுவைந்தும மனம்புத்தியிரண்டும் ஆகப்பதினேழுதத்துவமுங் கூடினது லிங்கசரீரமென்று சொல்லப்படும்.

வினா — இந்தப் பதினேழு தத்துவத்தினுடைய லட்சணமேதெனின்.

விடை — சுரோத்திரத் தொக்குச்சட்சிங்குவையாக் கிராணமென்னப்பட்ட ஞானேந்திரியங்களைந்தும் தனித்தனியே நின்று சூட்சுமவாகாசாதி பூதங்களோடே சத்துவகுணங்களினின்றும் பிரகாசம் பொருந்தித் தனித்தனியே யுண்டாயின — இந்தச் சூட்சுமாகாசாதிபஞ்சபூதங்களில் கலந்திருக்குஞ் சாத்திகாம்சங்களொன்றுக்கொன்று வைத்தொருமித்துச் சகலத்துக்குங்காரணமான அந்தக்கரணம் பிறந்தது — இப்படி பிறந்த ஞானேந்திரியங்களு மந்தக்கரணமும் பிரகாசசொரூபமானதால் சாத்திவிகங்களென்று சொல்லப்படும் அந்தச்சாத்துவிகமுஞ் சொச்சதிரவியமானதாலந்தக்கரண ஞானேந்திரியங்களும் பிரகாச சொரூபமென்பதிற் சந்தேகமில்லை — இப்படிச்சொன்ன அந்தக்கரணம் விருத்திபேதங்களினால் நாலுவிதமாய் மனம் புத்தி சித்தமகங்காரங்களென்று சொல்லப்படும்.

வினா — அதேதெனின்,

விடை — சங்கற்ப பத்தினுள் மனமென்றும் நிச்சயிக்கிறதினுல்

த்தியென்றுஞ் சிந்தனையிலுஞ் சித்தமென்றும் அபிமானத்திலஹங்காரமென்றுஞ்சொல்லப்படும் — ஆதலாற் பஞ்சேந்த்ரியத்தோடே கூடின லிங்கசரீரமென்கிறதின் பொருட்பிமேற்படுத்துகிறதிற் சித்தாஹங்காரபாவங்களையன்றுயறி.

வினா- அதேதெனின்,

விடை- ஒருவனே சங்கற்பரூபத்தைச் சிந்தனைபுஞ்செய்வதால்மனதிலிடத்திற் சித்தனென்றும் புத்திக்குத் தோதிகளிடத்தில் நானென்கிறவபிமானத்திடத்தனாயிருப்பதாற் புத்தியிலகங்காரதன்மையும்—புத்திக்குக்கர்த்தத்துவமும் புத்தியிலேலேபட்டஇந்திரியங்களுக்குக் காரணத்துவமுஞ் சித்திக்குது—இந்தப்புத்தியானது, ஞானேந்திரியங்களுடன் கூடியதாலும் பிரயும் அறிகிறதே பிரதானமானதாலும் ஆன்மாவைமறைப்பதாலும் விஞ்ஞானசரீரமாய் விஞ்ஞானமயகோசமென்று சொல்லப்படும் — இந்தக்கர்த்தத்துவலட்சணம் பொருந்தின அகங்காரவிருத்தியுடன் கூடினவன் சகலசமுசாரங்களையும் வகித்துக்கொண்டிருக்கிறவிஞ்ஞானமயனுவன்.

வினா- அதேதெனின்,

விடை- நானென்கிற ஞானரூபத்தைக் கர்த்திருத்துவமாகிவிடத்திலும்கிரகாதிவிடத்திலும்அபிமானத்தைவைத்திருப்பதால் விஞ்ஞானமயனென்றுஞ் சீவனென்றும் பருடனென்றுஞ் சொல்லப்படும் ஆனதாலவனே கர்த்தா அவனே போக்தா அவனேதுக்கியென்றறி—அந்தச் சீவன் தன்னுடைய பூர்வவாசனைகளோடே கூடியேயலப்பட்டவனாய்த்தினந்தோறும் புண்ணியபாபரூபமான கன்மங்களைச்செய்து அந்தக் கன்மங்களினால் வரப்பட்ட சுகதுக்கங்களையிகலோகபரலோகங்களிலும் புசிக்கின்றான் — இன்னம் அந்தச் சீவனானவனுயிசங்கோடி சென்மங்களில் பிறந்திறந்தும் போகிறதாயிருக்கப்பட்டசமுசாரமண்டலத்திற் கிடந்துசஞ்சரிக்கின்றான்-அப்படிப்பட்ட சங்கற்ப ரூபமான மனதுஞானேந்திரியத்துடன் கூடினால்மனோமயகோசமென்றுசொல்லப்படும்.

வினா- அதேதெனின்,

விடை- எதுமனோமயகோசமென்று சொல்லப்படுகிறதோ அதில் மனதே பிரபலமானதால் அதனை மனோமயகோசமென்றுசொல்லப்படும் — சுகலிங்கசேர்த்தகைங்கரியமாக்கருமோதாதிக

னெல்லாமித்தமனோமயகோசத்தின் தொழில்களாகும்.

வினா- அதேதெனின்,

விடை- மனதினாலெத்தையுமெண்ணப்படுகின்றன. மனதினால் பலத்தை யிச்சிக்கின்றன். மனதினால் யாதொருகாரியப்பிரயத்தனைப்பண்ணுகிறன். மனதினால் சகலதொழிலுஞ்செய்கிறன். மனதினால் சகல போகங்களைப் பொசிக்கிறன். ஆகையால் மனமே சகலத்துக்குங்காரணமென்றறி — இந்தச் சகலவிகாரங்களுக்கும் ஏதுவானமனமே அந்தர் பாகியங்களிலிருக்கிற விஷயங்களை யெல்லாமறியும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- கேட்கிறதுமனதினால், பார்க்கிறது மனதினால், சத்தத்தை அறிகிறது மனதினால், வசனிக்கிறது மனதினால், பரிசத்தை அறிகிறதுமனதினால், சகலதொழில்களுமனதினால், புருடனுக்குப்பந்தமோட்சமுமனதினால், ஆத்மரூபமும் அநாத்மரூபமனதினாலென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை- மனோநாதியினால் மோட்சரூபமேனும் வினைத்தினாற்பந்தரூபம் விவேகத்தினால் அர்த்தரூபமேனு - அவிவேகத்தினால் அனர்த்தரூபமாகும் — இந்தமனம், இராசதகுணத்துடன் கூடினதால்விடய சொரூபமாகாயக்குமோதாநிலை இறசத்துருக்களாலெடைபட்டுச் சஞ்சலமாய் ஆட்கொமார்த்த மயிருக்கிற சொரூபத்தை யறியமாட்டாமை மிகவும் பிரயத்தனக் கெடும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- பெருங்காற்றில் வைத்ததீபமானது சஞ்சலித்து அதின்பிரகாசமான தன்மையெப்படியணைந்துபோகுமோ அப்படியேயென்றறி — ஆனதால், முமுட்சுவானவன் பிறவியாகிற பெந்தத்தையொழிகிறதின்பொருட்டு இராசதாமசங்களையுமதின்தொழில்களையும் விட்டொழித்து சித்தத்தை சத்துவத்துடன் கூட்டிப்பரிசுத்தமாக்கிப் பிரயத்தனமாய் நிர்விடயம் பண்ணவேணும்.

வினா- அதேதெனின்,

விடை- மனோநிர்மலமில்லாதது புருடனுக்குப்பெந்தமனை

து நிருமலமானது பந்தத்துக்குமுத்தியானதால் மனது நிரும லமாம்பொருட்டு விவேகியானவன் சதா மனோநிக்கிரகம் பண் ணவேணும்—முன்சொல்லப்பட்ட தனித்தனியாயிருந்த சூட்ச மபஞ்சபூதங்களின் இராசதாங்காரங்கலந்ததில் நின்று வாக்குபாத ம்பாணிபாயுருவுபஸ்தமாகிற கன்மேந்திரியங்களுண்டாயின.

வினா- அதெப்படியெனின்,

விடை- ரசோகுணங் கலந்தவாகாசத்தில் வாக்கிந்திரியமும் அவ்வக்கினியிற் பாதவிந்திரியமும் அவ்வப்புவில் பாயுவிந்திரியமும் அப்பிருதிவியிலுபஸ்தேந்திரியமுமுண்டாயின—அந்தச் சூட்சமபஞ்சபூதங்களிற் தனித்தனியேகலந்த ரசோகுணங்களைந்தும் ஒன்றுக்கொன்று கலந்து சமட்டியாய்க்கூடி யொருமித்ததினால் கிரியாரூபமான பிராணவாயுக்களுண்டாயின, இந்தப் பிராணாதி பஞ்சவாயுக்களை வேவுகிறதேவதைகள் விசிட்டமென்றும் விசுவகர்த்தாவென்றும் விசுவயோனியென்றும் சமட்டியென்றுஞ் சொல்லப்படும்.

வினா- இந்தப்பிராணாதிவாயுக்களுடைய லட்சணமேதெனின்,

விடை-ஊர்த்துமுகமாய்ப்புறப்பட்டதாற் பிராணனென்றும் அதோமுகமாய்ப்புறப்பட்டதினால் அபானனென்றும் உள்ளே வியாபகமாயிருப்பதால் வியானனென்றும் போசிக்கிறபதார்த்தங்களைக் கண்டத்திலிருந்து இறக்குகிறதினால் உதானனென்றும் அப்படியிறங்கின அன்னசாரத்தை நாடிகள்தோறுங் கலக்கச்செய்கிறதினாற் சமானனென்றுஞ் சொல்லப்படும்—இதல்லாமலும் உபவாயுக்கள் அஞ்சுண்டு.

வினா- அவேதெனின்,

விடை- விக்கல் பிறப்பிக்கிறது நாகனென்றும் கண்ணை இமைத்து விழிப்பிக்கிறது கூர்மனென்றும் தும்மலுண்டுபண்ணுகிறது கிருகரனென்றும் கொட்டாவியுண்டாக்குகிறது தேவதத்தனென்றுஞ் சரீரத்தைப்படுக்கப் பண்ணுகிறது தனஞ்செயனென்றுஞ் சொல்லப்படும்—இந்தவுபவாயுக்களுஞ்சுமுன்சொன்ன பிராணாதிபஞ்சகத்திலொடுக்கம். இந்தப்பிராணாதிகன்மேந்திரியங்கள் கிரியைசெய்கிறதே பிரதானமானதால் இவைகளை ரசோகுண அம்சத்திற் பிறந்ததென்று பெரியோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது—இந்தப்பிராணசத்தியானது கிரியை

பண்ணுகிறதே பிராணனாயிருக்குமென்றும் தாமதசாத்திரமா
னது ஜடரூபமாயிருக்குமென்றும் சாத்திகசத்தியான ஆகா
சசொரூபமென்றும் பெரியோர்களாற் சொல்லப்படும் — இந்த
ப்பிராணபஞ்சகங்களுங் கர்மேந்திரியமுங் கூடியதால் தேக
ஞ்சேருட்டிக்கிற தற்சம்பாக்கியமானதினாலும் பிராணமய கோச
மென்றும், இந்தக் கன்மேந்திரியங்களினாலேதான் புண்ணிய
பாபாதிகன்மங்களைச் செய்யப்படுகிறதால் இதுவே பிராணம
யகோசகாரியமென்றுஞ் சொல்லப்படும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- வாயுவினாற் சலிக்கப்பட்டவிருட்சமானது நானாரூப
மாய்ச் சேட்டிக்கும் அந்தவாயுவில்லாதபோது அசையாம
லிருக்கும் அதுபோலப் பிராணகன்மேந்திரியங்களினால் தே
கமானது இயக்கப்பட்டு விசித்திரங்களான நானாவிதகன்மங்க
ளுஞ்செய்துகொள்ளுகிறது அந்தப்பிராணகன்மேந்திரியங்
களில்லாவிட்டாற் சேட்டையற்றிருக்கும் புத்தியவின்று ஞ
மயகோசமென்னுஞ் சேரச்சிந்தப் பிராணமயகோசமுங்கூடி
ஆன்மாவுக்குச் சூக்ஷமமாயிருந்திருப்பதாலும் ஆன்மப்பிரதி
விம்பத்துக்குப் போக்கியமானதாலும் இத்தேகசரீரமென்று
ந் தூலத்தைக்காட்டிலுஞ் சூக்ஷமமாயிருப்பதால் சூக்ஷமசரீர
மென்றுஞ் சொல்லுவார்கள் — இப்படி சமஷ்டிசரீரங்களோ
டுமொன்றாய்க் கூடினதால் மரக்கூட்டத்தை வனமென்பது
போற்சமஷ்டி சூக்ஷமசரீரமென்றும், இந்தச்சமஷ்டி சூக்ஷ
மசரீரத்துடன் கலந்து பிரதிவிம்பமான சைதன்னியத்தை யிரணிய
கற்பனென்றுஞ் சூத்திராத்மாவென்றும் மகாப்பிராணனெ
ன்றும் பெரியவர்களாற் சொல்லப்படும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- சொர்ணம்போற் பிரகாசமாயிருக்கிற புத்திக்குள்ளே
ஆன்மா, பிரதிவிம்பித்துச் சொர்ணம்போல விளங்குவதாலி
ரணியகெற்பனென்றும் — சமஷ்டிசரீரங்களிலுமணி
யில் நூல் கோர்க்கப்பட்டிருந்ததுபோல ஆன்மாவியாபிக்கப்ப
ட்டிருப்பதால் சூத்திராத்மாவென்றும் சகலசரீரங்களையுஞ் சே
ருட்டிக்கப்பண்ணுகிறதால் மகாப்பிராணனென்றுஞ் சொல்ல
ப்படும் — இப்படிக்கொத்த சமஷ்டி சூக்ஷமசரீரமானது தனி
த்தனியாய்ப் பிறந்ததால் வியஷ்டிசூக்ஷமசரீரமென்றும் இந்த
வியஷ்டிசூக்ஷமசரீரங்களிற் சிதாபாசனாய்ப் பிரதிவிம்பித்த சை

தன்னியத்துக்குத் தைசதனென்றும் பெரியவர்கள் சொல்லு வார்கள்.

வினா— அதெப்படியெனின்,

விடை— தேஜோமயமான அந்தக்கரண உபாதியோடே கூடி னதால் தைசதனென்றும் தூலத்தைக் காட்டிலுஞ் சூட்சும மானதால் வியட்டி சூட்சுமசரீரமென்றும், இந்தச் சூட்ச மசரீரமானது சாக்கிரத்தினுடைய வாசனைகளைச் சூட்சுமமாய்க் க்கொண்டிருந்தால் சொப்பனவஸ்தையென்றும் சிவனுடைய அந் தச்சொப்பனத்திற் செய்கிறகிரிகைகளைச் சூட்சுமமாயறிகிற தால் பிராதிபாதிகனென்று சொல்லப்படும் — இந்தத்தைசத னென்பவன் சொப்பனத்தில் சாக்கிரகாலத்திலநுபவிக்கப்பட்ட வா சனைகளைச் சூட்சுமபுத்திவிருத்திகளினாற் சூட்சுமவிஷயங்களை ப்புசிக்கிறான் — இந்தச்சமட்டி சூட்சுமசரீரங்களும் வியட் டி சூட்சுமசரீரங்களுமென் சொன்னகாரணசரீரத்தைப்போலச் சாதிவஸ்துவமைபோதநால் அபேதமென்றறி — இந்தச்சூட்சுமவி யட்டிசமட்டியிரண்டும் ஒன்றனாவினை அபிமானித்துக்குத் தானிமாத்திரைகளிரண்டுஞ்சூடின காரணசரீர; அபிமா னிடாகியபிராக்ஞனுக்கப்படிப்போலே அப்படியே அ பேதமென்றும், இந்தப்படிசூட்சுமப்பிரபஞ்சத்தினுடைய லக் ஷணஞ் சாஸ்திரசம்மதமாய்ச் சொல்லப்பட்டது — இனிஸ்தூ லப்பிரபஞ்சத்தினுடைய ருதிசொல்லுகிறோம்.

ஸ்தூலப்பிரபஞ்சம்.

வினா— அதெப்படியெனின்,

விடை— முன் சூட்சுமமாயிருந்த ஆகாசாதி பஞ்ச பூதங்க ளொன்றுக்கொன்று பஞ்சீகிருதமாய்க்கலந்து தூலபூதங்க ளாயின.

வினா— அதெங்ஙனெனின்,

விடை— ஆகாசாதிபூதங்களைந்தும் ஒவ்வொன்றிரண்டாய்ப்பிரி ந்தன, அதில்தன்னுடைய பாகங்கிசம்படாதிருப்பவ ந்துவைத்துப் பாதியைந்த பொவ்வொன்று நான்குகப்பி ரிந்து சரியாங்கிசம் நீங்கலாகிற நாலுபூதங்களிலுமொவ்வொன் றொன்று அரைக்கால் பங்காய்ச்சேர்ந்தன — இப்படிப்பிரிந்த ஆ காசாதியைந்தும் தன்னுடைய பாகங்கிசமான பாதியுமா றநான்காய்ப்பிரிந்த பூதங்களின் பாதியும் ஒருமித்துக்கூடி ஒவ்வொன்று ஐந்துபாகமாய்க்கலந்து தூலபூதங்களாயின — இ ந்தப்பஞ்சீகரணத்தை அட்டிமாணமயமென்று சங்கிக்கவே ண்டாம்

வினா- சாமவேதோபநிஷத்தில் திரிவிதகாரணமாய்ச்சொல்லியிரு
க்கின்றதேதெனின்,

விடை- வாயுவாகாசங்களிரண்டும்அமிர்தத்திரவியங்களானதாலு
ம்அமிர்த்திரவியங்களாகிய பிருதிவி அப்புதேயுக்கள் அதில்
ஒடுக்கமாகையாலும் இந்தப்பஞ்சீகரணத்தைப்பிரமாணிய
மென்று பெரியவர்களாற் சொல்லப்படும்——இப்படி சொல்ல
ப்பட்டபஞ்சீகரணமன்றித் திரிவிதகரணஞ்செய்தாற்பிரத்தி
யட்சாதிவிரோதம் வரும் ஆனதாலிந்தவாகாசவாயுக்களுடைய
தன்மம் வன்னியாதிகளில் காணப்பட்டிருக்கிறது அந்தவாகா
சவாயுக்களில்வன்னியாதிதன்மங்காணப்படவில்லை.

வினா- அதெதினாலெனின்,

விடை- இந்தவன்னியாதியங்கிசவியாப்தியானதாலேதாஞ்சமா
ய்க்கலந்ததினால்இதினுடையதர்மமாகாசவாயுக்களிலகாணப்
படவில்லை——சமஸ்தத்திலுங் காரணத்தைப்போற் காரிய
முங்காணப்பட்டிருப்பதாலிந்தப் பஞ்சீகரணம் பிரமாண
மென்றேபெரியவர்களறிந்திருக்கிறார்கள் ஆனதாலிந்தப்பஞ்
சீகரணத்தினாலுண்டானஸ்தூலபூதங்களுடைய மிஸ்ரமுங்கேட்
பாயாக,

வினா- அதேதெனின்,

விடை- ஆகாசத்துக்குக்குணம் சத்தம்வாயுக்குக்குணஞ்சத்த
பரிசம் தேயுவுக்குக்குணஞ் சத்தபரிசரூபம் அப்புவுக்கு
க்குணம் சத்தபரிசரூபரசம் பிருதிவிக்குக்குணஞ் சத்தபரி
சரூபரசகெந்தங்களென்று சொல்லப்படும்——இந்தவாகாசா
தியங்கிசகுணங்கள் ஞானகர்மேந்திரியங்களில் காணப்பட்
டிருக்கிறது.

வினா- அதேதெனின்,

விடை- சுரோத்திரம்ஆகாசாங்கிசமானதால்சத்தத்தையுந்தொ
க்குவாயுவாங்கிசமானதால் பரிசத்தையும் சட்சுஅக்கினியங்
கிசமானதால் ரூபத்தையுஞ்சிங்குவை அப்புவினங்கிசமான
தாலிரசத்தையும்ஆக்கிராணம் பிருதிவியங்கிசமானதால்கெந்த
த்தையுங்கிரகிக்கின்றது——வாக்கும் ஆகாசாங்கிசமானதால்வச
னிக்கும் பாணியும் வாயுவாங்கிசமானதாலெடுத்தலுக்குதவிசெய்
யும்பாதமும் அக்கினியாங்கிசமானதால் கமனத்தொழிற்க
ளைச்செய்யும் பாயுருஅப்புவினங்கிசமானதால் மலவிசர்க்கந்

களைவிடச் செய்யும், உபஸ்தம்பிரஜாபதியினஸ்தானமானதால் ஆனந்தத்தைச்செய்யுமென்றறி.

வினா- இதற்கதிதெய்வமேதெனின்,

விடை- சுரோத்திரத்துக்குத்திக்கும் த்வக்குக்குவாயுவும் சக்ஷுவுக்குச் சூரியனும் ஜிஹ்வைக்குவருணனும் ஆக்கிராணத்துக்கு அசுவினிதேவதைகளும் வாக்குக்கு அக்கினியும் பாணிக்கிந்திரனும் பாதத்துக்குத்திரிவிக்கிரமனும் பாயுருவுக்குமிருத்தியுவும் உபஸ்தத்துக்குப் பிரசாபதியும்— மனதுக்குச் சந்திரனும் புத்திக்குப் பிரமனும் அகங்காரத்துக்கு உருத்திரனும் சித்தத்துக்கு க்ஷேத்திரஞ்ஞனும் அதிதேவதைகளாம்— இந்தத்திக்காதிதேவதைகள் ஆகாசாதிபஞ்சபூதங்களில் நின்றுஞ் சத்துவரசோகுணங்களினிற்பிறந்த இந்திரியஸ்தானங்களிலிருந்து அந்தந்தப்பிராணிகளுடைய கன்மானுரூபமாக அநுக்கிரகநிக்கிரகங்கள் செய்துகொண்டு சரீரகாரணப்பிராண கூட்டங்களுக்கு அதிதேவதையாயிருப்பதால் சகலஜீவர்களுடைய பிரவிருத்திக்கேதுவாகவிருப்பார்கள்— ஆகையால்ஜீவனுக்குத்தக்கபடிகுணமுண்டாகும், குணத்துக்குத்தக்கபடிமனது பிரவிருத்திக்கும், ஜீவன்மனத்தையாசிரயித்துக்கொண்டு ஞானேந்திரிய கன்மேந்திரியங்களோடேகூடப் புண்ணியபாவத்தைச்செய்துவருகிறான்— இப்படிச்செய்துவருகிற விஞ்ஞானமயமான சீவன் தேகமேதானாகவிருந்து கர்த்தாவென்னுந்தேகத்தையபிமானிக்கிறான், ஆன்மாவோவென்றால் சாட்சியாயிருந்துகொண்டு ஒன்றுஞ்செய்யாமலுஞ்செய்வியாமலுந்தடஸ்தனாயிருக்கிறார்— அங்ஙனமே, பார்க்கிறதுங்கேட்கிறதும் வசனிக்கிறதும் கர்த்தாவாயிருந்து கிரிகைபண்ணுகிறதும் போக்தாவாகிப் புசிக்கிறதுமாயிருக்கிறான், ஆன்மாவானவர் இந்தவிகாரங்களிலே படாமல் சாட்சியாகத்தானேயிருப்பார்- ஆனதால்ஆன்மாவுக்குக் கர்த்தத்துவமும் போக்தத்துவமுமில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- லோகத்திற் பிராணிகளுடையசேஷ்டைக்குச் சாட்சியாயிருந்த சூரியனைப்போலாம்.

வினா- அஃதெப்படியெனின்,

விடை- சூரியனானவர்தாமொருதொழிலுஞ் செய்யாமலுமொ

ருத்தனைக்கொண்டு செய்வியாமலுயிருக்கப்பிராணிகள் அவ
கள் சுபாவகுணங்களினால் பிரவிர்த்திக்கிறதுபோல இந்த்ரி
ரியனை பிரத்தியான்ம சந்நிதானத்தில் நின்று தேகேந்த்ரி
ரியாதிகள் சேஷ்டிக்க அவராகளுக்கெல்லாஞ் சாட்சியாயி
ருக்கிறார்—இப்படிக்கொத்த பரமாத்துவத்தை அறியமா
ட்டாமல், மாயையினால் மோகிக்கப்பட்டபுத்தியை யுடைத்
தானவர்கள் தனக்கன்னியமான தேகேந்திரியாதிகள் செ
ய்கிறதொழிலை ஆன்மாவாயிருக்கிற தன்னிடத்தி லாரோபித்
துக்கொள்ளுகிறார்கள்.

வினா- மூடனாயிருக்கிற புருடனானவன் அசங்கனாகவுஞ் சித்
து ரூபனாகவுமிருக்கிற ஆன்மசொரூபத்தைக் காணாமல் ஆ
ன்மாவினிடத்திலேயன்மகாரியமான தொழில்களையாரோ
பித்துக் கொள்ளுகிறதெப்படியெனின்,

விடை- ஆகாசத்தில் சந்திரனையோட்டாமலிருக்கிற மேகங்க
ளோடுகிறதைக்கண்டு சந்திரனோடுகிறதென்பதுபோலா
ம்-ஆதலால், அப்பா! ஆன்மானன்மவிவேகமுனக்குத் தெரி
யும்படி முன்னதாகச் செகத்துண்டானவழியை அன்புட
ன் சொல்லுகிறோம் விவேகியாயிருக்கிற சீடனே நீகேட்
பாயாக.

ஸ்தூலப்பிரபஞ்சம்.

வினா- அதேதெனின்,
விடை- ஈசுரலட்சணம் பொருந்தின பஞ்சீகிருதமான ஆகா
சாதி ஸ்தூலபஞ்சமகாபூதங்களினாலிந்தச் சராசரமான பிர
மாண்டங்களுண்டாயின—இந்தப்பிரமாண்டத்துட் பட்ட
நாலுவகையோனியாகிய சகல சரீரங்களுக்கும் நெல்லுமுத
லாகிய சகல ஓஷதிகளும் வாயுதேஜஸ அப்புபூமிகளும் அ
ன்னமாயின,

வினா- அதெப்படியெனின்,

விடை- சிலசெந்துக்கள்வாயுவுபட்சணம்பண்ணுகிறதாம் சில
செந்துக்கள் சந்திரகிரகணஞ் சூரியகிரகணங் களைப்பட்ச
ணம் பண்ணுகிறதாம் சிலசெந்துக்கள் மேகத்திவலைகளை
ப்பட்சணம் பண்ணுகிறதாம் சிலசெந்துக்கள் மண்ணைப் பொ
சிக்கிறதாம் சிலசெந்துக்கள் கல்லுகளைப்பொசிக்கிறதாம் சில
செந்துக்கள் பழுப்பிலைகளைப் பொசிக்கிறதாம் சிலசெந்துக்க
ள் புல்லுகளைப்பொசிக்கிறதாம்சிலசெந்துக்கள்மாமிசாதிகளைப்

பொசிக்கிறதும் சிலசெந்துக்கள் நெல்லுமுதலியதுகளைப்போசிக்கிறதுமாய்ச் சீவிக்கின்றனவாம்.

வினா- நாலுவகையோனியாவதேதெனின்,

விடை- சராயுசமென்றும் அண்டசமென்றும் சுவேதசமென்றும் உற்பீசமென்றும் நாலுவகையோனிகளாய் அநேகங் கன்மானுசாரமாயிந்தச் செந்துக்கள் பிறக்கின்றன, அவற்றுள் சராயுசமாவது தோற்பையில் நின்றும் பிறந்த மனுடர் முதலான செந்துக்களும், அண்டசமாவது முட்டையில் நின்றும் பிறந்த பறவைமுதலான செந்துக்களும், சுவேதசமாவது வேர்வையில் நின்றும் பிறந்த பேன் ஈர் முதலானதுகளும், உற்பீசமாவது பூமியைப் பேதித்துக்கொண்டு பிறந்த விருட்சமுதலானதுகளுமென்று சொல்லப்படும் — இந்நாலுவிதமான பௌதிகங்களே ஸ்தூலசரீரமாயின — இந்தத் தூலசரீரங்களைத் திருஷ்டியேக சித்தமாய்ப் பார்க்கிற போது சமட்டியென்றும் — இந்தச் சமட்டி ஸ்தூலசரீர அவிச்சின்னமாகியும் பிரதி விம்பமாகியுமிருக்கிற சைதன்னியமெதுவோ அந்தச் சைதன்னியத்தையே உலகத்திலுள்ள மனுஷாதி செந்துக்களில் நானென்கிற அபிமானத்துவம் வைத்ததால் வைசுவாநரனென்றும் நாலுவிதரூபங்களாய் விளங்குகிறதால் விராட்டென்றும் இந்தச் சதுர்விதங்களான ஸ்தூல பௌதிகசமஷ்டிகளில் அதனதன் சாதிவிசேடங்களாய்ப் பிறித்துப் பின்னமாய்ப் பார்க்கிற போது வியஷ்டியென்றும் இந்த வியஷ்டி ஸ்தூலசரீரத்தில் அவிச்சின்னமாகவும் பிரதிவிம்பமாகவுமிருந்த சைதன்னியமெதுவோ அதையே விசுவமாயிருக்கிற ஸ்தூலதேகத்தில் நானென்கிற அபிமானம்வைத்திருப்பதால் விசுவனென்றும் அந்த வியஷ்டியான விசுவனுக்கு ஸ்தூலசரீரமென்றும் இந்தஸ்தூலசரீரமானது அன்னவிகாரமானபடியினால் அன்னமயகோசமென்றுஞ்சொல்லப்படும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- இந்த ஸ்தூலதேகமானது, பிதாப்போசித்த அன்னவிகாரத்தினாலுண்டான சுக்கிலசோணிதங்களாற்பிறந்து அன்னத்தினால்விருத்தியடைகின்றது அன்னசாரமில்லாதபோது நசித்துவிடுகின்றது — ஆகலால் ஸ்தூலதேகம் அன்னவிகாரமானபடியினால் அன்னமயமென்றும் ஆனந்தமயகோசமுதலான நாலுகோசங்களையும் வாளாயுதத்தை உறையானது மறைத்தது போல்மறைத்திருப்பதா லன்னமயகோச மென்றும் இந்தஸ்

ஸ்தூலதேகமானது ஆன்மாவுக்கு ஸ்தூலபோகங்களைப் புசிக்கிறதற்கிருப்பிடமென்றும் பெரியோர்களாற் சொல்லப்படும்.

வினா- அதேதெனின்,

விடை- ஆன்மாவானவர் சரீரத்திலிருந்து ஸ்தூலமான சத்தாதி விஷயங்களைப் புசித்துக்கொண்டு போக்தாவாயிருந்ததால் ஸ்தூலதேகம் போகமனுபவிக்கிறதற்கு இருப்பிடமென்று சொல்லப்படும்.

வினா- போக்தாவென்பதேதெனின்,

விடை- இந்திரியங்களினாற் கொள்ளப்பட்ட சத்தாதிவிஷய போகங்களை ஆன்மாவானவர் தேகேந்திரியமனதோடே கூடி அனுபவிப்பதால் போக்தாவென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா- அதெப்படியனுபவிக்கிறாரெனின்,

விடை- பதினொருவாசல் பொருந்தின தேகமான மேடையில் இந்திரிய பதேவர்க்கங்களாகிற பரிவாரங்களுடனே ஆன்மாவானவர் மகாராஜனாய் அஹங்காரமென்கிற சிங்காசனத்திலிருந்து விஷயபோகங்களைப் புசித்துக்கொண்டிருக்கிறார் — இப்படிக்கொத்த ஆன்மாவை ஞானேந்திரியங்களைத் தும் அதற்கதிதேவதைகளைத் தும் கர்மேந்திரியங்களைத் தும் அதற்கதிதேவதைகளைத் தும் மனமுதலானதும் அதற்கதிதேவதைகளைத் தும் அதனதன் தொழிலிலிருக்கிறபிரகாரமாயிருந்துக்கொண்டு ஊழியக்காரர்போல் சாக்கிரதையாய்ப் பஜனைபண்ணுகின்றன — இந்த ஆன்மாவானவர் ஸ்தூலதேகத்தோடே கூடித் ஸ்தூலவிஷயங்களைப் புசித்துக்கொண்டிருந்தானை நானென்று விகாரம்பண்ணுகிறதால் இதுவே சாக்கிர அவஸ்தையென்றும், இப்படிசொல்லப்பட்ட சமஷ்டிவியஷ்டி யானசரீரங்களுக்கு அபிமானிகளான விச்வ வைச்வாநரர்களுக்குஞ் சாதிவஸ்து முன் சூட்சுமகாரணவியஷ்டி சமஷ்டிக்குச் சொன்னது போலப் பேதமில்லாமல் அபேதமென்றும், இப்போதுனக்குச் சொன்ன ஸ்தூலசூட்சுமகாரணப் பிரபஞ்சங்களெல்லாம் ஒன்றாய்க்கூட்டி மகாப்பிரபஞ்சமென்றும், இந்தமகாப்பிரபஞ்சத்துக்கு அவிச்சின்னமாகவும் விஸ்வப்பிரத்ஞாதி லட்சணமாய் விராட்டுமுதல் ஈசுரபரியந்தமும் நின்றசைதன்னியம் ஒன்றேயென்றும், யாதொருசைதன்னியம் அனுதியாகவும் அனந்தமா

கவும் அவ்வியக்தமாகவும் அசமாகவும் அட்சரமாகவு மிருக்கின்ற தோ அதுவேயிந்தமகாப் பிரபஞ்சத்துடன் கூடினதாய பிண்டம் போற்கலத்திருப்பதால் சர்வம்பிரம மென்னும் மகாவாக்கியத்தில் சொல்லப்படுகின்றது இந்தவாக்கியார்த்தத்தைப் பெரியவர்களால் வாச்சியார்த்தமென்னும் இதைவிட்டுப்பிரிந்த ஆன்மாவுக்கு லட்சியார்த்தமென்னுங்காரிய காரணலட்சணமான வித்தாலறுதல் ஞானபரியந்தங் காணப்பட்ட சகலத்தையுமே ஜன்மமென்றுஞ்சொல்லப்படும்.

வினா- ஆன்மாவாவதாரெனின்,

விடை- அந்தக்கரணத்தையும் அதினுடைய தொழிலானமனோ புத்திநித்தவசங்காரங்களையுங்கண்டுகொண்டதாயும் அழியாதபடி விகாரமின்றியிருந்ததைச்சூன்யமெதுவோ அதுவேயான்மாவென்று சூட்சமபுத்தியினு லறிந்துக்கொள்—மேலும், இந்தப்பிரத்தி காண்மா வானவர் ஸ்வப்பிரகாசர் நிரங்கிசர் அசங்கர் சர்வகாலத்திலும் ஏகரூபமாயிருக்கிறவர் நித்தியர் அகண்டானந்த சொரூபர் சகலத்தையுமறிந்தவர் சாட்சி நிர்க்குணரென்றும், இவர் பிறக்கவுமில்லை யிறக்கவுமில்லை வளரவுமில்லை குறையவுமில்லை யானதால் நித்தியர் சாஸ்திர புராணமென்றும் இவர் சரீரங்கள் கொல்லப்பட்டு மரித்துப்போகிற போதுந்தாஞ் சொல்லப்பட்டவருமல்லமரித்தவருமல்லவென்றும் அறியவாயாக.

வினா- அதெப்படியெனின்,

விடை- தேகத்திலுண்டாயிருக்கிறான் பிறந்தான் வளர்ந்தான் ஓடியாடித் திரிந்தான் ஒரு நாளைக்கொரு நாள் குறைந்து மரித்தானென்கிற ஆறுவிகாரங்களுந்திரிசியமாயிருக்கிறதேகத்துக்கே தவிர ஆன்மாவுக்கில்லை இதுவன்றியுந் தூலமென்கிறதும் கிருசமென்கிறதும் கறுப்பென்கிறதும் சிவப்பென்கிறதும் வர்ணாச்சிரமங்களும் அதினுடைய தர்மங்களும் சரீரத்துக்கே தவிர இந்தவிகாரங்களெல்லாம் சாட்சியாயிருக்கிற ஆன்மாவுக்கில்லை—இப்படிக்கொத்த பிரத்தியகான்மா வினிடத்தில் அனான்மத்துவமும் அனான்மாவாயிருக்கிற தேகாதிகளிடத்தில் ஆன்மத்துவமும் விபரீதமாகக் கற்பித்துக்கொண்டு மோகத்தினால் சமுசாரசாகரத்தில் சுழலுகிறான்.

வினா- அதெப்படியெனின்,

விடை.— பிராந்தியினாலே நான்மனுஷன் நான்பிராமணன் நான்விவேகி நான்மகாபாவி நான்பிரஷ்டன் நானல்லவன் நான்ஞானி நான்சுகியென்றுயிந்தரூபகலான அனேகக்குணங்களை ஆன்மாவினிடத்திற்கற்பிக்கிறான்—மேலும், அஞ்ஞானியானவனுடையதர்மமான ஜென்மசாமரணங்களும் பசிதாகமுதலானவையும்விபரீதமாக ஆன்மாவினிடத்திற்புத்திதோஷத்தினாலாரோபிக்கிறான்—அப்பா! பிராந்தியினாலெனிடத்திலேகற்பிக்கிறதோ அதினுடைய குணதோஷங்களில் அணுமாத்திரமாவதும் ஆன்மாவுக்குக்கூடவுமில்லையல்கவுமில்லையென்றறி.

வினா— அதெப்படியெனின்,

விடை— பொட்டலானபூமியிற் காணப்படுகிறதைச் சலமென்றுசொன்னாலந்தப்பூமி ஈரமாகுமோ, நேத்திரரோகமுடையர் தோஷத்தினாற் சங்கைப்பார்த்துப் பச்சையென்கிறதால் அந்தச்சங்கு பச்சையாகுமோ பாலர்கள் ஆகாசத்தை நீலமென்று கற்பித்ததினால் ஆகாசம் நீலமாகுமோ அப்படி போலே தேகதர்மம் ஆத்மதர்மமாகுமோ.

வினா— என்றிப்படிச்சொன்னகுருவைப் பார்த்துச் சீடன்கேட்கும்படி, வாருங்காமி! சட்சுவுக்குமனசுக்கும்விடயமன்றாயிருக்கிற பிரத்தியகான்மாவினிடத்தில் அஞ்ஞானமாவாகிற தேகாதிதர்மங்களெப்படியாரோபிக்கப்படும் கண்முன்னேகண்டவிஷயத்தினிடத்தில்விஷயாந்தரமானதை வேறொன்றையாரோபிக்கலாம்அதுவும்ப்ரத்தியக்ஷத்தினிடத்திலொப்பனையாகக் காணப்பட்டிருக்கிறது—மனதிற்குப் பூர்வத்திலேயேகண்டதொரு பதார்த்தத்தை நினைத்திருந்துவேறொருபதார்த்தம் கண்டபோது அந்தப்பதார்த்தமே இதுவென்று நினைப்புலெட்சணை உண்டாகும் இப்படிசட்சுமனசுக்கு அகோசரமான ஆன்மாவினிடத்திலெப்படியத்தியாசங் கூடும்—ஆன்மாவானது ஒருக்காலும் அனுபவிக்கப்படவில்லை அப்படி அனுபவிக்கப்படாதவஸ்துவுக்கு விலட்சணமான அநான்மாவினிடத்திலெப்படியாரோப்பு சொல்லப்படும்? அநான்மாவினிடத்திலான்மாத்தியாசமெப்படிவந்தது! இதற்கு நிவிர்த்தி எந்தவுபாயத்தினாற்சித்திக்கும்! சீவனாருக்குபாதிகள் சடமாயிருக்கச் சீவனுக்குமாத்திரம்பெந்தமெப்படிவந்தது! ஈசுவரனுக்குப் பெந்தமெப்படியில்லாமற்போயிற்று! அடியேனுக்கு இந்தச்சந்தேகங்களைத்தீர்த்துக் கருணைக்கண்ணாற் பார்த்துக் கரதலாமலகம் போலத்ருஷ்டந்தெரியத்தக்கதாகச் சொல்லவேண்டுமெனின்,

விடை- என்றிப்படி கேட்ட சிடனைப்பார்த்து குருவானவர் சொல்லும்படிவாராயிசிடனே ஆன்மாவானவர் மனோவாக்காதிகளுக்கு விடயமாய்க் காணப்படுகிறவரல்ல அப்படிக்கிருந்தாலும் நானென்கிற அனுபவம் அபரோட்சமாய் சகலருக்குண்டிருப்பதால் ஆன்மாவிருக்கிறது பிரசித்தமே இப்படியான்மாவிருக்கிறதற்கடையாளமாயிருக்கிறது ஒருவருக்கும் நானல்லவென்கிறது சொல்லப்படவில்லை—நானிருக்கிறேனென்கிறதில் ஒருவரும் சாட்சியொப்பனைதேடவில்லை இப்படிபிரமாணங்களுக்கெல்லாம் பிரமாணமிய மெந்தமூலமென்று விசாரித்தறிந்தேலும், இவ்வான்மாவானவனுடைய காரியங்கள் மறைக்கப்பட்டதால் மனசுக்குப் பிரத்தியட்சமாயனுபவிக்கப்படவில்லை.

வி-று- அஃதெப்படியெனின்,

விடை- மேகங்களானது சூரியனைமறைத்தது போலவிந்தவான்மாவையும் அகங்காராதிவிடயங்கள்மறைக்கப்பட்டது-ஆதலால், விடயத்தைப் பிரத்தியட்சமாய்க்கண்டு அதினிடத்தில் மற்றொருவிடயத்தை யாரோபிக்கவேணுமென்றுநீகேட்ட சங்கை பெரியவர்களாற் பண்ணவில்லைஇப்படிலயித்ததற்குப்பிராந்தியேகாரணம்.

வி-று- அதெப்படியெனின்,

விடை- சட்சுமனைக்களுக்குவிடயமன்றாயிருக்கிற ஆகாசத்தினிடத்தில் கறுப்புமுதலானதுகள் பாலர்களாற் கற்பிக்கப்பட்டதுபோல ஆன்மாவினிடத்திலும்புத்திப்பிரமையினால் அனான்மாதிகளைக் கற்பிக்கப்பட்டது—அனான்மாதிகளிடத்திலான்மாத்தியாசம் பண்ணுகிறதற்கு ஒருவொப்பனையும் அபேட்சிக்கவில்லை.

வி-று- அதெப்படியெனின்,

விடை- இந்தச் சங்குபச்சையென்கிறதிலேத்து ஒப்பனைவேண்டும்-இதுவன்றியுமுபாதிகளுடன் கூடின பிராந்திகளுக்குவேறொப்பனைவேணுமென்கிறது காணப்படவில்லை, நிருபாதிகளாயிருக்கிற ரச்சுமுதலான பிராந்திகள் காணப்பட்டிருக்கிறது உபாதியிற் காணப்படவில்லை—ஆனாலுங் கொஞ்சமொப்பனைகாண்பித்துச் சொல்லுகிறேன்கேட்பாயாக இவ்வான்மாவானவர் அத்தியந்தநிர்மல சூட்சுமமாயப்பிரகாசர்இப்படிப்புத்தியுமான்மாவைப்போற்பிரகாசமானதால் ஆன்மப்பிரகாசத்துடன் புத்தியுங்கூடிநிர்மலமாய்விளங்கும்;

வினா- அதெப்படியெனின்,

விடை- சூரியன் முன்னேயிருக்கிற படிகக்கல்லானது எப்படிப் பிரகாசிக்குமோ அப்படியே ஆன்மப்பிரகாசத்தினால் புத்தியும் அந்தப் புத்திப்பிரகாசத்தினால் மனமும் அந்தமனப்பிரகாசத்தினாலிந்திரியங்களும் அந்த இந்திரியப் பிரகாசத்தினால் தேகமும் விளங்கும்—ஆகையால் தேகேந்திரியாதிகளாயிருக்கிற அனான்மாக்களிடத்தில் ஆன்மாவென்கிற புத்திக்கண்ணாடியிற் காண்பித்த நிழலைப்போலன்றி நிசமாகக்கண்டதுபோல மூடர்களுக்கு நிசமாய்க்காணப்பட்டிருக்கிறது—அப்பா! ஆன்மாவுக்கு அத்தியாசகாரணமான புத்தியினிடத்திலிப்படியாக ஒப்பனைகண்டிருக்கிறது, அனான்மாவான தேகத்தினிடத்தில் நானென்கிற அத்தியாசமெது சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தப் பூர்வாபூர்வ அத்தியாசத்துக்கு உத்தரோத்தர வத்தியாசமேகாரணம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- சுழுத்திமூர்ச்சைகளில் நின்றுமெழுந்திருந்த பேர்களில் அத்தியாசவாசனை காணப்பட்டிருக்கின்றது.

வினா- அப்படிக்காணப்பட்ட அத்தியாசத்துக்குக் காரணமேதெனின்,

விடை- அநாதியாயிருக்கிற அவித்தைவாசனையென்றறி.

வினா- இந்தஅத்தியாசபெந்தம்வந்ததற்குக்காரணமேதெனின்,

விடை- யாதொருகாரணத்தினாலே சென்மசாமரணவியாதியாதிதுக்கங்களாகிற அனர்த்தங்கள் தன்னைவந்தடைந்தது, அந்த ஆன்மாவுக்குபாதியாகிய அவித்தைக்குப் பெரிதாயிரண்டுசத்திகளுண்டு.

ஆவரணவிட்சேபம்.

வினா- அதேதெனின்,

விடை- ஆவரணசத்தி விட்சேபசத்தியென இரண்டுசத்திகளுண்டு இந்தச் சத்திகளுடனே கூடி ஆன்மாவுக்குச் சமுசாரபெந்தம் வந்தது. அந்தஆவரணசத்தியானது, சத்துதாமத குணப்பிரதானமானதா லாவரணத்துக்கேதுவாயிருந்து அதற்கே மூலாஞ்ஞான மூலவிருளென்று சொல்லப்படும் அதனால் சகல செகத்து மோகிக்கப்பட்டது—அப்பா! விவேகியாயிருந்தாலும் ஆன்மதத்துவத்தை நன்றாய்க் கேள்விப்பட்ட பன்

டிகனாயிருந்தாலும் ஆவரணசத்தியினால் மறைப்பட்ட கண
ணுடைத் தானவன் தன்தேகத்திலிருக்கிற ஆன்மாவை அறிய
மாட்டான் விட்சேபமென்கிற ராசதசத்தியானது புருஷனு
டைய பிரவிர்த்திக்கேதுவாய் ஸ்தூலமுதல் சூட்சும வரைக்கு
முண்டான அசத்தாயிருக்கிற சகல பிரமாண்டங்களையு மான்
மாவினிடத்தில் கற்பிக்கும் — இதில் கூறச்சொல்லப்பட்ட ஆவர
ணசத்தியானது புருஷனாயிருக்கிறவனை நித்திரையானது சரீ
ரத்தைமறந்து போக எப்படி மூடுகிறதோ அப்படியே யித்
தூட்பிரத்தியகான்மாவை உள்ளேநின்றாய் மறைத்துக்கொண்டு
வெளியிலிருந்த விட்சேபசத்தியைக் காட்டுவிக்கும் — இந்த
ஆவரணமென்ற பெரிதான சத்தியினால் நிர்மலமாயிருக்கிற
ஆன்மாவை மறைக்கிறபோது புருஷனானவன் அஞ்ஞானவானா
ய் தேகாதிகளிடத்தில் மோகத்தினால் நானென்கிற ஆன்மபுத்தி
யை வைக்கிறான்.

விஞ- அதெப்படியெனின்,

விடை- நித்திரைபோகின்றவன் சொப்பனங்காண்கிறபோது
பொய்யான அந்தச் சொப்பனதேகத்தில் தானென்கிறபுத்
தியை யெப்படிவைத்தானோ அப்படியே அஞ்ஞானமானனு
டைய பிறப்பிறப்புபசிதாகம் பிரமை முதலான தேகதர்மங்க
ளை ஆன்மாவினிடத்திற் கற்பிக்கிறான் — இப்படிக் கொத்தபுரு
ஷனானவன் விட்சேபசத்தியினால் ஏவப்பட்டு புண்ணியபாவ
ரூபமான கர்மத்தைச் செய்துக்கொண்டு அதினால்வரப்பட்டசுக
துக்கங்களைப் போசித்துக்கொண்டு சமுசாரசாகரத்திற் சுழலுகி
றான் — அதனால் பிரத்தியகான்மாவுக்குச் சமுசாரபெந்தமான
து அத்தியாசதோஷத்தினாற் பிரபலமாகவுண்டாயிற்று ஆனதா
ல் அந்த அத்தியாசபெந்தத்தோடேகூடிய சொற்பமாசம்பிறப்பி
றப்புமுதலான துக்கங்களினாலே யனவரதமுங்கிலேசிக்கிறான்.

விஞ- அத்தியாசமாவதேதெனின்,

விடை- ஒன்றையொன்றாகக்கிரகிக்கிறதே அத்தியாசம் இ
துபிராந்தி மூலசுபாவமானதால் சமுசார பெந்தத்துக்கா
திகாரணம் ஆன்மாவுக்கு அத்தியாசத்தினால் சமுசாரபெந்த
து அந்த அத்தியாசம் போனால் சமுசாரபெந்தமில்லை ஆகை
யாலிந்தப் பெந்தமோட்சங்களிரண்டையுநன்றாயறி.

வினா- அதேதெனின்,

விடை- புருஷனானவனுக்குப்பிரவிருத்தியே பெந்தம் நிவிர்த்தியே மோட்சம்இந்தப்பிரவிர்த்தி நிவிர்த்திகளினால் பெந்த மோட்சங்களுண்டாயின.

வினா- ஆன்மாவுக்கத்தியாசம்வந்ததற்கேதுவேதெனின்,

விடை- இது காலகர்மாதிரூபங்கள் இவ்வத்தியாசமானது இதற்குக்கர்த்தாவாகிய ஈசுரனுக்குஉபாதியாகப்பரிணமித்துத்தான் பொய்யாயிருந்தும் ரச்சுவில்சர்ப்பம்போற்சமுசாரத்தைக் கூட்டுகிறது — சீவனைப்போலே யீசுரனுக்குபாதி கூட்டுறவு சமமாயிருந்தாலுஞ் சுத்தசத்துவமலினசத்துவமென்கிறவுபாதி அபேதமானதால் சீவனுக்குப் பெந்தமேயன்றி ஈசுரனுக்குப் பெந்தமும் அதன்காரியமுமில்லை.

வினா- இதில் ஈசுரவுபாதியேது, சீவவுபாதியேதெனின்,

விடை- சுத்தசத்துவப்பிரதானமானமாயையே ஈசுரவுபாதி, மலினசத்துவப்பிரதானமானவவித்தையேசீவவுபாதி, இதில்சுத்தசத்துவப்பிரதானமான ஈசுவரனுக்குப் பெந்தமுமில்லை அதினுண்டானவிட்சேபகாரியமுமில்லை.

வினா- அதேதெனின்,

விடை- தமக்குஉபாதியானமாயையைத்தன்வயப்படுத்திக்கொண்டு சர்வஞ்ஞராயுமறைப்பில்லாத ஞானமுள்ளவராயுஞ் சஞ்சலமில்லாதபடிக்குச்சுதந்தரராயிருட்டிதிதி சங்காரப்பிரவேசங்களாகிற கிரியைகள் தன்னிச்சைக்கேற்றபடிசெய்துசதனாமதங்க ளிரண்டையுந்தமக்குக் கீழ்ப்படுத்தி விளையாடிக்கொண்டிருக்கிறார் — ஆதலால் ஆவரணவிட்சேபமிரண்டுமீசுரனையொன்றுஞ்செய்யமாட்டாது, வேதமும், ஈசுரன்றனக்குத்தானே சுதந்தரனாய் பிரவிர்த்திகளை யொடுக்கிக்கொண்டமகாமகிமையைப் பொருந்தியிருக்கிறாரென்று சொல்லுகிறது, மலினசத்துவப்பிரதானமான சீவனுக்குப் பெந்தமும்சமுசாரமும் பொருந்தின — இந்தச் சீவனுக்கு முன்சொல்லப்பட்ட விட்சேபங்களை மிகவுந்திரளாய்க் காணப்பட்டிருக்கிறது, இந்தச்சமுசாரத்துக்கு மூலம் விபரீதமானஅத்தியாசம்இந்தஅத்தியாசத்துக்குமூலம்ஆவரணமாகியவஞ்ஞானம்இந்தவஞ்ஞானநிவிர்த்திஞானத்தினால் தவிரக்கர்மத்தினாலாகமாட்டாது.

வினா- அதேன்கர்மத்தினால் நிவிர்த்தியாகாதெனின்,

விடை- கர்மத்துக்கும் அஞ்ஞானத்துக்கும் விரோதமில்லாததனா
ல் கர்மமஞ்ஞானத்தைக் கெடுக்கமாட்டாது கன்மத்தினாலே
ஜென்மமுங் கன்மத்தினாலே மரண முமானதால் ஜெனன
மரண ரூபங்களுங் கர்மிகளுக்கே — இந்தக் கன்மிகளுக்குக்
கன்மவிலட்சணமான ஞானமில்லை அஞ்ஞான காரியமே கன்ம
மானதாவிருக்கக் கன்மமும் அஞ்ஞானத்தினாலவிருத்தியடையும்
அதனால் விருத்தியடைகிறதா அதினால் நாசமாகாது காண்
கன்மத்துக்கு அஞ்ஞானம் விரோதமாகாது, ஞானமே அஞ்ஞா
னத்துக்குவிரோதம் ஆதலால் அஞ்ஞானத்தைப் போக்கிறதற்
கு ஞானமேதவிர வேறில்லையென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை- பிரகாசத்துக்குமிருட்டுக்கு மெப்படிவிரோதமோ அ
ப்படியே ஞானத்துக்குமஞ்ஞானத்துக்கும் விரோதங்காண
ப்பட்டிருக்கிறது ஆனதால ஞானத்தினால் அஞ்ஞானத்தை
ப்போக்கிற நிமித்தம்புத்திமானாயிருக்கிறவன் ஞானத்தைச்சம்
பாதிக்கவேணும் அந்த ஞானமும் ஆன்மானான்மவிவேகத்தினா
ல் சித்திக்குமன்றி மற்றொன்றினாலுஞ்சித்தியாது.

வினா- மூடனாவனவன் ஞானத்தைத்தேடுகிற விதமெப்படி
யெனின்,

விடை- புத்தியினாலே ஆன்மாவிது அநான்மாவிதுவென்றுவே
றுபடுத்தவேணும் அப்படிவேறு பண்ணினாலான்மா வினி
டத்தில் அநான்மபுத்தியாகிற முடிச்சவிழ்ந்துபோய்ஆன்ம
த்துவமும் உண்டாகும் — இப்படியிருக்க மூடர்களாயிருக்கிற
பேர்கள் வேதாந்தங்களை விசாரியாமல் தாமே பெரியவர்களெ
ன்றெண்ணிக்கொண்டு ஈசுரகடாட்சங்குருகடாட்ச மில்லாதபடி
யே, ஆன்மசொரூபத்தைநானாவிதங்களாகச் சொல்லுகிறார்கள்,

பலமதசித்தாந்தம்.

வினா- அதேதெனின்,

விடை- அத்தியந்தபாமர மூடராயிருக்கிற பேர்கள் புத்திர
னே ஆன்மாவென்றெண்ணியிருக்கிறார்கள்.

வினா- அதேதெனின்,

விடை- ஆன்மாவினிடத்தில் என்ன பிரீதியிருக்கிறதோ அது

புத்திரனிடத்தில் மிகவுங்கண்டிருப்பதாலும் புத்திரன் பெருத்தானிலேத்தானென்கிற அனுபவத்தினாலும் ஆன்மாவே புத்திரனென்கிற சுருதியினாலுந் தீபத்தில் நின்றுந் தீபம் பிறந்ததுபோல் பிதாவினிடத்தில் நின்றும் புத்திரனுண்டாகுமென்கிறதினாலுந்தகப்பன் குணங்கள் பிள்ளையினிடத்திற் பீஜாங்குர நியாயம்போற் காணப்பட்டிருக்கிற படியினாலுஞ் சூக்ஷமூடனாயிருக்கிறவன் புத்திரனே ஆன்மாவென்றெண்ணுகிறான் — இப்படி புத்திரனே ஆன்மாவென்கிற மதக்காரனைப் பற்றொரு மதக்காரன் தூஷணித்துச் சொல்லுகிறான், புத்திரன் ஆன்மாவென்கிற தெப்படிக்கூடும் பிரீதிமாத்திரமே யல்லாமல் புத்திரனெப்படி ஆன்மாவாவான் — பிரீதியே யான்மாவாகிறபோது க்ஷேத்திரயாத்திரதனங்களிலும் பிரீதியிருக்கிறதால் அதுகளுமான்மாவாகவேணும் அப்படியில்லையாகையால் புத்திரனைக்காட்டிலும் விசேஷமாய் சகலப்பிராணிகளுக்குந் தேகத்தினிடத்தில் பிரீதிகாணப்படுகின்றது, அதுவே யான்மாவாகவேணும்.

விறு- அதெப்படியெனின்,

விடை- வீடுவேகிறபோது புத்திரன்போனாலும்போகட்டுமென்னுடன்தேகத்தைத் தப்பித்துக்கொண்டோடுகிறான் இதுவன்றியுந்தன்தேகத்தைச் சவரட்சணை பண்ணிக்கொள்கிற தந்தைப்புத்திரனை விற்கின்றான் அவன்பிரதிகூலமாய்ச்சொல்ல புபிள்ளாதவனையிற்சங்கரித்துப்போடுகிறான் ஆகையால் தேகமே ஆன்மாவன்றிப புத்திரனான்மாவாகமாட்டான், இரணருபாதி மெய்ப்பனைகளுந்திபத்தைப்போல் புத்திரனிடத்திலில்லை.

விறு- அதெப்படியெனின்,

விடை- சகலஅவயவங்கள் பொருந்தின பிதாவினிடத்தில் நின்று நொண்டிமுடங் கூன்குருடாகப் பிறக்கின்றான் நல்லகற்குணமாயிருக்கிற தகப்பனிடத்தில் துற்குண புத்திரன் பிறக்கின்றான் ஆனதால் நீசொன்ன புத்திராளடாகமே — இந்த தேகமான துகிரகத்திற்புத்திரனுக்குப்பிதாவைப்போலிருந்துக்கொண்டுசகலகாரியங்களிலும் சகலவஸ்துக்களிலும் யஜமானத்துவங் கண்டிருப்பதால் தேகமே யான்மாவென்று சொல்லவேண்டும் — புத்திரனே ஆன்மாவென்கிற சுருதியின் அர்த்தமுக்கியமாய்ப்புத்திரனை ஆன்மாவென்று சொல்லவில்லை உபசாரமாகவான்மாவென்று சொல்லிற்று, மேலும், நானென்கிற அ

அப்பதத்துக்கு லட்சியமாகக்கண்டது தேகமே தவிர வேறொன்றில்லை, சகலசெந்துக்களுக்கும் தேகமேநானென்கிற நிச்சயம் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டிருக்கிறது, சுருதியிலுமிந்தப் புருஷன் அன்னரசமயனென்று தேகத்துக்கே புருஷத்துவத்தைச் சொல்லியிருப்பதால் தேகமான புருஷனே ஆன்மாவாகவேணும் புத்திரன் ஆன்மாவாக மாட்டான் — இப்படித் தேகமே நானென்று சொன்ன சார்வாகமதத்தினுடைய நிச்சயத்தை மற்றொருமதக்காரன் கேட்டுப் பொறுக்கமாட்டாமல் தூஷித்துச்சொல்லுகிறான், தேகமெப்படியான்மாவாகும் தேகமானது அசேதனமாய் நானென்றறைவைப்பட்டிருக்கிறதுமாய் இந்திரியங்களினாலே சரிக்கப்பட்டுச் செட்டிக்கிறதே தவிரச் சுதந்தரமாய்ச் செட்டிக்கவில்லை — கிரகஸ்தனாயிருக்கிறவனுக்கு வீடாசிரயமாயிருப்பதுபோலிந்தச் சட்சுவாதியிந்திரியங்களுக்கெல்லாமிருப்பிடம். பியம்பாலியமுதலான நாலு அவஸ்தைகளோடேகூடினதாயும் சுக்கிலசுரோணிதத்தாலுண்டாகியும் இருப்பதால் தேகத்துக்கு ஆன்மத்துவமொருக்காலுஞ் சொல்லக்கூடாது, நான் குருடன், நான் செவிடன் நானூமையனென்கிற அனுபவத்தினாலிந்திரியங்களே ஆன்மாவாகவேணும்.

வினா — அதெப்படியெனின்,

விடை — இந்திரியங்களுக்கு விஷயங்களையறிகிறசத்தியிருக்கிறது அதல்லாமல் உபநிஷத்திலுமிந்திரியங்களே தேகமென்று சொல்லியிருப்பதாலிந்திரியங்களுக்கே ஆன்மத்துவம். இப் — படிச் சொன்ன மதஸ்தனுடைய நிச்சயத்தைக் கேட்டுப் பொறுக்கமாட்டாமல் மற்றொருமதஸ்தன் தூஷித்துச் சொல்லுகிறான் இந்திரியங்களெப்படி ஆன்மாவாகும் அது ன்றிறுமேல் வைப்பட்டுக் கோடாலியைப்போல் தொழிலைச் செய்கிறதே தவிர இந்திரியங்களுக்குச் சுதாசேதனையில்லை.

வினா — அதெப்படியெனின்,

விடை — காரணமாயிருக்கிற கோடாலிக்கெப்படி சுதாசேதனையுங் காணப்படவில்லையோ அப்படியே இந்திரியங்களுக்குஞ் சுதாசேதனைத்துவமில்லை இந்திரியங்களான்மாவென்று சொன்ன சுருதியினுடைய அர்த்தம் இந்திரிய அதிதேவதைகளைச் சொல்லியதே தவிரப்பிரசித்தமாய் இந்திரியங்களுக்குச் சேதனத்துவஞ் சொல்லவில்லை — அசேதனமாயிருக்கிற கடாதிகளுக்குவெளி

யிலிருக்கிற பதார்த்தத்தைத் துலக்குவிக்கிற சாமார்த்திய மெய்படியில்லையோ அப்படியே சடங்களாயிருக்கின்ற சுரோத்திர சட்சுவாதிகளுக்கு அசேதனத்துவஞ் சித்திக்கும் ஆனதாலிந்திரியங்களைச் சேட்டிக்கப்பண்ணுகிற பஞ்சவிருத்தியாயிருக்கின்ற பிராணன் அவத்தாத்திரயங்களிலுமிருப்பதாலந்தப்பிராணனே யான்மாவாகவேணும் — இதன்றியும் நான்பசிகொண்டேன் தாகங்கொண்டேனென்கிற அநுபவமிருக்கின்றதாவசுருதியிலும் பிராணனே யான்மாவென்று சொல்லியிருப்பதால் பிராணனுக்கேயான்மத்துவமுசிதமன்றி இந்திரியங்களுக்கு ஆன்மத்துவ மொருக்காலுங்கூடாது — என்றிப்படி சொன்னமைதனுடைய நிச்சயத்தை மற்றொருமதக்காரன் ஆக்ஷேபித்துச் சொல்லுகிறான், பிராணனெப்படி ஆன்மாவாகும் வெளியிலே சஞ்சரிக்கிற வாயுவைப்போல் உள்ளிருந்து சஞ்சரித்துக்கொண்டிருக்கிறபோலதல்லது [illegible]ன்று அறியாதபடி சடமாயமாய்ப்பிராணன் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது — சுழுத்தியிற் பிராணனிருந்தும் [illegible]த்துக் காணப்படவில்லை ஆனதா[illegible] நிற்குக் கொண்டுகாரணமாயிருக்கின்ற [illegible]தேயான்மாவாகவேணுமன்றிப் பிராணன் ஆன்மாவாகமாட்டாது.

வினா— அதெப்படியெனின்,

விடை— நான்சங்கற்பித்தேன் நான்விகற்பித்தேன் நானிந்தனைபொருந்தினேனென்கிற அநுபவத்தினாலும் மனமே யான்மாவென்று சுருதி சொன்னதினாலும் மனதேயான்மாவாகவேணும் பிராணன் ஆன்மாவல்ல, என்றிப்படிச் சொன்னமனஸ்தனுடைய நிச்சயத்தை மற்றொருசடனமதக்காரன் ஆக்ஷேபித்துச் சொல்லுகிறான் மனதுக்கு ஆன்மத்துவ மெப்படிக் கூடும் இந்திரியாதிகள் மனதினால் ஏவப்பட்டுத் தொழில்செய்கிற தெப்படியோ அப்படியே மனதுங்கர்த்தாவாகியிருக்கிற புத்தியினால் ஏவப்பட்டுப்பிரவிருத்திக்கிறபடியினால் கரணங்களையெல்லா மேவுகிறவனெவனோ அவனேயான்மா வாகவேணும்— மேலும், ஆன்மாவானவன் சுதந்தரனாகவும் புருஷனாகவு மொன்றினாலேவப்படாதவனாகவுமிருக்கவேணும் ஆதலால் நான்கர்த்தா நான்போக்தா நான்சுகியென்கிற அநுபவம் புத்தியினிடத்தி லிருப்பதினால் புத்தியேயான்மா, அகங்காரதர்மம் புத்திதர்மமானதாலும் புத்தியாகிய விஞ்ஞானமயனேயான்மாவென்று வேதஞ்சொல்லியிருப்பதாலும் மனதைக்கா

ட்டிலுங் கர்த்தாவாய் சகலகாரியங்களுஞ்செய்து முடிக்கையா லும் புத்தியாகிய விஞ்ஞானமயனே யாத்மா வாகவேணும்— என்று நிச்சயம் பண்ணின பௌத்தனுடைய மதத்தைக்கேட் டுப்பிரபாகரனுந்தார்க்கிகனும் பொறுக்கமாட்டாமல் இவனு டைய நிச்சயத்தைத்தூஷணித்துச்சொல்லுகிறார்கள், புத்தியெ ப்படி ஆத்மாவாகும் புத்தி அஞ்ஞானகாரியமாய்க் கடிதில்தோ ன்றி மறைவதால் புத்தியாத்மாவாக மாட்டாது—புத்தியாதிச கல காரணங்களும் அஞ்ஞானத்திலேலயங்கொண்டிருப்பதாலும்பா லவிருத்தர்கள் முதல் நானஞ்ஞனியென்கிற அனுபவஞ் சொ ல்லுகிறதாலும் அஞ்ஞானமே யான்மா வாகவேணு மன்றிப் புத்தியானது ஒருக்காலும் ஆன்மாவாகமாட்டாது—விஞ்ஞான மயனைக் காட்டிலும் ஆனந்தமயன்வேறென்றுசுருதியிற் சொ ல்லியிருக்கிறது இதன்றியுஞ் சுழுத்தியிலொரு துக்கங்களுமி ல்லாமல் சுகமாயிருப்பதாலும் ஆனந்தமயனே யான்மாவெ ன்கிறது அவசியம்,

வினா- அதெப்படியெனின்,

விடை- புத்தியாதியிந்திரியங்களெல்லாஞ்சுழுத்தியிலஞ்ஞா னத்திலயித்திருப்பதாலுமனக்கூட்டுறவில்லாததினால் துக்கங்க ளவில்லையென்கிறதினாலும் துக்கியாயிருந்தவர்களுக்குக்கூட ச்சுழுத்தியில்சுகங்கண்டிருப்பதாலும் நானொன்றுமறியேனெ ன்கிறவனுபவங்கண்டிருப்பதாலும் அஞ்ஞானமாகிய ஆனந்த மயனே ஆன்மாவாகவேணுமன்றிவிஞ்ஞானமயன் ஆன்மாவாக மாட்டான், என்று நிச்சயித்தமதஸ்தர்களைப்பாட்டமதக்காரன் மகாபிமானயோசனையினால் தூஷித்துச்சொல்லுகிறான் அஞ்ஞா னமெப்படியான்மாவாகும்ஞானமுங்கூடியிருக்கவேணும்ஞா னமில்லாமற்போனால் அஞ்ஞானியென்று அஞ்ஞானத்தையெ ப்படியறிவான்—சுகமாய் நித்திரைபோனேன் ஒன்றுமறியே னென்று தன்னுடைய அஞ்ஞானமும் ஞானமும் நித்திரைதெ ளிந்தெழுந்திருக்கிறவனிடத்திற் காணப்படுகின்றது—சுரு தியிலும் பிரஞ்ஞானகனமாயிருக்கிற ஆனந்தமயனையே ஆன் மாவென்று சொல்லியிருப்பதாலித்த ஞானாஞ்ஞானங்கள்கூடி ன தற்கே யான்மத்துவஞ் சொல்லப்படுமன்றி அஞ்ஞானமட் டுக்குமான்மத்துவங்கூடாது.

வினா- அதேதெனின்,

விடை- ஆன்மாவானது மின்மினிப்பூச்சியேபோல் சித்துஞ்சட

ழேக்கூடினது ஆதலால் கற்கட்டியாதிகள் போலே சட
டமான அஞ்ஞானத்துக்கு ஆன்மத்துவங் கூடாது ஞானஞ்
ஞானமே யான்மாவாகவேணும் — என்றிப்படிச் சொன்ன பாட்
டமதஸ்தனுடைய நிச்சயத்தையுந் தெரிந்து சூனியமதக்காரன் தூ
ஷித்துச் சொல்லுகிறான் ஞானாஞ்ஞானங்களிரண்டுக்குமான்மத்
துவமெப்படிக்கூடும் ஞானாஞ்ஞானங்களிரண்டும் பிரகாசாந்த
காரங்கள்போலிருக்கிறமாதலால் இரண்டுக்குஞ் சமானவி
யமும் சைதோகூட மொன்றுக்கொன்று வைப்பதுங் கூடாதா
கையால் ஆன்மப்பிரகாசங்கள் போலிருக்கிற ஞானாஞ்ஞானங்
களிரண்டுக்கு மான்மத்துவஞ் சித்தியாது — அஞ்ஞானந் தான்
ஞானந்தான் புத்திதான் குணங்கள் தான் இதுவெல்லா மெள்ள
ளவாகிய நித்திரையில் ஒன்று மநுபவிக்கப்படாமல் சூனி
யமே யனுபவிக்கப்படுகின்றது — சுழுத்தியி லொருவனுமுவ
மில்லை நானென்றெனக்குந் தோன்றவில்லையென்று நித்தி
ரைவிழித்தெழுந்திருந்த சகலசனங்களாலும் சூனியத்தைத் தானநுபவிக்
கப்படுகின்றது ஆகையால் சூனியமே யான்மாவாகவேணுமெனி
ஞானாஞ்ஞானங்களிரண்டு மான்மாவாக மாட்டாது — வேதத்தி
லும் அசத்தே முன்னிருந்ததென்று நன்றாய்ச் சொல்லியி
ருப்பதால் சூனியத்துக்கேயான்மத்துவமுசிதம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- சடமானது முன்னில்லாமலிருந்து பிறந்ததின் பிற
கு சடமென்று காணப்படுவதுபோல் அசத்திலே நின்று
ஞ்சத்தான சகலசெகத்தும் பிறந்தது ஆனதால் சூனியமே
மாகவேணுமென்றான் - இந்தப் பிரகாரம் தாங்கள் விசேஷிக
ளென்று மதாபிமானத்தோடே தங்கள்தங்கள் மதங்களுக்குத்
தகுந்த யோசனைகள் செய்து அதற்குத்தக்க சுருதிகளையுஞ்ச
ங்கிரகித்துக்கொண்டு புத்திரன் முதல் சூனியபரியந்தமுமா
ன்மாவென்றெண்ணின மதங்களையெல்லாம் அநான்மாவென்று
நிருபிக்கப்பட்டது.

வினா- அதெப்படியெனின்,

விடை- இப்படிக்கொத்த மதக்காரருடைய சுருதியுத்தியநு
பவங்களாபாசமாத்திரமாகையாலும் அவர்களது பூர்வாபூர்வ
யுத்திகளுத்தரோத்தரயுத்தியினால் பாதிக்கப்பட்டுப்போவ
தாலும் புத்திரன் முதல் சூனியாந்தமட்டும் அநான்மாக்களெ
ன்று சுருதியுத்தியநுபவங்களினால் நிச்சயிக்கப்பட்டது — மே

னும் பிரமாணாந்தரத்தினால் வாதிக்கப்பட்டுப்போனவைகளைப்பெரியவர்களால் யெதார்த்தமாயங்கீகரிக்கப்படவில்லை ஆனானால் புத்திசாலி சூனியாந்தமும் அனான்மாவென்றன் புத்தியினால் நன்றாய்த்தெரிந்துகொள்வாராக.

வினா- இப்படிசொன்னகுருவைப்பார்த்துச் சிடனானவன் கேட்கும்படி, ஐய்யா? சுழுத்திகாலத்தில் தேகேந்திரியாதிகள் சகலமும் லயமாய்ப்போனபோது சூனியத்தைத் தவிர வேறொன்றும் அனுபவிக்கப்படவில்லை, தேவரீர் சூனியம் ஆன்மாவல்லவென்றால்அந்தச் சூனியத்தைத் தவிர ஆன்மாவென்று வொருபதார்த்தம் வேறாயிருந்து அனுபவிக்கப்படவில்லை— அப்படியே சுழுத்தியில் ஆன்மாவிருந்தானென்றாலவன் அனுபவிக்கப்படவில்லை, அவர்தானெப்படியிருக்கிறார் இருக்கிறதற்குப்பிரமாணமென்ன, லட்சணமென்ன, அகங்காராதிகளெல்லாம் வாதிக்கப்பட்டுப் போனாலும் ஆன்மா அப்படி வாதிக்கப்படவில்லையே இப்படிக்கொத்த இருதயக்கிரந்திலட்சணமான சமுசயங்களெல்லாம் யுக்தியாகிற வாளினால் அறுத்துக்கிருபைகூர்ந்து அடியேனைரட்சிக்கவேண்டுமெனின்.

விடை— வாராய் சீடனே நீஉன்னுடைய புத்திக்குச்சம்மதமாயிருக்கிற சூட்சுமமானசங்கையைக்கேட்டாய் அது சூட்சுமமான ரகசியம் அது சூட்சுமபுத்தியானவர்காத்து யாக்களிடத்தில் காணப்பட்டிருக்கின்றது— ஆயினும் நீ நம்மையேதேடு கேட்டனையோ அதுகளையெல்லாம் நன்றாய் உனக்குத்தெரியச் சொல்லுகிறோம் கேட்பாயாக, அதிரகசியமாகியுஞ்சிரேஷ்டமாகியுஞ்சூட்சுமமாகியுமுள சூட்சுமங்களினுள்ளே அறியப்படுகிறதாகியுமிருக்கிற ஆன்மாவானவர்காரியமாயிருக்கின்ற புத்தியாதி இந்திரியங்களெல்லாந்தனக்குக்காரணமான சுழுத்தி யஞ்ஞானத்திலயமாயிருக்கிற போது ஆலமரம் வித்திற்காணுதபடி யொடுங்கியிருந்ததுபோல அவ்வியாகிருதமா யிருந்தார்— அவ்வான்மாவானவர் சாக்கிரத்தோடே கூடியிருக்கிற வனிடத்தில் வியாகிருதனாகியும் சுழுத்தியையடைந்திருக்கிறவனிடத்தில் அவ்வியாகிருத சொரூபமாகியுமிருக்கிறாரன்றிச் சூனியமாயில்லாமற்போகவில்லை.

வினா— அதெப்படியெனின்,

விடை - ஆலமரமானது ஒருவிடத்தில் அங்குரமாயும் ஒருவிடத்
தில் வித்தாகவுங் காரியகாரணமாய் அரூபமாயிருந்தது போ
லான்மாவுஞ் சுழுத்தியில் அவ்வியாகிருதமாயிருக்கிறார் —
ஆனதால் சுருதியும் இந்த அவத்தையை அவ்வியாகிருதமென்று
சொல்லுகிறது இந்த அர்த்தத்தையறியாமலஞ்ஞானிகள் சுருதி
யுக்தியினாற் செகத்தைக் காணுகிறதே சூனியமென்றறிந்திருக்
கிறார் இதன்றியும் அசத்தினிடத்திலிருந்து ஜகத்துண்டாயிற்றெ
ன்பது ஓரிடத்திலுங் கேள்விப்படவுமில்லை காணப்படவுமி
ல்லை மணலைக்கொம்பினின்றும் ஆகாசபுஷ்பத்தினின்றுமொரு
பதார்த்தமுண்டாயிற்றென்றால் அசத்திலிருந்து சத்து
ண்டாயிற்றென்பது கூடும் மணலையல்லாமல் குடம்பிறந்தி
றந்ததென்றால் மணலிலுந் தண்ணீரிலுங் குடமுண்டாக
வேணும் அப்படி யொருவிடத்திலுந் தண்ணீர்மணலிரண்டிலு
லுங்குடமுண்டாயிருக்கிறதுமில்லை சத்தாயிருக்கிறபடியிருந்தி
னைப்போல ரூபமாயுண்டானது தத்துவக்காரணமேயல்லாது
வேறில்லை இப்படியல்லவென்றால் காரியகாரணலட்சணத்துக்கு
விபரீதமாகும் ஆனதால் சகலலோகத்திலுஞ் சகலசாத்திரத்திலு
ம் சத்தினிடத்திற் சகலமுமுண்டாயிற்றென்று சொல்லுவதே சம்
மதம் - அசத்திலிருந்து சத்துண்டாயிற்றென்ற சுருதிக்குமே
ல் சுருதியானது அசத்திலிருந்து சத்துண்டாகுமோ வென்று
சங்கித்து அசத்தைப் பொய்யென்று நிஷேதித்துச் சத்திலே நி
ன்று அசத்துண்டாயிற்றென்று சொல்லுகிறது - ஆனதால் வார
ய் பிராந்த சிரோமணியே சுழுத்தியிற் பிராஞ்ஞனானவன் அ
வ்வியக்த சத்தத்தைப் பொருந்தி சாக்கிரதையாய் சாட்சியாக
ப் பார்த்திருப்பதால் சுழுத்தியைச் சூனியத்துவமென்றெப்ப
டி சித்திக்கும் - அப்படிச் சுழுத்தியைச் சூனியமென்றுனதுவே
சொல்லப்பட்டது எந்தவிதத்தில் நிச்சயம் பண்ணினாய் அ
தையெப்படி சூனியமென்றறிந்தாய் அதைச் சொல்லென்று
கேட்டவிடத்தில் மூடர்க்குள்ளே சிரேஷ்டனாயிருந்தவ
னும் அதற்கேற்றவுத்தரமென்னென்று சொல்லப்போகிறான்
இப்படிக்கேட்கின்றபேருக்கு அநுகூலமானவுத்தரஞ் சொல்லு
கிறவனொருத்தனுமில்லை ஆனதால் நாமே சொல்லுகிறோம் நீ
சுழுத்தியிலே கண்ட சூனிய பாவத்தைச் சூனியமென்றறிந்தவ
னெவன், நித்திரை போகிறபோது சூனியமென்று சூனிய
பாவமாகத் தன்னா லனுபவிக்கப்பட்ட சூனியத்தைத் தான்
தானே சொல்லுகிறான் ஆதலாலந்தச் சூனியமென்கிற வத்த
த்திலே தான்கெடாமலிருந்துகொண்டு சூனியத்தைப்பார்

இதேறுமென்கிறதன்சத்தையுமறந்து மூடனுனவன் தன்னையுங்கூட்டிச் சூனியமாகச்சொல்லுகிருன்—ஆகையினுல்யாதொரு புருஷனுக்கும் நித்திரையிற் சகலமும் லயித்திருப்பதால்தான் ஒன்றையும் அறியாதபடி சுழுத்தி சரீரத்தையடைந்திருக்கிருன் இந்தப்புத்தியாதி இந்திரியங்களில்லாமலிருக்கிற சுழுத்தியையறிந்துக் கொண்டிருக்கிறதெதுவோ அதுவே நிர்விகாரமான ஆன்மாவென்றறி—இப்படிக் கொத்த சயஞ்சோதியான ஆன்மப்பிரகாசத்தினுற் பிரமாண்டத்தில் சூரியசந்திராதிகளும் பிண்டாண்டத்திலிருக்கிற தேகேந்திரியாதிகள் சகலமும் விளங்குகின்றது.

விறு- அதெப்படியெனின்.

விடை- பிரகாசமான சூரியனைத்துலக்குவிக்கிறதற்கு வேறொரு பிரகாசாந்தரமான வஸ்து பூமியிலெப்படி காணவில்லையோ அப்படியே யான்மாவைத்துலக்குவிக்கிறதற்கு வேறொருவஸ்துவுமில்லை, யாதொரு சாக்ஷிசெய்பவை சத்திகளென்றறியப்படுகிறதோ அதுவேயான்மா, அப்படியறிந்து வருகிற ஆன்மாவை மெய்யென்றறியப்படும்.

விறு- அதெப்படியெனின்.

விடை- சகலத்தையுந்தகிக்கிறது அக்கினி அந்த அக்கினியைத் தகிக்கிறபதார்த்தம்வேறொன்றெப்படியில்லையோ அப்படியே சகலத்தையுமறிகிறது ஆன்மா அந்தஆன்மாவையறிகிறவன் ஒருவனுமில்லை—ஆனதால் அறிவுரூபமாய்சுயம்பிரகாசமாய்த்தானேயடைந்திருக்கிற ஆன்மாவானது தன்னைவிட அறிகிறதற்குவேறே யொருஅறிவில்லாததால் தன்னாலே தன்னையறியவேணும்—திரிசியமாயிருக்கிற புத்தியாதிகளெல்லாம் சுழுத்தியில்லயமானதால் தானொருத்தனாயிருந்துக்கொண்டு காணாதவன்போலவுங் கேளாதவன்போலவும் அறியாதவன்போலவுமிருக்கிருன் இந்தச் சுழுத்திரூபமான அந்தகாரத்துக்குத்தானே சாட்சியாய்நிருவிகற்பமாய் ஏகமாயிருக்கிருன் ஆதலாற்சுழுத்தியிலான்மாவுண்டென்பதிற் பிரமாணந்தானே.

விறு- அதெப்படியெனின்.

விடை- நித்திரைபோயெழுந்திருந்ததன்னுலேயே நானிருந்து நினைப்படி நினைத்துக்கொள்கிருன்.

வினா- அதேதெனின்,

விடை- யாதொருவனும் நான் சுகமாய் நித்திரை போனேன் நா
னொன்றுமறியேனென்கிற அனுபவமே ஆன்மா விருக்கிறதற்கு
ப்பிரமாணம் மேலும், சுழுத்தியானந்தமய மென்றும் அன்னிய
வஸ்துக்களில்லையென்றுந் தானென்கிறதில்லையென்றுஞ் சுழுத்
தியிலனுபவித்ததைத் தூங்கியிருந்தவனினைத்துச் சொல்லுகிறான்.

வினா- அதேதினாலெனின்,

விடை- எவனாலே யெது அனுபவிக்கப்படுகிறதோ அவனாலதை
நினைக்கவுஞ் சொல்லவுங்கூடும் — அதுதவிர அன்னியனா
லனுபவித்த பதார்த்தத்தினுடைய நினைவு வேறொருத்
தனுக்குத் தோற்ற மாட்டாது ஆனதால் சுழுத்தியிலே நானெ
ன்கிற ஆன்மாவிருக்கிறதற்குப் பிரமாணமாகப் பெரியோர்க
ளாலும் பாலவிருத்தாதிகளாலும் அறியப்பட்டிருக்கிறது.

வினா- இதற்கடையாளமேதெனின்,

விடை- முன்னிருந்த நினைப்பே பின்னும் வருகிறது, சுகமா
ய் நித்திரை போனேனென்கிறதே யடையாளம், பூர்வமொ
ன்றை யனுபவித்ததில்லாமற் போனால் பின்பு முன்பனுப
வித்த நினைப்புப்பிறக்கமாட்டாதென்கிற யுக்திகளும் ஆன்மாவு
ண்டென்பதிற்பிரமாணம் — மாண்டூக்கிய வுபநிடதத்திலும் ஆ
ன்மாவானவர் நித்திரையிலொருகாரியங்களுங் கோரவில்லை, அ
வர் பிரஞ்ஞானகனனாய் ஆனந்தமயனாய் ஆனந்தபோக்தாவாயி
ருக்கிறாரென்று சொன்னதால் சுழுத்தியில் ஆன்மா விருக்கிறாரெ
ன்பதிற் சந்தேகமில்லை.

வினா- சுழுத்தியென்பதேதெனின்,

விடை- ஆன்மாவானது ஒன்றுங் கோராதபடி சொப்பனமுமி
ல்லாதபடியிருக்கிறதே சுழுத்தி அந்தச்சுழுத்தியில் ஆன்மாவி
ருக்கிறாரென்று சுருதியாதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் ஆ
ன்மா அழியாமல் சுழுத்தியிலிருக்கிறதற்குச் சாஸ்திரங்களே பிர
மாணம் — அனுபவத்திலும் சுழுத்தியிலொன்றுங் கோராதபடி
சொப்பனத்தையுங் காணாதபடி யிருந்தோமென்கிறதற்குத்
தானில்லாவிட்டாலிதுகள் கூடாது ஆகையால் ஆன்மாவிருக்கி
றாரென்று அனுபவிக்கப்பட்டது, இதற்குமுன் சாட்சிப்பிரமா
ணங்களாய்ச் சொன்ன சுருதி சாஸ்திரங்களினால் ஆன்மாவை

சாட்சியாகப்பெரியவர்களால் அறியப்பட்டிருக்கிறது — ஆனை தாலித்த ஆன்மாவைக்கேவலமென்றுஞ் சுத்தமென்றுஞ் சச்சி தானந்தலட்சணமென்றும் பிரத்தியகான்மசொரூபமென்று ஞ்சொல்லப்படும்.

வினா- சச்சிதானந்தலட்சணந்தானேதெனின்,

விடை- காலத்திரயங்களிலும் அவத்தாத்திரயங்களிலு மழியா தபடியிருக்கின்றது சத்ரூபத்துவமாம், காலத்திரயத்திலு ம் பிரகாசமான அறிவைப்பொருந்தின சைதன்னியமாயி ருப்பது சித்ரூபத்துவமாம், அகண்டமாய்த் தடையற்ற ஆனந்தத்துவமாயிருப்பது ஆனந்தத்துவரூபமாம்.

வினா- இதிற்சத்தாவதேதெனின்,

விடை- யாதொருமனுஷனுக்குஞ்சாக்கிர சொப்பன சுழுத்தி யிலிடைவிடாமலான்மா விருப்பதசந்தேகமானது நாச மின்றிருப்பதால் காலத்திரயத்திலுமான்மா சத்தாயிருக்கிற தென்பது — ஆன்மாவாகிறநான் சதாகாலத்திலு மிருக்கிறே னென்பதி விடைவிடாமலனேயாளங்கள் காணப்பட்டிருக்கி றது இல்லையென்பதொருக்காலுமில்லை ஆனதால் ஆன்மா வாகிற தனக்கு நித்தியத்துவஞ்சொல்லப்பட்டது — ஒருபோ தும் போப்போதும் பாலியகௌமாரயௌவனஞ் சராமுதலா ன அவத்தைகளிலுஞ் சாக்கிரமுதலான அவத்தைகளிலும் அன் னியமாயிருக்கிற விருத்திகளிலும் நற்புத்தியாயிருக்கும் போ துந் துற்புத்தியாயிருக்கும்போதுங் கெங்கையானது தன்னி லேயுண்டான அலைகள்தோறுஞ் சலம்விடாமலிருக்கிறதுபோ ல் சதாகாலமும் சகல அவத்தைகளிலும் நானென்று சாட்சியா யேகரூபமாய் சத்ரூபமாயிருக்கின்றதென்றறி — இவ்வகைகா ராதிகள் நிமிஷநிமிஷத்தோறு மொருபதார்த்தத்தில் பரிண மிக்கிறதும் அநித்தியத்தோடுகூடினதுமாயிருக்கிறவிகாரங்களோ ட்பொருந்திப் பின்னமாகின்றது, சத்ரூபமான ஆன்மா நீக்கமற மாயிருக்கிறதால்சதாநித்தியசொரூபமென்றறி-சாதொருசொ ப்பனத்தைக்கண்டேனு அந்தநானேசுகமாய் நித்திரைசெய்தேனாய் சாக்கிரத்தில் விழித்தே னென்கையாலும் இந்த அவத்தாத்திர யங்களிடத்திலுஞ் சத்தாமாத்திரமாய்த் தானிருக்கிற திறலும் சத்ரூபமென்பதிற் சந்தேகமில்லை — சுருதியில் சோடசகலையு டையவன் சிதாபாசனன்றி ஆன்மாவல்லவென்று சொல்லு

னாலும் ஆன்மா நிட்களமாகையாலும்லயமில்லை, லயமில்லாமையால் ஆன்மா நித்தியமென்றறி.

வினா- சித்தாவதேதெனின்,

விடை- ஜடமாயிருக்கிற பிரபஞ்சத்தைத் துலக்குவிக்கிற சூரியன்பிரகாச சொரூபமன்றி ஜடசுபாவ மெப்படியில்லையோ அப்படியே புத்தியாகிய ஜடத்தைத்துலக்குவிக்கிற ஆன்மா சித் ரூபமென்றறி — ஜடங்களாயிருக்கிற சீவர்கள் முதலான பதார்த்தங்களுடைய துலக்கத்துக்குச்சூரியாதிப்பிரபையைத் தவிரவேறிடத்திலுஞ் சுதா துலக்கமெப்படியில்லையோ அப்படியே புத்தியிந்திரியதேகாதிகளுக்குஞ் சுதா துலக்கமில்லை ஆதலால்யாதொருசிற்பிரகாசத்தைத்தொட்டு இந்தத்தேகேந்திரியாதிகள் விளங்கும் அதுவேசின்மயசொரூபம் அப்படிக்கொத்தசின்மய சொரூபத்தைச் சுருதிசம்மதமாகத்திஷ்டாந்தத்தில் ஜடபதார்த்தங்களுக்குச் சூரியனெப்படியோ அப்படியே தாஷ்டாந்தத்திலும் புத்தியாதிகளைத் துலக்குவிக்கிற ஆன்மாசின்மயமென்றேசொல்லுகிறது—அப்படி சூரியனானவன் தன்னைத்துலக்கு விக்கிறதிலும் தனக்கன்னியமானபிரபஞ்சத்தைத்துலக்கு விக்கிறதிலுந்தன்னைத்தவிர வேறேயொரு அன்னியப்பிரகாசத்தை யெப்படி யபேட்சிக்கவில்லையோ அப்படியே ஆன்மாவுந்தன்னைத்துலக்கு விக்கிறதிலுந்தனக்கன்னியமான தேகேந்திரியாதிகளைத்துலக்கு விக்கிறதிலுங்காரணமாவது சின்மயமென்றேயறி—ஆன்மப் பிரகாசமானது வேறொரு பிரகாசங்களை அபேட்சிக்கவில்லை.

வினா- அதேதெனின்,

விடை- தன்னுடையபிரகாசத்தினால் தானேவிளங்குகிற சுயஞ்சோதியானையால் இச்செகத்ரூபமான ஆன்மாவிற்குப் பரப்பிரகாசத்தை அபேட்சிக்கத்தேவையில்லை — ஆகையால் அந்தச் சிவப்பிரகாசத்தைச் சந்திரசூரியாக்கினி மின் முதலானதுகள் எள்ளளவாகிலுந் துலக்குவிக்கமாட்டாது இந்தச்சந்திர சூரியாதியாகிய செகத்துஞ் சித்ரூபப்பிரகாசத்தினாலே விளங்கப்பட்டுக் கொண்டு வருகிறது ஆதலா லிவ்வான்மாவேயாவியாதிசாக்கிரமாதிசகலாவத்தைகளிலுமிருக்கின்றதென்றறி — இவ்வான்மாவைய சொரூபியானதா னானந்த பரிபூரணமேதன்னுடையலட்சணம்.

வினா- அதெப்படியெனின்

விடை-தனக்கன்னியமாகிய பதார்த்தங்களிடத்திலேயுஞ்சுகமென்றுபிரீதிவைப்பதான்மா சுகவேதுக்களாயிருக்கிற சகலவிஷயங்களிலும்அவதியோடேகூடினவானந்தங்காணப்பட்டிருக்கிறது ஆன்மாஆனந்தமானால்ஒருக்காலு மவதியில்லாததானதால் அந்தப்பிரமானந்தமேதன்னுடைய ஆனந்தமென்றறி

வினா- அதெப்படியெனின்,

விடை- பிராணிகளுக்கு இந்திரிய நஷ்டமாகியுந்தேக சீரணமாகியும் பிராணன்போகிற தருணத்திலின்னம் பிழைத்துக்கொள்வோமென்கிற வாசையிருப்பதா லான்மா பிரியவத்துவென்பதிற் சந்தேகமில்லை—ஆகையால் சகல சரீரங்களுக்கும்ஆன்மாபரமானந்தசொரூபம், யாதொருஆனந்தத்தினால் சகல விடயானந்தங்களும் பிறக்குமோ அந்தவிடயானந்தங்களும் ஆன்மானந்தத்தைத்தவிரவேறில்லை ஆதலால் ஆன்மா சுகசொரூபமென்றேயறி-புத்திரகளத்திரங்களைக்காட்டிலும் அன்னியமானதே கேத்திரியாதிகளைக்காட்டிலும் ஆன்மாப்பிரியவஸ்துவாகையால்ஆன்மாபரமானந்தசொரூபியென்றறி, உலகத்தில் ஆபத்துசம்பத்துக்களிரண்டினுலும் பிரியமாயிருக்கிறவஸ்துபிரியமாயிருக்குமே தவிர வொருக்காலும் அப்பிரியமாகமாட்டாது அதுபோல ஆன்மாவொருக்காலும் அப்பிரிய வஸ்துவல்லவென்றறி—சகலப்பிராணிகளுக்கும்ஆன்மா அதிகப்பிரியவஸ்துவேதவிர அப்பிரியவஸ்துவல்ல.

வினா- அதேதெனின்,

விடை- புத்திரமித்திரகளத்திராதிகளையுந் தனதான்னிய முதலாகிய பதார்த்தங்களையுங்கிரகாதிவியாபாரம்உழவுபசுக்கள்சம்ரட்சணைராஜசேவைமுதலாகியகிரியையாதிகளையும்ஆன்மசுகத்தை இச்சித்தேயிச்சித்திருக்கிறார்கள்—பிரவிர்த்தி நிவிர்த்திமுதலாகிய தொழில்களெல்லாந்தன் சுகத்துக்கே தவிர அன்னியனுக்காகச்செய்யவில்லை ஆகையால்ஆன்மாபரமசுகசொரூபியென்றறி—வாராய் சிஷனே முன்சொன்ன ஆன்மா ஆனந்தசொரூபியானதால்சகலவஸ்துக்களைக்காட்டிலும் சிரேஷ்டமென்று சொல்லப்பட்டது,யாதாமொருத்தனிப்போது நாம்சொன்ன ஆனந்தசொரூபமான ஆன்மாவைத் தவிரஆனந்தம்வேறேயொன்றிருக்குமென்றெண்ணுகிறானோ அவன்சகலதுக்கத்தையு மடைவானென்றறி,

வினா- இப்படிசொன்ன குருவைப்பார்த்துச் சீஷன் கேட்டது படி, ஸ்வாமீ! அடியேன் அநேகமாயிருந்தாலுஞ் சாஸ்திரங்கள் கேட்கிறதும் அந்தக்கேள்வியினாலுண்டான குற்றங்களைப் போக்கிக் கொள்ளவேண்டியது, பரமாத்மாவுக்கு அஞ்ஞானிகளுடையவர்க்கு அபரோக்ஷத்துக்கிடமாகாது ஆனதால் ஆன்மாவும் அன்னியர்களும் அன்னியமான்மாவென்பதில்லையென்று நினைத்து அவ்வான்மாவுக்குச்சுகத்தைக் கோரிச் சகல ஜனங்களும் பிரயத்தனம்பண்ணுகிறார்கள் — சகல ஜீவர்களு மான்மாவுக்குச் சுகத்தேடுகையிற் பிரயத்தனம் பண்ணுகிறதென்ன? இந்தச்சந்தேகங்களை உம்முடைய கிருபையினால் நிவர்த்திக்கவேணுமெனின்,

விடை- இப்படிசொன்ன சீஷனைப்பார்த்துக் குருவானவர் சொல்லும்படி, மூடனாயிருக்கிறவன் ஆனந்தசொரூபனாயிருக்கிற தன்னையறியாதபடியினாலே வெளியிலே சுகமிருக்கிறதென்று அனந்தசுகத்தைத் தேடப்பிரயத்தனம்பண்ணுகிறான் அறிந்தவன் எத்தனம்பண்ணவில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- கிருகாதிகளிற் புதைத்திருக்கிறதனத்தை அறியாதிருக்கிறவன் புறத்திலே பிச்சைதேடுகிறான் அந்தப்புதையலை அறிந்தவனெப்படி பிச்சையெடுப்பான் ஆகையாலஞ்ஞானியாயிருக்கிறவன் துக்கரூபமான தூலசூக்குமசரீரங்களைச் சுபாவமாகத்தானென்று நினைத்துச் சுகசொரூபமான தன்னைமறந்து துக்கத்துக்கங்களைக் கொடுக்கிறதாயிருக்கின்ற விடயங்களைச் சுகமென்று இச்சிக்கின்றான் ஞானியாயிருக்கின்றவன் ஒருக்காலும் விடயங்களையிச்சியான்.

வினா- அதேதெனின்,

விடை- துக்கத்தைக்கொடுக்கிறதாயிருக்கின்றவஸ்து வொருக்காலுஞ் சுகத்தைக்கொடுக்கமாட்டாது துக்கமேகொடுக்கும்.

வினா- அதெப்படியெனின்,

விடை- துக்கத்தைக்கொடுக்கிற விடத்தைப்பானம்பண்ணினவனுக்கு அந்தவிடமானது மரணத்தைக்கொடுக்குமன்றிப் பிழைக்கப்பண்ணாது அதையறிந்த ஞானியானவன் துக்கத்தைக்கொடுக்கின்றதாயிருக்கிறவிடயங்களை இச்சியான் பாமரனாயிருக்கிறபேர் ஆன்மாவன்னியர் சுகமன்னியமென்று நிச்சயித்

து வெளியிலிருக்கிற விடயசுகத்தின் பொருட்டு நிச்சயமாய் யத்தனம் பண்ணுகிறார்கள் சந்தேகமில்லை—உலகத்தில் தனக்கிஷ்டமான வஸ்துவைக் கிரகிக்கிறதிற் சகலசனங்களுக்குந் தோற்றுகிற வானந்தமெதுவோ அவ்வானந்தம் வஸ்துவினுடைய தொழிலேயல்லாது மனதிற் காணும் வஸ்துதர்மமானால் மனதிலெப்படித் தோற்றும்—மனதுக்கு அன்னியமான வஸ்துவினுடைய தர்மம் மனதில்தோற்றுமென்பதெங்குங்காணோம்.

வினா- ஆனால்அந்தவஸ்துதர்மந்தானானந்தமோவெனின்,

விடை- அவ்வஸ்துஞ்சடரூபமானதால்அதற்கும்ஆனந்தமென்பது கூடாது.

வினா- ஆனால்மனதினுடையதர்மந்தானானந்தமோவெனின்,

விடை- மனதுஞ் சடரூபமானதால்மனதுக்கும்ஆனந்தமென்பது கூடாது ஆதலாற்சுகஞ்சடதர்மமென்கிறதுவோரிடத்திலுங்காணவில்லை அனுபவிக்கப்படவுமில்லை.

வினா- ஆனால்ஆன்மாவினுடையதர்மம்ஆனந்தமோவெனின்,

விடை- ஆன்மாகுணமில்லாமல் நிற்குணமானபடியினால் ஆன்மாவேறென்பதும்ஆனந்தம் வேறென்பதுங் கூடாது ஆகையால் ஆனந்தமேயான்மாவென்றறி—பூர்வபுண்ணியபலத்தினாலிட்டவஸ்துக்களைப்பார்க்குமிடத்தில் சுத்தசாத்துவிதம் பொருந்தின சித்தத்தில் சொச்சதிரவியமான சலத்திற் பிரவிம்பிக்கிற சந்திரனைப்போல ஆனந்த லட்சணமான ஆன்மாப்பிரதி விம்பிக்கின்றது—மேலும், அந்தச்சித்தத்திற் பிரதிவிம்பிக்கிற ஆபாசானந்தமானது மிகுந்தபுண்ணிய பலத்தினாலுங் குறைந்தபுண்ணிய பலத்தினாலும்மிகுந்துங்குறைந்துங்காணப்படும்—சுருதியில் சார்வபௌமானந்த முதல் பிரமானந்தம்வரையில்யாதோரானந்தங்கள்தாரதம்மியமாயிருக்குமோ அவ்வானந்தங்களதிசயமாகவுமுடிவில் அழிந்துபோவதாகவுமிருக்கின்றதாகையால் அவ்வானந்தங்கள் புண்ணிய சாதனமாய் வருகிற விடயானந்தங்கள்அதுகள் புண்ணியம்பண்ணுகிறபேர்களால் போசிக்கப் படுகிறது இப்படிப் போசிக்கப் படுகிற விடயானந்தமானது போசிக்கிற போதும் போசியாமலிருக்கிறபோதுந் துக்கத்தையேகொடுக்குமென்று சொல்லப்படுகின்றது.

வினா- அதெப்படியெனின்.

விடை- விடங்கலந்தஅன்னத்தைப் புசிக்கிறகாலத்திலும் புசித்தபிறகுந் துக்கத்தையேகொடுக்குமன்றிச் சுகத்தைக் கொடுக்கமாட்டாது அதுபோலஉலகத்தில் பிரமாதிபோகங்களையடைந்த புருஷர்களுக்கும் போகாந்தரத்திலே அநுபவித்து போகின்றதுக்கமிருக்கும்—இதுவன்றியும்ராஜசன்னிதானத்திற்போகின்ற மந்திரிதளவாய்பிரதானிகளுக்கு மொருவர்க்கொருவர்தாரதம்மிய பேதமெப்படியோ அப்படியே பிரமாதி போகங்களையடைகிற செந்துக்களுக்குந் தாரதம்மியமானது க்கமிருக்கும்—ஆதலால் விவேகியானபேர்கள் பிரதிபிம்பமாயிருக்கிற விஷயானந்தங்களை ஆசிரயிக்காமல் பிம்பபூதமாயிருக்கிற ஆனந்த லட்சணமான ஆன்மாவை ஆசிரயிக்கவேணும் இந்தப்பிம்பபூதமான ஆனந்தம் சாசுவதம் தொய்தமில்லாது அத்துவைதம், நித்தியம், ஏகம், நிர்ப்பயம் என்றுசொல்லப்படும், இதில்பிரதிபிம்பமாயிருக்கின்ற ஆபாசானந்தமும் அந்தப்பிம்பானந்தம்போலவேகாணப்படுகின்றது.

வினா- அதேதெனின்,

விடை- பிரதிபிம்பானந்தமானது, பிம்பானந்தமூலமாகையாலும் பிம்பானந்தத்தைத்தவிரப் பிரதிபிம்பானந்தஞ் சித்தியாதாகையாலும்பிம்பானந்தம்போல்பிரதிபிம்பானந்தமுங் காணப்படுகின்றது அந்தநிர்விகாரமான பிம்பானந்தத்தையும்விகாரமான பிரதிபிம்பானந்தத்தில் ஆனந்தமென்று காணப்படுகின்றது—ஆகையால் பெரியவர்களாயிருக்கிற பேர்களாலும்புத்தியினால்சாக்கிரசொப்பனங்களிலொருக்காலும் ஆன்மானந்தத்தையனுபவிக்கப்படவில்லை.

வினா- அதேதினாலெனின்,

விடை- அவித்தியாகாரியமான தேகேந்திரிய கரணக்கூட்டத்தினால் ஆனந்தசொரூபமான ஆன்மாசாக்கிரசொப்பனங்களிற் காணப்படவில்லை-இந்தத்துக்கரூபமானசாக்கிர சொப்பனங்களாகிய தூலசூட்சமங்கள் சுழுத்தியில்லையாகையால் பிரத்தியகானந்த லட்சணமான ஆன்மானந்தஞ் சுழுத்தியிற் காணப்படுகின்றது—அந்தச்சுழுத்தியிற் புத்திமுதலாகிய கருவிகரணாதிகளொன்றுமில்லாததால் ஆன்மா கேவலானந்தமாத்திரமாய்த் தன்னைவிட அன்னியமில்லாத அத்துவைதமாயிரு

க்கின்றதை நித்திரைதவிர்ந்தெழுந்த சகலசனங்களானும் ஆன்மாசுகமென்றுகாண்கிறார்கள் ஆகையால் ஆன்மாஆனந்த சொரூபமென்பதிற் சந்தேகந்தேவையில்லை — அப்பா! நித்திரை தவிர்ந்தெழுந்திருந்த உன்னாலும் சுகமாய் நித்திரைபோனேனென்கிற நினைவிருக்கையால் ஆன்மா சுகசொரூபியென்றும் உபநிடதார்த்த வாசனையை ஆக்கிராணியாதபடிக் கிருக்கிற ஸ்ருதிவாதிகளினால் துக்கமில்லை; அதே சுகமென்றுசொன்ன உபசாரமானவார்த்தையைச் சுத்தப்பொய்யென்றும்அறிவாயாக.

வினா- அதேதெனின்.

விடை- துக்கமில்லாமை, ஒடுருதலான துகளிற்காணப்பட்டிருக்கின்றது அவற்றிலானந்தங்காணப்படவில்லை ஆகையால்அந்தயுக்திகூடாது, ஆன்மாகேவலானந்தமென்பதில்நீசந்தேகப்படத்தேவையில்லை, பிரமாணியாகிய சகலசெந்துக்களுந்தங்கள் தங்களுடைய குணமாய் ஆனந்தலட்சணமானவேலைத்தை அனுசரித்துக்கொண்டு ஆனந்திகளாயிருக்கிறார்கள் — இந்தஆனந்தப்பிம்பானந்தமூலமென்பதிற்சந்தேவையில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- ஒருவன்பட்சணங்களிற் சுகத்தைக்கொடுக்கிற மதுரமானரசத்தை ருசிபார்க்கிறான்அந்த ரசமானது வெல்லத்தினுடைய மதுரமல்லாமல் பட்சணங்களுடைய மதுரமல்ல அப்படியே விடயசந்நிதானத்திலே யாதோரானந்தந் தோன்றுகின்றதோ அது பிம்பானந்தப்பிரகாசமன்றிச் சடமானவிடயானந்த மல்லவென்றறி — யாதொருத்தனுக்கு எந்தெந்த விடயங்களோடே கூடுகிறபோது எந்தெந்த ஆனந்தங்காண்கிறதோ அந்தவானந்தம் பரப்பிரமானந்தமே பிரகாசிக்கிறதென்றறி.

வினா- அதெப்படியெனின்,

விடை- சந்திரப்பிரகாசத்தினால் ஆம்பல்புஷ்பமெப்படி மலர்கின்றதோ அப்படியே ஆன்மானந்தத்தினால்விடயானந்தம் பிரகாசிக்கின்றதென்றறி — இப்போது சொல்லிவந்தசத்துச்சித்தானந்தரூபத்துவம் ஆன்மாவுக்குச்சுபாவமேதவிர அன்னியமில்லை.

வினா- அதேதெனின்,

விடை- ஆன்மாநிர்க்குணமானதால்நிற்குணத்திற்குக்குணமேது

ருக்காலுங்கூடாது-இதுவன்றியும் ஆன்மாவைத்தவிர அன்னியவவஸ்தை நிசமாயிருந்தால் அதனுல் ஆன்மா தள்ளுபடும் அப்படியில்லாமலன்னியவவஸ்தையாகிய பிரபஞ்சம் பொய்யாய்ப்போகின்றபடியினுல் ஆன்மா ஒருக்காலுந் தள்ளுபடுகிறவரல்ல, சுருதியில் கேவலரென்றும் நிர்க்குணரென்றுஞ் சொல்லியிருப்பதால் ஆன்மாவுக்கு ஒருகுணமுங்கூடாது — ஆகையால் அக்கினிக்குச் சுபாவம் உஷ்ணப்பிரகாசங்களெப்படியோ அப்படியே யான்மாவுக்குச் சத்துச்சித்தானந்த மென்றுஞ் சுபாவமென்றறி — இப்படிக்கொத்த அத்துவைதமாகிய பரமான்மாவினிடத்தில் சுசாதிக விசாதிக பேதமுமில்லை-

விஞ- அதேதெனின்,

விடை- விசாதிகமாய்க்காணுகிற பிரபஞ்சந் தள்ளப்படுகிற படியினுல் ஆன்மாவினிடத்தில் விசாதிகா பேதங் காணப்படவில்லை, அஃதெப்படியென்றால் ரச்சுகுணத்துக்கு விபரிதமான சற்பகுணமெப்படி தள்ளப்படுகின்றதோ அப்படியே சத்தினிடத்தில் தோற்றிய செகத்தைத் தள்ளிச் சன்மாத்திரமாய்க்காணப்படுகிற தெதுவுண்டோ அதை அபவாத மென்று அத்துவைதத்தை யறிந்த பெரியவர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது — இப்படி சூட்சம புத்திகளாயிருக்கிற பேர்களால் பிரபஞ்சத்தினுடைய வுற்பத்திச் சத்தாயிருக்கிற பிரமத்தினிடத்தில் விளங்குகின்றதென்று அறிந்திருக்கையால் பிரபஞ்சஞ்சன்மாத்திரமென்று யுத்தியினுலறி — மேலும் நால்வகை யோனியிற்பிறந்த தூலசரீரங்களும் அதுகளின் போசிப்புக்கு யோக்கியமான அன்னபானுதிகளும் அதற்கிருப்பிடமான இந்தச் சகல பிரமாண்டங்களும் பஞ்சீகிருதமான தூலபஞ்சபூதமென்றேயறி — இந்தப் பிரபஞ்சமானது, பிரமத்தினுடைய காரியமாய்க்காணப்பட்டபடியினுல் இதைவிசாரிக்கிறபோது மண்ணின் காரியமான கடாசராவாதிகள் மண்ணைத்தவிர வேறாகாதது போல் பிரமமாத்திரமாய்க்காணப்படுகின்றது.

விஞ- அதேதெனின்,

விடை- அந்தக்கடாசராவாதிகளை யுள்ளும் புறம்பும் நன்றாய்விசாரித்துப்பார்க்கிறபோது மிருத்திகையைத்தவிரக் கடாதிகளில்லை ஆகையாலிந்தக்கடம் கழுத்தோடே கூடிவாய்குவிந்திருக்கிறதென்று சொல்லக்காரியமில்லை இதுவும் சொன்மாத்திரமேயல்லாது மிருத்திகையைத்தவிர வேறில்லை — இந்தக் கடாசராவாதிக

லோகமென்றும் சரீரமென்றும் நாமரூபபேதமாக மூடர்களாலே யொருவன்னொருத்தனே யெப்படிசொல்லப்பட்டிருக்கின்றதோ அவன் நாமரூபபேதமேதவிர விசாரிக்கிறபோது அவனுபேதமில்லை அதுபோல் பிரமகாரியமாயிருக்கப்பட்ட நான்வகையோனிகளாகிய சகலபூதஉபாதிகளென்கிற பிரபஞ்சமும் பிரமத்தைத்தவிர வேறில்லை, காரணத்தைவிடகாரியமொருகாலும் பேதமில்லாததுபோல் தோற்றப்பட்ட இந்தச் சகத்துக்கும் பிரமத்துக்கும் பேதமில்லையென்றறி.

வி௩- அதெப்படியெனின்,

விடை- தன் தன் குணமான சத்ததாதுக்களோடே கூடினபஞ்சீகிருத பூதங்களானசரீரங்களும் பஞ்சீகிருதபூதகாரியமான சூக்ஷமசரீரங்களும் சத்துவாதிகுணங்களோடே கூடி இதுகளுக்குக்காரணமான அவ்வியத்தமாத்திரமாய் ஆன்மாபாசத்துடன் கூடிவிளங்குகின்றது — இப்படி விளங்கப்பட்ட சரீரத்திரயங்களுக்கு ஆதார பூதமாய்கண்ட மாயநுதியாய்ச் சுத்த மாயேகமாய்சத்தாயிருக்கிற பரப்பிரமவஸ்துவைத் தவிரச் சரீரத்திரயவிகற்பங்களில்லை — அப்பா? ஒருபுருஷனுக்கு நேத்திரதோஷத்தினால் ஒருசந்திரனிரண்டா யெப்படி காணப்படுகின்றதோ அப்படியே ஒன்றாயிருக்கிற பிரமமும் புத்திதோஷத்தினாற் பின்னபின்னமாய்க் காணப்படுகின்றது அந்த நேத்திரதோஷமில்லாதவர்களுக்குச் சந்திரனொன்றாயெப்படிக் காணகின்றதோ அப்படிபுத்திரூடதலான தோஷரகிதர்களுக்குப்பிரமமொன்றாய்க்காணப்படும் — பழுதையினிடத்திற் பாம்பென்றுபிரமித்தவன் தீபங்கொண்டுவந்து பழுதையைப் பார்த்தநின்பின்பு பாம்பென்கிற புத்திபழுதையினிடத்திலெப்படிலயமாச்சுதோ அப்படியேபிரமத்தினிடத்தில் பிரமையினாற் பிரபஞ்சத்தைக்கண்டவன் குருவேதாந்த சகியங்களினால் பிரமானுபவத்தைக்கண்டுபிரமைதீர்ந்தாவைனுக்குப் பிரபஞ்சம் பிரமத்தினிடத்தில் அயிக்கியம் — இப்படிபிராந்தியினாற் பிறந்ததொய்தபுத்தியானதொழிந்து போகிறபோது சத்தாய் அத்துவிதமாய்ப்பரப்பிரமவஸ்துவேகமாயிருப்பதால் நிர்விகற்பமான பிரமத்தினிடத்தில் விசாதிகபேதமில்லை யென்றறி— உபாதியான மாயாவித்தைகளுள்ளபோது அபின்னமாயிருக்கின்றஆன்மாவானவர் சாதிகபேதம்போல் தோற்றுகிறார் அந்த உபாதிகளைச் சொப்பனம் போற்பொய்யென்று தள்ளுகிற

போது அந்தஉபாதிதோற்றமில்லாதபடியினால் இந்த ஆன்மா வுக்குச்சாக்ஷிகபேதமில்லாமல்பிரமப்பிரதிபாதகமாகவிருக்கும்.

விரு- அதெப்படியெனின்,

விடை- கடாகாசமானது கடமுடைந்தபோது மகாகாசத்துடன் கடாகாசமென்கிறது போயொன்றானதுபோல் ஸ்தூல சூட்சுமஉபாதிகளெல்லாமொழிந்தபோது ஆன்மா பிரம மாகவேயிருப்பானென்றறி—கடமிருந்தபோதுங்கடமில்லாத போதும்மகாகாசமெப்படியொன்றாயிருக்குமோஅப்படியே உபாதியிருந்தபோது மில்லாதபோதும் பரிபூரணமாயிருக்கிற ஆன்மாவொன்றேதவிரப்பின்னமென்று ஒருவராலுஞ்சொல்லக்கூடாது.

விரு- அதேதெனின்,

விடை- மண்ணைத்தவிரவேறில்லாதிருக்கிறகடாதிகள்பாண்டமாயிருக்கிறபேர்களுக்குப்பேதமாகக்காண்பதுபோலவும்ஒருவ பிம்பப்பிரதிபிம்பமென்றுங்க்ஷேத்திரமென்றுமெப்படிபின்னமாய்த்தோற்றுகின்ற தோவப்படிபோலவும்சகத்துக்குமகத்தாயிருக்கின்றபரப்பிரமவஸ்துபிரமையினாலேகற்பிக்கப்பட்டவஸ்துக்களோடேகூடிப்பின்னமாகவேதோற்றுகின்றது,அந்தப்பிரமையைத்தவிர்த்தாலொழியவொருக்காலும் ஆன்மாவுக்குப்பேதமென்கிறதில்லை ஆதலாலான்மா பரிபூரணர் பின்னமென்பதொருக்காலுங்கூடாது —பிரமத்திற்குமான்மாவுக்குமடிக்கடிபேதங்கற்பிதமேதவிர வாஸ்தவமல்ல, சுருதியிலும் பிரமத்துக்குமான்மாவுக்குமயிக்கியந்திராளமாய்ச்சொல்லியிருக்கிறது.

விரு- அதேதெனின்.

விடை- சாமவேதோபநிடதத்தில்உத்தாலகர்சுவேதகேதுவுக்கு அத்தொப்தத்துவம் பொருந்தவேண்டித் தத்துவமசியென் கிறவாக்கியமுபதேசித்திருக்கின்றார் அதையுனக்குச்சொல்லுகிறேன்சாவதானமாய்க்கேள், அந்தஉபதேசவாக்கியம்வாச்சியார்த்தமென்றும்லட்சியார்த்தமென்றுமிரண்டுவிதமாயிருக்கும் அதில்வாச்சியார்த்தமானது பிரத்தியட்சவிரோதமாகையால்வாச்சியார்த்தங்களுக்கயிக்கியங்கூடாது, அவ்விரோதங்களெல்லாமொழிந்த தத்துவபதார்த்தங்களுடையலட்சியார்த்தங்களுக்கேஅயிக்கியங்கூடும்.

விரு- என்றிப்படிசொன்னகுருவைப்பார்த்து சிஷியன் கேட்கும்படி, சுவாமீ!தத்துவபதங்களுடையஅர்த்தமெத்தனைவிதம்

வாச்சியார்த்தமாவதென்ன? லட்சியார்த்தமாவதென்ன? வாச்சியார்த்தத்துக்கு அயிக்கியங்கூடுகிறபோது அந்தவிரோதமெப்படியில்லாமற்போகும்? தத்துவமசியென்கிற வாக்கியத்திற்குலெட்சியார்த்தமான ஜீவப்பிரமாயிக்கங்கூடுகிறதில் எந்தலட்சணை சொல்லப்பட்டிருக்கின்றது? இதுகளைக்கருணையினால் அடியேனுக்குநன்றாய்த்தெரியச்சொல்லவேணுமெனின்,

விடை— வாராய் வித்துவானாயிருக்கிற சிஷனே இன்னைக்குன்னுடையதபசானது நிறைவேறியது இந்தவாக்கியார்த்தசிரவணத்தினால்மகாநல்லஞானமுண்டாம் இந்தத்தத்துவபதங்களுடைய அர்த்தத்தைத்தெரிந்து விசாரியாதபடியெவ்வளவுகாலமிருக்கிறார்களோ அவ்வளவுகாலமும் அந்த மனுஷர்களுக்குச்செனன மரணரூபமான சம்சாரசாகரமுண்டு—ஆதலால் சற்புருஷாளுக்குச்சச்சிதானந்த அகண்டாகாசரூபாவஸ்தையானது இந்தவாக்கியார்த்தசிரவணத்தினாலுண்டான அபரோட்சஞானத்தினால்மோட்சசாதனஞ்சித்திக்கும். முமூட்சுவாயிருக்கிறபுருஷனானவன்செனனபந்த மொழிவதின்பொருட்டு இந்தவாக்கியத்தை நன்றாயறியவேணும் ஆகையால் நீயுஞ்சாவதானமாயிக்கேள் உனக்குத்தெரியும்படி நன்றாய்ச்சொல்லுகிறோம்.

வினா— அதேதெனின்,

விடை— மகாவாக்கியங்களுக்கு வாச்சியார்த்த லெட்சியார்த்தபேதமாக அர்த்தங்கள்பலவிதங்களாய்ப் பெரியவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது அதைஉனக்குச்சொல்லுகிறோம் கேளீர்.—தத்துவமசியென்கிறவாக்கியத்தில் தத்தொம் அசியென்றுமூன்றுபதமாயிருக்கும் அதில்முந்தினபதமானதற்பதார்த்தத்தினுடையஅர்த்தமிங்கேசொல்லுகிறோம்.

வினா— அதேதெனின்,

விடை— சாஸ்திரார்த்தங்களை யுணர்ந்தபெரியவர்களால் தற்பதவாச்சியார்த்தமென்றுந்தற்பதலட்சியார்த்தமென்றுஞ்சொல்லப்படும் அதில்பெரியோர்களாற்சொல்லப்பட்ட வாச்சியார்த்தத்தைமுந்திச்சொல்லுகிறோம்.

வினா— அதெப்படியெனின்,

விடை— சத்துவகுணமிகுத்தசுத்தச்சிற்பிரதிபிம்பத்தோடே கூடிச்சமஷ்டிரூபவஞ்ஞானமாகிறஆகாசாதிவிராட்புருஷனந்தமான காரியத்துடன் கூடினபிரதிபிம்பாவிச்சின்ன சைத

ஸ்வியமானது சச்சிதானந்த லட்சணத்தைப்பொருந்தியுஞ் ச
ர்வஞ்ஞத்துவமீசாத்துவம் அந்தரியாமித்துவமாகிய குணங்க
ளோடே கூடிக்கொண்டிருக்கிறதாயுஞ் சிருட்டிஸ்திதி சங்கார
தர்மங்களுடன் கூடினதாயுஞ் சகலப்பிரபஞ்சத்தையுந் தானே ஜ
னிக்கிறதாயுங்குணங்களினால் எண்ணத்தொலையாததாயுமிருக்
கின்றது, அந்த அவ்வியக்தமான பிரமமே வாச்சியார்த்த மென்
றுசொல்லப்படும் இனிசுருதிசம்மதமாய்ச் சொல்லப்பட்டி
ருக்கிற தற்பதலட்சியார்த்தத்தைச் சொல்லுகிறோம்.

வினா- எப்படியெனின்,

விடை- சத்தபரிசரூபரசகந்தங்களில்லாததாயும் வாக்கினால்வ
சனிக்கப்படாததாயும்மனதினால் எண்ணப்படாததாயும்பா
ணியினால் கிரகிக்கப்படாததாயுமென்றினுந் தள்ளப்ப
டாததாயும் ஒருதொழிலுமொட்டாததாயுஞ் சூனியமேயென
லட்சணமாய்ப்பொருந்தினதாயும் அபரோக்ஷமாயுமிந்திரியாதீ
தமாயுஞ் சத்துவாதிகுணங்களில்லாததாயும்விலட்சணமாயுமி
ராந்தியினால்ஆரோபிக்கப்பட்டவஸ்துக்களுக்கு அதிட்டானமா
யுஞ்சத்தாயும்அத்வைதமாயுஞ்சுத்தபுத்தமுக்தகைவல்யானந்த லட்ச
ணமாயுமிருக்கின்ற நிர்விசேஷபரப்பிரமமே தற்பதலட்சியார்த்
தமென்றுசொல்லப்படும்-இனிதொம் பதத்துக்கும்வாச்சியார்
த்தலட்சியார்த்தமென்று இரண்டுவிதமாய்ச் சொல்லப்பட்டிரு
க்குந்தொம்பதவாச்சியார்த்தத்தை முந்திச்சொல்லுகிறோம்.

வினா- அதேதெனின்,

விடை- மலினசத்துவம் பொருந்திச் சித்பிரதிபிம்பத்துட
னேகூடிப்புத்திமுதல் தூலசரீராந்தமாய்க் காரியகாரணலட்
சணமாகியவியஷ்டிரூபமான அவித்தையிற்பிரதிவிம்பித்து
ச்சீவனென்கிற பேரைப்பொருந்தியும்-சட்பாவவிகாரங்களுட
ன்கூடி நான்பாலன் நான்குமாரன் நான்யௌவனன் நான்பெரு
த்தேன் நான்இறந்தேனென்கிற தூலசரீரதன்மங்களுடனேகூ
டியும் பசிதாகசோகமோகஜராமரணமான ஷடூர்மிகளைப்பொருந்தியு
ம் நானூமைசெவிடன் குருடன்முடக்கிறையன் நான்போகிறே
ன்வருகிறேனென்கிற இந்திரியதர்மங்களுடனேகூடியுங் காமம்
சங்கற்பம்பொறாமை சந்தோஷம் பயம்கவலை மறதி இதுமுத
லானமனோதர்மங்களுடன்கூடியும்- நான் கர்த்தா நான்போக்
தா நான் சுகி நான் துக்கியென்கிற ஆங்காரதர்மங்களுடன்கூடி
யுந் திரிகரணத்தினாற் பண்ணப்பட்ட புண்ணிய பாவபலபோக

த்தின்பொருட்டுச் சொர்க்க நரகங்களையடைந்து அதிலுண்டா ன சுகதுக்கங்களைத் தன்னுடைய கர்மத்துக்கீடாய்ப் புசித் துக்கொண்டு பிரமையோடேகூடின புருஷனைத்தான் தொம் பதவாச்சியார்த்தமென்று சொல்லப்படும்.— இனி, தொம்பதல ட்சியார்த்தத்தைச் சொல்லக்கேட்பாயாக.

வினா. அதெப்படியெனின்,

விடை— அவித்தியாலட்சணமான தேகேந்திரியாதனமனோபு த்திப்பிராண அகங்கார ரூபமான வஸ்துக்களில் ஒட்டாததாயு ம்மனோவிருத்திகளுடைய சந்நிதியிலிருக்கிற ஸூர்யனைக் கல்லானது அதுகளையெப்படி துலக்குவிக்கின்றதோ அப் படியே இந்தப் பிராணேந்திரியாதி தேகத்துக்குள்ளே சாக்ஷி யாயிருந்து துலக்குவித்துக்கொண்டு அந்த தேகாவஸ்தைகளுக் கெல்லாஞ் சாக்ஷியாய் பிரத்தியக்ஷமாவையுந்தேகேந்திரியவியா பாரங்களைப்பார்த்துக்கொண்டிருக்கிறதாயும் அறிகிறதாயுமேக மாயுஞ்சத்தியமாயும் நிர்விகாரமாயும் பூரணமாயுங் கூடஸ்த மாயுஞ்சர்வப்பிரகாசமாயுந்தடஸ்தமாயுங் கூடஸ்தமாயுமிருக்கி, ற ஆன்மாவே தொம்பதத்துக்கு லட்சியார்த்தமென்றுசொல் லப்படும் அப்பா ! தத்துவபதங்களுடைய அர்த்தம் இப்படி சொல்லப்பட்டது இனிவாக்கியார்த்தத்தினுடைய நிர்ணயத் தைச்சொல்லுகிறோம்.

வாக்கியநிர்ணயம்.

வினா— அதேதெனின்,

விடை— தத்துவமசியென்கிறவாக்கியமானது சம்பந்தத்திரயங் களுடன் கூடியிருந்தால்தத்துவபதார்த்தங்களிரண்டுக்கும் அசிபதத்தினால் அயிக்கியங்கூட்டக்கூடும்.

வினா— அந்தச்சம்பந்தத்திரயங்களேதெனின்,

விடை— சாமாநாதிகரண்ய சம்பந்தமென்றும் விசேஷண வி சேஷியதாசம்பந்தமென்றும் லட்சியலட்சணபாவசம்பந்த மென்றுமென்றுவிதப்,அதில்தற்பதந் தொம்பதங்களிரண்டி க்குஞ்சாமாநாதிகரண்ய சம்பந்தமென்றுந்தற்பத தொம்பதா ர்த்தாளாயிருக்கிற ஜீவேசுவராளுக்கு விசேஷண விசேஷியதா சம்பந்தமென்றும்அதிஷ்டானமான பிரத்தியகாத்மா பரமாத் மாக்களுக்குலட்சிய லட்சணபாவசம்பந்தமென்றும் அறிஞர்க ளாற்சொல்லப்படும்.

வி-று- இதில்சாமாநாதிகாரண்யசம்பந்தமாவதேதெனின்,

விடை- பரோட்சத்துவமுதலான தர்மங்களுடன் கூடி[ன சைத]ன்னிய மெதுவோ, பிரத்தியட்சத்துவாதி தர்மங்கள் [கூடி]த்தினசைதன்யமெதுவோ அவ்விரண்டிற்குந் தத்வம்பதங்களினால் ஐயிக்கங்கூட்டுகிறதே சாமாநாதிகரண்யசம்பந்த மென்று சொல்லுகிறார்கள் — தற்பதார்த்தமான பரோட்சத்துவாதிதர்மங்களுடன்கூடின சித்துக்கும் த்வம்பதார்த்தமான அபரோட்சத்வாதி தர்மங்களுடன் கூடின சித்துக்கும் ஒன்றுக்கொன்றுபேதமாயிருக்கிற வாக்கியார்த்தத்தைத்தள்ளவேண்டித்திடமாகவிசேஷணவிசேஷியதாசம்பந்தங் காணப்பட்டிருக்கிறது — தத்துவபதார்த்தங்களிரண்டிற்குமையிக்கங் கூட்டுகிறதில்விருத்தாங்கிசமெது காணப்பட்டிருக்குமோ அந்தவிரோதத்தைத்தள்ளி அவிருத்தமாயிருக்கின்றசித்தோடேயைக்கங்கூட்டுகிறதேலட்சியலட்சணபாவசம்பந்தமென்றுபெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

வி-று- இதில்விருத்தாங்கிசங்களேதென்றுகிறதற்கு விசேஷணவிசேஷியதா சம்பந்தங்காணப்பட்டிருப்பதெதெனின்,

விடை- நீலோற்பலமென்கிறபோது வாக்கியார்த்தசங்கதிபோப்படிக் காணப்பட்டிருக்கின்றதோ அப்படியேதத்துவமசியென்கிறபோது வாக்கியார்த்தசங்கதிகூடாது.

வி-று- அதேதெனின்,

விடை- நீலத்துவம்படத்தைவிட்டு நீங்கிவிசேட்டமாயுற்பலத்தில் கூடினதுபோல்தத்துவபதங்களிலும்அன்னியோன்னியாபேதத்தைத்தள்ளி விசேஷணவிசேஷியத்துவமொரு பிரகாரமாய்க்கூடுகிறது — ஆதலால்அந்தவிசேஷணவிசேஷியத்துவம் நீலோற்பலமென்கிறவாக்கியத்தில் பொருந்தினதுபோல்தத்துவமசியென்கிறவாக்கியத்திற்பொருந்தாது,

வி-று- அதெப்படியெனின்,

விடை- வாக்கியார்த்தமாயிருக்கிற தத்துவபதங்களில் பிரத்தியட்ச பரோட்சத்துவாதி விரோதங்காணப் பட்டிருக்கின்றது ஆதலால்கூடாது.

வி-று- அந்தவிரோததர்மமேதெனின்,

விடை— தத்யதார்த்தமாயிருக்கிற ஈசுவரனிடத்தில் சர்வஞ்ஞத்துவம் சர்வேசுரத்துவஞ் சர்வஉத்தமோத்துவம் சத்தியகாமத்துவம் சத்தியசங்கல்பத்துவம் பரோட்சத்துவ முதலானதுகள் காணப்பட்டிருக்கின்றது ஜீவம்பதார்த்தத்தில் ஜீவத்துவங் கிஞ்சிக்ஞத்துவந் துக்கஜீவனத்துவம் அவித்தியாவசத்துவ மித்தவிரோதங்கள் காணப்பட்டிருக்கின்றது— ஆகலால் அந்தவிருத்ததர்மங்களைப்பொருந்தின தத்துவபதார்த்தங்களாகிற ஜீவேசுரருக்கு ஏகத்துவமெப்படிக்கூடும்— ஜீவேசுராளிரண்டு பேருக்கும் அப்படியொருவர்க்கொருவர் விருத்ததர்மங்களுடன் கூடியொருத்தருக்கொருத்தர் விலட்சணமாய்ப்பனியும் நெருப்பும் போலிருப்பதாலிவர்களுக்கு முக்கியமாயயிக்கியங்கூட்டுகிறபோது சுருதிஸ்மிருதிவிரோதமும்வருகு— சுருதியானதிந்தத்தத்துவ பதார்த்தங்களுக்கு அபியென்று அயிக்கியத்தைத் தாற்பரியமாய்ச் சொல்லியிருப்பதால் அந்தச்சுருதி வசனத்தை அங்கீகாரம்பண்ணவேணும்— இப்படிவாக்கியார்த்தங்களை அங்கீகரிப்போமென்றால் ஒன்றுக்கொன்று விருத்த மிருப்பதால் அங்கீகரிக்கக்கூடாது ஆகையால்லட்சணையை அங்கீகரிக்க வேண்டியிருக்கின்றது.

வினா— அதேதெனின்,

விடை— விட்டலக்கணையென்றும் விடாதலக்கணையென்றும் விட்டுவிடாதலக்கணையென்றும் திரிவிதமாயிருக்கும்.

வினா— ஆனால் விட்டலக்கணையாகிய கெங்காயாங்கோஷப்பிரதிவசதியென்கிறதினால் தத்துவபதார்த்தத்துக்கு அயிக்கங்கூட்டலாமோவெனின்,

விடை— முக்கியமாயிருக்கிறகங்காசலத்தைத் தள்ளிக்கரையைக் குறிக்கையாலும் தத்துவமசியென்கிறவாக்கியத்திற்கு அப்படியொன்றைவிட்டொன்றைக்குறிப்பதில்லாமல் அயிக்கியம் பண்ணுவதாலும் விட்டலக்கணையினால் அயிக்கங்கூட்டப்படாது.

வினா— சோணத்திஷ்டோதவேதோதாவதியென்கிற விடாதலக்கணையைக்கொண்டு அயிக்கங்கூடுமோவெனின்,

விடை— சிவலையும்வெள்ளையும்போகின்றதென்றுபொதுவசனமாய்ச்சொன்னதேதவிர இன்னதென்றுகுறித்துச்சொல்லாததால்விடாதலக்கணையினாலும் அயிக்கங்கூடாது.

வினா— பின்னையெதினால்தான் அயிக்கங்கூடுமெனின்,

விடை:- சயந்தேவதத்தனென்கிறதில் விட்டுவிடாத லக்ஷணையி
னால் அயிக்கமெப்படிக்கூடுமோ அப்படியே தத்துவமஸி
யென்கிற வாக்கியத்துக்கும் அயிக்கங்கூடும்.

வினா:- அதெப்படியெனின்,

விடை:- சயந்தேவதத்தனென்கிறவாக்கியார்த்தந்தேவதத்தனி
டத்தில்முன்காணப்பட்டதுரைத்தனம் தண்டிகைமுதலான
துகளும் அப்போதிலுண்டதேசகாலமுதலானதுகளும்பி
ன்புசுயம்பாகியாயிருக்கிற போதுண்டானசட்டைமுதலான
துகளும்இப்போதிருந்த தேசகாலமுதலானதுகளுமொன்று
க்கொன்று விருத்தமானதாலிவ்விரண்டு விரோதத்தையுந்த
ள்ளியந்தத்தேவதத்தனுடைய சரீரமாத்திரமர்த்தமாகக்கொ
ண்டு அவனேயிவன்; இவனேயவனென்று அயிக்கப்படுவது
போல் தத்துவமஸியென்கிறதில் தற்பதவாச்சியார்த்தமாகி
ய சர்வஞ்ஞத்துவ பரோக்ஷத்துவ முதலான விருத்தாம்சங்களை
யுந்தொம்பதவாச்சியார்த்தமாகிய கிஞ்சிக்ஞத்துவமுதலான
விருத்தாம்சத்தையுந் தள்ளித்தற்பத லட்சியார்த்தமாகிய
சின்மாத்திரமான பரமான்மாவுக்குந் தொம்பத லட்சியார்த்
தமாகிய சின்மாத்திரமான பிரத்தியகான்மாவுக்கும் அசிபத
த்தினால் அதுவேநீயாமென்று அயிக்கங்கூடும். — இப்படி
லட்சணையினால்அயிக்கானுபவமாய்க் கூடப்பட்ட சொரூபஞ்ச
ர்வோபாதிகளை யொழித்ததாயுஞ்சச்சிதானந்தமாகியும் அத்து
வைதமாகியும் நிர்விசேடமாகியும் நிராபாசமாகியும் வாக்கினால்
அப்படிக்கொத்ததிப்படிக்கொத்த தென்றுவமானமாய்ச் சொ
ல்லப்படாததாகியு மொன்றைக்கொண்டு காட்டப்படாததாகி
யும் ஆனந்தமாகியுஞ்சாந்தமாகியும்அச்சுதமாகியும் அதர்க்கிய
மாகியும் அபிரேயமாகியும்நிர்க்குணமாகியும் அகண்டாகாசப்
பிரமமாகியுமிருந்ததே அசிபதாயிக்கானுபவமாம். அப்பா! தத்
துவபதலட்சியார்த்தமான பிரத்தியகான்மாப் பிரமங்களுக்கு ஏக
த்துவம் பொருந்துகிறதற்கு உபாதிவிசேஷங்களில் விரோதங்
காணப்பட்டிருக்கின்றது, இப்படிக்காணப்பட்டிருக்கின்ற உ
பாதிவிசேடங்களைத்தள்ளுகிறபோது தத்துவபதார்த்தமான பி
ரத்தியகான்மாப்பிரமாயிக்கத்துக்கு ஒருவிரோதமுமில்லை. — இந்
தப்பிரத்தியகான்ம பரமான்மாவாகிற இரண்டுபேரிடத்திலுமு
பாதியும்உபாதிகளுடையகூட்டுறவும்உபாதி செய்கிறதொழிலை
யுந்தொழில்களின்விலட்சணமும்பிரமையினாற்பண்ணப்பட்
டதாயிருக்கின்றசகலப் பிரபஞ்சமும் கற்பிதமானதால் பொய்

யாய்ச் சொப்பனத்திற் கண்டபொருள்போல் சாக்கிரத்திலும் சத்தியமாய்க் காணப்படுகின்றது—நித்திரையினால் உண்டான சொப்பன சரீரதர்மங்களான சுகதுக்காதிப் பிரபஞ்சங்களுஞ் சீவேசுராதிபேதங்களுஞ் சத்தியமென்று நிச்சயம்பண்ணுகைக்கும் ஒருக்காலுங்கூடாது.

வினா- அதெப்படியெனின்,

விடை- மாயையினால் கற்பிக்கப்பட்ட தேசகால ஜெகதீசுராதி முதலான பிரமைகளும் அந்தச்சொப்பனம்போலவே பொய்யானதால் அதில் கற்பிதமான சீவேசுரவிரண்டு பேருமென்மெய்ப்பொருளென் பொரியன் ஆகையாலிருதிறவரும்பொய்யேயாம்—சொப்பன சாக்கிரங்களான இரண்டவஸ்தையிலும் பிராந்தியினால் உண்டான விகற்பங்களுஞ் செட்டிறதென பூமில் கணைத்தாரதம்மியமாய்க்காணவேண்டாம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- சொப்பனத்தில் ஒருவிடயத்தைக்கண்டிறதுங்கண்ட விடயமுமெப்படிப் பொய்யாய்ப் போகுமோ அப்படியே சாக்கிரத்திலே கண்டதுங் காணப்பட்ட விடயமும் பொய்யென்றறி—இந்தச்சாக்கிர சொப்பனங்களிரண்டும் அவித்தியா காரியமானபடியினால் சொப்பனம்போலவே சாக்கிரமுமாம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- காண்பானுங்காண்பனவுங்காட்சியுமாகிய திரிபுடி சாக்கிர சொப்பனங்களிரண்டிக்குஞ் சரியானதாலிரண்டிக்குந் தாரதம்மிய பேதமில்லை யென்றறி—சுழுத்தியில் சொப்பன சாக்கிரங்களில்லாதது எல்லாராலும் அநுபவிக்கப்படுகின்றது ஆதலாலிந்தச் சாக்கிர சொப்பனங்களிரண்டும் பொய்யானதால் இவ்விரண்டிக்கும்பேதமில்லை—வாராய்விவேகியான சீடனே பிரமத்தினிடத்திற் சுசாதிசாதிலட்சணபேதம் பிராந்தியினால் கற்பிக்கப்பட்டிருக்கின்றது அதுகாலத்திரயங்களிலும் பரமார்த்தமாகவில்லை யென்றறி—எசார்வேதத்தில் பிரகதாரணியவுபநிடதத்தில் செனகனைக்குறித்து யாக்ஞவற்கியமகாரிஷியானவர் சச்சிதானந்தத்தைத் தவிரவேறே யன்னியமொன்றுந்

காணப்படவுமில்லை, கேட்கவுமில்லை ருசிகொள்ளவுமில்லை யெ
ன்றும் பிரமத்துக்கு அன்னியமானவஸ்து ஒன்றுமில்லை யெ
ன்றும் பொய்த்தை நிஷேதிக்கிறார் ஆகலால் பிரமத்தில் கற்பி
தமான செகத்தாகிற பிரமைபோய் என்றறி—பிரமத்துக்க
ன்னியமல்லாங் கற்பிதமானதால் பிரமம் சதா அத்துவிதம் ச
கலவிகல்பசூனியம் நிருபாதிகம் நிருமலம் நிரந்தரானந்தகனை
ம் நிரதிசயபரமாயிருக்கின்றசொரூபமொன்றென்றறி—ஆகலால்
இந்தப்பிரமத்தைத்தவிர வேறே யன்னியமாமொரு வஸ்துவுமி
ல்லை, குணத்தோத்திரவுமில்லாமல் வாக்குப்பிரவிர்த்தியுமில்லா
மல் மனப்பிரவிர்த்தியுமில்லாமலிருக்கிற கேவலமாய்ப் பிரம
சாந்தமாய் அனந்தமாய் ஆனந்தமாத்திரமாய் சதா அத்தொய்த
மாயிருக்கிற பிரமமாத்திரமாய்க் காண்கிற தென்றறி—வாராய்
சீடனே இப்போதுனக்குச்சொன்ன அத்துவைமான சத்திய
சச்சிதானந்தாத்மக சராமரணமற்ற நித்தியமான வஸ்து எ
துவோ அதுவே நீயாகும் நம்முடைய வசனத்தைச் சத்தியமாக
வெண்ணிக்கொள்—நீ அன்னமயகோசமான தூலதேகமுமல்ல
பிராணனுமல்ல, இந்திரியங்களுமல்ல, வாக்குமல்ல, மனமுமல
ல்ல, புத்தியுமல்ல, அகங்காரமுமல்ல, இந்தத் தேகேந்திரியாதி
கூட்டுறவுமல்ல, ஆகலால் அந்தத்தேகேந்திரியமனோபுத்தியகங்
காராதிகளெல்லாவற்றையுந் துலக்குவித்துக்கொண்டு அதுகளுக்
கெல்லாஞ் சாட்சியாயிருக்கிற பரசொரூபசுயம்பிரகாசமானவ
ஸ்துவாகவுண்டோ அதுவே நீயாகும் உலகத்திலே யாதொருவஸ்து
பிறக்கின்றதோ அந்தவஸ்துவே விர்த்தியடைகிறது அக்காலம் வ
ந்தபோது அழிந்துபோகிறதுமாயிருக்கும் உனக்குப்பிறப்பு
பிறப்புமில்லை இந்தப்பிறப்பிறப்பு இரண்டுமில்லாததால் நீநி
த்தியனென்றறி—இந்தத்தேகமானது யாதொன்று பிறந்த
போது அதுவே விர்த்தியடைந்து கர்மக்ஷயத்தினால் நாசமடை
யும் நீயானால் இந்தப்பிறப்பு வளர்ப்பு முதலாகிய அவஸ்தைகளி
லும் இருந்து இந்த அவஸ்தைகளெல்லாமறிந்துக்கொண்டிருக்
கிற அறிவாகியசாட்சியே நீயாகும்—சுயம்பிரகாசமாய் சகலாத்
துமகமாகியுஞ்சாக்கிராதி அவஸ்தைகளிலும் அகம்அகமென்றறி
யாமலனுபவிக்கப்பட்டு விளங்கியும் புத்திமுதலான சமஸ்தவி
காரங்களிலும் அவிகாரமாயிருந்துக்கொண்டு அந்தவிகாரங்க

ளாயிருந்துவருகிற பிரமமெதுவோ அந்தக்கேவல ஞானமாத்திர சொரூபமே நீயாவாய் — உள்ளும்புறம்புங்கண்ட ஞானமெதுவோ அதுவேமூடபுத்திகளுக்கு ஆரோபித நாமரூபப் பிரபஞ்சம் போலக்காணுகின்றது.

வினா- அதெப்படியெனின்,

விடை- மிருத்திகையேகடசாரவாதிகள் போலவும் விசாரிக்கிலந்தமிருத்திகை நிர்விகாரமாயிருக்கிற தெப்படியோ அப்படியே சகலவிகாரங்களு மற்றுத்தன்னிலே காணப்பட்டுங் கேவலபோதமாத்திரமான யாதொருபிரமமுண்டோ அதுவே நீயாவாய்—அழிவில்லாதபடி சுத்தஞான மாகிய ஆனந்தசொரூபத்தினிடத்தில் கற்பிதமான ஆகாசாதிபஞ்ச பூதங்களுக் கெல்லாஞ் சித்தத்தைக் கொடுத்துக்கொண்டு தன்னுடைய பிரகாசமகிமையினால்சகலத்தையுமறிந்துக்கொண்டு கேவல ஞானமாத்திரமானபிரமமெதுவோ அதுவே நீயாவாய்—நிருமல மான அந்தக்கரணத்தைப்பொருந்தித் திடசமாதியில் இருந்தபெரியவர்களாலுங் கைகாணுதிருக்கிற ஆனந்தத்தைப் பிரத்தியட்சமாகக்கண்டு பரமாம் சக்கூட்டங்களினால் சந்தோஷிப்பட்டிருக்கிற கேவலஞானமாத்திரமான பிரம சொரூப மெதுவோ அதுவே நீயாவாய்—சுருதியில் அவ்வியமென்றும் அபார மென்றும் அனந்தமென்றும் அமிருத்தியமென்றும் அவ்வியத்தமென்றும் அட்சர மென்றும் அருசிரய மென்றும் அப்பிரமேய மென்றும் ஆனந்தமென்றும் அசற்கனமென்றும்அநாமயமென்றும் அத்வைத மென்றுஞ் சொல்லப்பட்ட கேவலபோதமாத்திரமான பிரமமெதுவோ அதுவே நீயாவாய்—சராயீடனே சொரூபமாகிய உன்னிடத்தில் சரீரத்தோடேகூடுறவும் அந்தச்சரீரத்தினுடைய தொழில்களும் பிராந்தியினாலேயாரோபிக்கப்பட்டிருக்கின்றது, பரமார்த்தமாய் விசாரிக்கு மிடத்தில் இவ்வாரோபங்களொள்ளளவு முன்னிடத்திலில்லை ஆகலால் உன்னைப்பிராணனாகப் பார்த்துக்கொண்டு மிருத்தியுவினுடைய பயத்தைவிட்டுவிடு—பிராந்தியினாலே யாரோபிக்கப்பட்டயாதொருதேகாதிப்பிரபஞ்சங்களையும் பிரபஞ்சமாகத்தானே பார்த்து பிராந்தியைத்தள்ளிவஸ்து திருஷ்டியாய்ப்பார்க்குமிடத்தில்அந்தவஸ்துவே நீயாவாய்உன்னைத்தவிர வேறே அ

ன்னியமானவஸ்து உலகத்திலேயேசூடயில்லை ஆகலால் அத்வைதா
ய்நதனாயிருக்கிறவனுக்குப் பயமென்ன—இந்தச் சகலப் பிரப
ஞ்சமும் பிரமசொரூபமாயிருக்கிற நாமேயென்று பார்க்கிற
வனுக்குப்பயமெங்கிருந்துவரப்போகிறது ஆகையால்கேவலா
னந்தலட்சண அபயரூபமான பிரமம் நீயானாய்—நிட்களமா
கவும் நிட்கிரியமாகவும் சாந்தமாகவும்சுத்தமாகவும் அந்வயிக
மாகவுமிருக்கிற பிரமம்நீயானாய்—ஞாதுரு ஞானஞேய மக்கலா
தாகவும்ஞாதாவுக்கும் அபின்னமாகவும் அகண்ட ஞானமாகவு
ம் அறியப்பட்டதறியப்படாததென்கிற விரண்டு மில்லாதது
கவுமிருக்கிற யாதொரு சுத்தபோதமுண்டோ அதுவே நீயா
னாய்—அந்தர்ப்பிரக்ஞை பகிர்ப்பிரக்ஞை யென்கிற சொத்க
ளெயெட்டாததாகவும் பிரத்திஞசொரூபமாகவும் ஸ்வயம்பி
ரகாசமாத்திரமாகவும் ஆகாசம்போலநிருவிகாரமாகவுஞ்சத்தா
மாத்திரமாகவும்சமாசமாகவுமேகமாகவுமிருக்கிற யாதொருசு
த்தபோதமுண்டோ அதுவே நீயானாய்—சர்வாகாரமாகவுஞ்சர்
வமல்லாததாகவுஞ் சர்வத்துக்குமப்பாற்பட்டதாகவுஞ் சாசு
வதமாகவுஞ் சத்தியமாகவுமேகமாகவுமிருக்கிற யாதொரு சுத்
தபோதமுண்டோவதுவே நீயானாய்—நித்தியானந்த அகண்
டேகரசமாகியும்நிட்களமாகியும்நிட்கிரியமாகியும் பிரத்தியக்கு
அபின்னமாகியும் அவியத்தமாகியு மிருக்கிற யாதொரு சுத்த
போதமுண்டோ அதுவே நீயானாய் ஆகலால் நிற்குணமாகியுந்நி
ர்விகற்பமாகியுமிருக்கிறபிரமமேநானென்று அகண்டாகாரவி
ருத்தியோடு கூடிப்பிரமத்தினிடத்தில் நிட்கிரியனாய் சாத்தி
யிலேயிரு—அப்பா! த்வைதத்தோற்றமவைத் தள்ளுகிறதாயும்
பரமானந்தலகரியைக் கொடுக்கிறதாயும் நிர்மலமாயும் இரு
க்கிற அகண்டாகாரசுகவிருத்தியை உவமையில்லாதபிரமானந்
த பரமசுகத்தில் அகோராத்திரமுஞ்செலுத்திக்கொண்டு பிரா
ரத்தத்தினாலுண்டாகிற போகங்களைப் பொசித்துக்கொண்டு சா
ந்தியேயிரு, வாராயிடமே பிரமானந்தரசத்தை யருந்தினைசந்
தோஷபுத்தியினாலேகாக்கிரகசித்தனாயிருந்துகொண்டுசதா
காலமும்சமாதிநிஷ்டனாய் மனனசீலனாய் சுகமாயிரு.

சிஷ- என்றிப்படிச்சொன்ன குருவை நமஸ்கரம்பண்ணினா
ருஞ்சுவாமீ! இந்தமகாவாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தி

[illegible] புளி ஜூவித்து அவன் பாவ [illegible] பிறந்திருந்தோ? அல்லது [illegible] பாவமே [illegible] ? அது [illegible] ? அது [illegible] பொருட்டுக் [illegible] [illegible] படி [illegible] யென்னெ,

விடை- ஆம்- [illegible] காரியமாகிய [illegible] [illegible] [illegible] ஆயிருக்கிறது.

வினா- இதின் முக்கியமான காரியமாவது யென்னெ,

விடை- யாதொருபுருஷன் [illegible] மூன்று [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ஞானத்தை [illegible] முக்கியமான காரியமென்று சொல்லப்படும்.

வினா- இனிமேலுஞ் சில காரியமாவதாரென்னின்,

விடை- அந்த்திய [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அவனே [illegible] காரியமென்று [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அந்த [illegible] [illegible] இதுஅல்லாமல் [illegible] அந்த [illegible] [illegible] காரியமான [illegible] [illegible].

வினா- அதெப்படியெனின்,

விடை- பாத்திரத்துக்குக்காரணமான [illegible] [illegible] புடவைப்போல [illegible] [illegible]

யேகாரண்மான மூலாஞ்ஞானத்துக்கு நாசம்வரும்போது அநாதியமாயிருக்கிறதேகாதிப் பிரபஞ்சத்துக்கு நாசம்வருமென்றறி— இப்பிரபை யானது சூரியனை யெப்படி துலக்கு விக்கமாட்டாதோ அப்படியே அந்தக்கரண கற்பிதமான சிதாபாசன் சுயம்பிரகாச மாயிருக்கிற பரப்பிரமத்தைத் துலக்கு விக்கமாட்டான்.

வினா- அதேதெனின்,

விடை- பிரசண்டகிரணங்களுடன் கூடிய சூரியனானவர் பிரகாசிக்கும்போது இப்பிரபையானது தன்னுடைய வொளிகெட்டு அந்தச்சூரியகிரணத்தில் எப்படி அடங்கிப் போகிறதோ அப்படியே சிதாபாசனும் பரப்பிரமப் பிரகாசத்தினால் தன்னுடைய பிரகாசங்கெட்டுத்தானும் உபாதியோடே கூடம விளைமப்போவதால் ஆன்மாவைத் துலக்கு விக்கமாட்டான் ஆகையால் மெய்யூதமான பரப்பிரமமே சேஷித்திருக்கு மென்றறி— உபாதியான அந்தக்கரணம்போகிறபோது அதிற்பிரதிபிம்பித்த ஆபாசனும் அதிட்டானமாத்திரமாயிருப்பன்.

வினா- அதெப்படியெனின்,

விடை- முகத்துக்கெதிராகக் காண்பித்த கண்ணாடியை வாங்கிவிடும்போது அந்தக்கண்ணாடியில் காண்பித்த ஆபாசமுகமானது போய்யதார்த்த முகமாயெப்படிக் கண்டதோ அப்படியேயுபாதியழிகிறபோது அதிற்பிரதிபிம்பாபாசனும் அதிட்டான மாத்திரமாயிருப்பனென்றறி.

வினா- இந்தச்சிதாபாசனானவன் அந்தக்கரணவிருத்தியிற் கூடிவெளியிலிருக்கிற கடத்தையறிகிறபோது அந்தக்கடாஞ்ஞானத்தைப்போக்கிக்கடத்தைத் துலக்குவித்தது போல உள்ளேயிருக்கிற சுயம்பிரகாசமானபிரத்தியான்மாவைத் துலக்குவிப்பனோவெனின்,

விடை- சிதாபாசனானவன் பலவியாப்தியானதாற் பிரத்தியகான்மாவைத் துலக்கு விக்கமாட்டான்— ஆதலாற் பிரத்தியகான்மாவை யறிகிறதற்கு அந்தக்கரணவிருத்திவியாப்திக்கவேணுமே தவிரப்பலமான சிதாபாசவியாப்தி தேவையில்லை— சுருதிகளிலும் மனதினால் அறியப்படாதென்கிற பலவியாப்தியும் சொல்லியிருப்பதால் நன்றாய்ப் பகுத்தறிந்து சூட்சமபுத்தியினாற் பிரமத்தை யறியவேணும்— எவன் பிரஞ்

ஞாமாந்தமாயிருக்கிறானோவனுக்குச், சுருதியைக் கேட்டமாத்திரத்தினால் அகண்டாகாரவிருத்தி பிறக்கமாட்டாது, சிரவணமனன நிதித்தியாசனங்கள் யாதொருத்தன் நிரந்தரஞ்செய்து வருகிறானோ அவனுக்கே புத்திகூர்மையாகும், அதனாலவன் சூட்சுமவஸ்துவையறிந்துக்கொள்வான்—ஆதலால் அந்தப் பிரக்ஞாமாந்திகளா யிருக்கிறவர்கள் பரப்பிரமவஸ்துவை நன்றாய் அறிகிறதின் பொருட்டுச்சிரவணமனன நிதித்தியாசனங்களைச் செய்யவேணும்.

ஷட்லிங்கதாத்பரியம்.

வினா- அதேதெனின்,

விடை- சகலவேதாந்தவாக்கியங்களுக்குஞ்சதிராகவும் அத்வைதமாகவு மிருக்கிற பரப்பிரமத்தினிடத்தில் ஷட்விதலிங்கங்களால் தாத்பரிய நிச்சயம்பண்ணுவதே சிரவணமென்று சொல்லப்படும்.

வினா- அவையாதெனின்,

விடை- உபக்கிரமோபசங்காரமிரண்டுமொரேலிங்கம், அப்பியாசமிரண்டாம்லிங்கம், அபூர்வதைமூன்றாம் லிங்கம், பலம் நாலாம்லிங்கம், அர்த்தவாதம் அஞ்சாம் லிங்கம், உற்பத்தி ஆறாம்லிங்கமென்று சொல்லப்படும்.

வினா- இதில்உபக்கிரமோபசங்காரமாவதேதெனின்,

விடை- உபக்கிரமமாவது சச்சிதானந்த அகண்டமாயிருக்கிற பரப்பிரமசொரூபத்தினிடத்தில் அத்தியாரோபமாக இந்தச்சகலபூதபிரமாண்டபிண்டாண்டங்களாகிய ஜெகத்துண்டாயிற்று, இந்தச்ஜெகத்தாகிய சிருஷ்டியாகிறதற்குமுன் பிரமம் சத்தாமாத்திரமாகவேயிருந்ததென்று பிரதிவாதிக்கிறதும், உபசங்காரமாவது இந்த உற்பத்தியான சகல ஜெகத்தும் அபவாதக்கிரமமாய் போக்குகையாலிந்தப்பிரமாண்டபிண்டாண்டமென்கிற உபாதியிற் கூடஸ்தபிரமங்களுக்கு அந்த உபாதியை யொழித்து ஏகத்துவயிக்கியத்தைக்கூறப்படுகிறதுமாம்.

வினா- அப்பியாசமாவதேதெனின்,

விடை- நீயேபரப்பிரமம் நீயேபரப்பிரமமென்றனேகப்பிரகாரமாகவுபதேசிக்கையாலும் அதுவேசதன்னைக்கூட்டிச்சொல்வதாலும் சேதனனுடைய சொரூபத்துக்கே அத்துவைத ஆன்மத்துவம்போதிக்கிறதாலும் அப்பியாசமென்றுசொல்லப்படும்.

வி-ரு- அபூர்வதாவதேதெனின்,

விடை- யாதோர்விஷயம் பிரமாணாந்தரங்களினால் அறியப்படாமல் வேதப் பிரமாணத்தினால் அறியப்படத்தக்கதாயிருக்கின்றதோ, இந்தப்பிரமாணங்களினால் அறியப்படாமையே பிரமத்துக்கு அபூர்வதாவாம்.

வி-ரு- பலமாவதேதெனின்,

விடை- இந்தவேதாந்தங்களைக் கேட்கவிருப்பவர்களுக்கு ... நித்தியமாத்திரத்தினால் ... சோபாலத்துக்கு ... விந்நஞ்சகலபிரபஞ்சம் ... சொரூபமாய் விளங்காநின்றபிரமம் ... இந்தவேதாந்தங்களால் ஐக்கியமாய் ... ருக்கையால் ... அப்பிர ... ரத்துவத்திற்கு நிச்சயமாகவேயப்போதுவென ... ப்போதுஜெகம் சர்வாத்துமசொரூபத்தோடேறுபவன் ... துமசொரூபமாயிருக்குமென்றுயிரதிபாதிக்கிறதே பலம்.

வி-ரு- அர்த்தவாதமாவதேதெனின்,

விடை- எந்தவஸ்துவைக் கேட்டதினால் கேள்விக்கெட்டாதவை கள் கேட்கப்படுகின்றது, எந்தவஸ்துவை மனனம் பண்ணி னதினால் மனனம்பண்ணப்படாதவஸ்துமனனம்பண்ணப்படு கிறது, எந்தவஸ்துவையறிந்த மாத்திரத்தில் அறியப்படாதவஸ் து அறியப்படுகிறது, அதுவேயருக்கசர்த் திருக்குமைத்திரையில் களுக்கும் ஆதாரமாய்விளங்குவதென்று சொல்லுகிறதே அர்த் தவாதம்.

வி-ரு- உற்பத்தியாவதேதெனின்,

விடை- கடத்துக்குமண்ணும் நகைக்குவன்டும் ஆபரணத்துக்கு ப்பொன்னும் ஆயுதாதிகளுக்கு இரும்புமெப்படிக் காரணமா யிருக்கின்றதோ அப்படியேதோற்றப்பட்ட சகலசெகத்துக் கும்பிரமமேகாரணமென்று செகத்துக்கும்பிரமத்துக்கும் அபி ன்னத்துவம் பிரதிபாதிக்கின்றதே உற்பத்தி யென்று சொல்ல ப்படும். இந்தப்படி வேதாந்தவாக்கியங்களினால் சிரவணம் ப ண்ணப்பட்ட அத்துவைதமான பிரத்தியகபின்னவஸ்துவை ய னுகூலமான யுக்திகளினால் அளவிட்டு நிச்சயிக்கின்றதே மன னமென்றும் — விசாதீயமாயிருக்கிற தேகேந்திரியாதிகளைத் தள்ளிச் சசாதீயமான அகண்டாகார விருத்தியோடே கூடிமா

லையிலுச்சியில் விட்டதயிலதாரை போல் இடைவிடாமல் அக
ண்டாகாரவிருத்திகளினால் நிரந்தரத்தியானம்பண்ணுறதே நிதி
த்தியாசனமென்று சொல்லப்படும்—யாதொருத்தனுக்குக்கே
ள்வியான சிரவணத்திற் சமூசயமெவ்வளவுகாலந்தீரவில்லையோ
அதுவரைக்கும் சிரவணம்பண்ணவேணும்—சிரவணம்பண்ணி
நிச்சயித்த சொரூபத்தில் சமூசயமெவ்வளவுகாலந் தீரவில்லை
யோ அவ்வளவுகாலஞ் சுருதியுத்திகளினால் மனனம்பண்ணவே
ண்டும்-தேகமேநானென்கிற விபரீத பாவனையானது மனதில்
எவ்வளவுகாலம் நாசமடையவில்லையோ அவ்வளவுகாலம்மோட்
சம்வேணுமென்றிச்சித்தவன் நிரந்தரந்தியானம் பண்ணவே
ணும்—அபரோட்ச சாட்சாத்காரத்தில் குதர்க்கங்களுடன் கூ
டின திரிவியப்பிரபஞ்சமானது எந்தமட்டும் நாசமடையவில்
லையோ அதுவரைக்குமஞ்ஞானந்தன்னுடையது, ஆதலால் மோ
ட்சத்திலே யிச்சையுள்ளவன் தியானசமாதிகளை அவசியஞ்செய்
யவேணும்.

வினா- தியானசமாதியாவதேதெனின்,

விடை- சவிகல்பசமாதியென்றும் நிர்விகல்ப சமாதியென்று
ம் இரண்டுவிதமாகவிருக்கும் அதில் சவிகல்ப சமாதிலட்ச
ணத்தைத்தெரிந்துசொல்லுகிறோம்கேட்பாயாக.

வினா- அதேதெனின்,

விடை- ஞாதுருஞானஞேயங்களான திரிபுடிக்கும்லயஸ்தானமா
ல் ஞேயமாகியகேவல பரப்பிரமவஸ்து விஷயத்தில் நிலைத்
தூலபிரமாகாரமாயிருக்கிறசித்தவிருத்திசவிகல்பசமா
தியென்று பெரியவர்களால் அறியப்பட்டிருக்கின்றது—ஆத
லல் அந்தஞாதுருஞானஞேயமாயிருக்கிற திரிபுடியும் ஞேய
மாத்திரமாயிருக்கிற சத்தாகியபரப்பிரமத்தினிடத்தில் அசத்
தாய்விளங்குகின்றது.

வினா- அதெப்படியெனின்,

விடை- மிருத்திகையினால் பண்ணப் பட்ட பானையானது மி
ருத்திகையாயிருந்தும்பார்க்கிறபேர்களுக்குப்பானையென்
றெப்படித்தோற்றப்பட்டதோ அப்படியே ஞாதுருஞான
ஞேயமான திரிபுடியுஞ்சன்மாத்திரமானபரப்பிரமவஸ்துவினி
டத்தில்சன்மாத்திரமாகவேவிளங்குகின்றது ஆதலால் இப்போ
து சொல்லப்பட்டசமாதிக்குச் சவிகல்பமென்று சொல்லப்ப

இங்கே நிர்விகல்பம் ஞாதுருஞானஞேயமான திரிபுடியமொழிந்து அத்தியந்தமாக்கிரமானபரப் பிரமசொரூபத்தாருடேனமன அது விருத்தி நிர்விகல்பமானதால் அதை நிர்விகல்பசமாதியென்று சொல்லப்படும்.

ஷட்விதசமாதிலட்சணம்.

வினா- அதெப்படியெனின்,

விடை- சத்துசித்தானந்தலக்ஷணமான அதுவே நானென்கிற ஞேயாகாரமான சமாதிதிரமாயமான ஞேயாகாரப் பிரமாகாரமான விருத்தியானது பிரமமாத்திரமாகநிலைத்தபின்பு அந்த ஞாதா ஞானமென்கிற திரிபுடியும் ஞாதுருஞான விகல்பங்களில்லாதது நிர்விகல்பமென்று சொல்லப்படும்.— விருத்தியினுடைய ஏகாகாரமாயிருக்கும் பேதமானதுபட்டிருக்கின்றது, அதன்றியில் விருத்தியாகாரம், சமாதிசுழுத்தியிரண்டிலுஞ் சமமாய்க் காணப்பட்டாலுஞ் சுழுத்தியில் அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றது சமாதியில் அஞ்ஞானமறைக்கப்படவில்லை— இதனால் அஞ்ஞானமும் அஞ்ஞானத்தினால் விக்ஷேபமான விபரீதபாவனையும் போக்கவேண்டி முமுக்ஷுவானவன் இந்தச்சவிகல்ப நிருவிகல்பசமாதியிரண்டையும் பிரயத்தனம்பண்ணிச் சாதிக்கவேணும்.— இந்த இரண்டு சமாதியுஞ் சாதிக்குமளவில் விபரீதபாவனை நிவிர்த்தியாய்ச் சொரூபஞானத்துக்கு ஒருவிக்கினமுமில்லாமல் அதுசொரூபானந்தத்தை அநுபவிக்கும்.— இந்தச் சமாதி அந்தர் திரிசியானுவித்த சவிகற்பம் அந்தர்சத்தானுவித்தசவிகற்பம் நிருவிகற்பம் பகிர்திரிசியானுவித்தசவிகற்பம் பகிர்சத்தானுவித்தசவிகற்பம் நிருவிகற்பம் என அறுவகையுண்டு, அவற்றுள், முதலில் அந்தர்திரிசியானுவித்தசவிகற்பத்தைச் சொல்லுகிறோங் கேட்பாயாக,

அந்தர்திரிசியானுவித்தம்.

வினா- அதேதெனின்,

விடை- சுயம்பிரகாசமான அறிவைத்திரிசியங்களான காமக்குரோதாதிவிருத்திகளோடேகூட்டி அந்தவிருத்திகளுக்குச் சாட்சியாகத்தானேயிருக்கிறசொரூபானுசந்தானமே திரிசியானுவித்தசவிகல்பசமாதியென்றுசொல்லப்படும்,

வினா- அதேதெனின்,

விடை- நானெனக்கென்கிறகாமக்குரோதாதிவிருத்திகளெந்த அறிவினால்காணப்படுகின்றதோ அந்தத்திருக்கான அறிவுக்

ணு அகங்காரமுதலான காமாதிகள் திரிசியமென்றறி — இந்தக்காமாதிசகலவிருத்திகளையும் அதிகாரியாகப்பார்க்கிறசாட்சியானவன்றனைப்பார்க்கிறவன் திட்டிரியனாகவேயிருப்பான், காமாதிவிருத்திகளுக் கெல்லாம் நான்சாட்சி என்றால் இந்த விருத்திகள் காணப்படுகிறதென்று தன்னைச் சாட்சியாக அறிந்தவன் சாட்சியாகவேயிருப்பான் — திரிசியமாகவிருக்கிற சகலதேகாதிப்பிரபஞ்சத்தையும் ஆன்மாவாயிருக்கிற தன்னிடத்திலேலயம்பண்ணவேணும்.

வினா — அதற்குபாவமேதெனின்,

விடை — தேகம்நானல்ல, இந்திரியம்நானல்ல, பிராணனுநானல்ல, அகங்காரமனோபுத்திகளும் நானல்ல, இந்தத்தேகேந்திரியப்பிராணமனோபுத்தியகங்காராதிவிகாரங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டுச்சாட்சியாய் நித்தியனாயிருக்கிறபிரத்தியகான்மாவே நானானேன், [illegible]ளுக்குச்சாட்சியாகியும்பிராணவிருத்திக்குச்சாட்சியாகியும் புத்திவிருத்திக்குச்சாட்சியாகியும் சட்சுசுரோத்திராதிபிரிந்திரியங்களுடைய கிரியைகளுக்குச்சாட்சியாகியும் நித்தியமாகியுமிருக்கிறபிரத்தியகான்மாவேநானானேன், நான்ஆணுமல்ல, நபுஞ்சகனுமல்ல, கிழவனுமல்ல, பாலனுமல்ல, யௌவனனுமல்ல, விருத்தனுமல்ல, உடைமையுமல்ல, மூக்குறையனுமல்ல, நொண்டியுமல்ல இவைகளுக்கெல்லாஞ்சாட்சியாய் சத்தியமாயிருக்கிற பிரத்தியகான்மசொரூபமேநானானேன் — நான்வந்தவனுமல்ல, போனவனுமல்ல, கொன்றவனுமல்ல, கொல்லப்பட்டவனுமல்ல, கர்த்தாவுமல்ல, சொல்லுகிறவனுமல்ல, சொல்லப்படுகிறதுமல்ல, சுகியுமல்ல, துக்கியுமல்ல, இவைகளுக்கெல்லாஞ்சாட்சியாயிருக்கிற பிரத்தியகான்மாவேநானானேன், நான்யோகியுமல்ல, வியோகியுமல்ல, ராகியுமல்ல, பாபியுமல்ல, குரோதியுமல்ல, லோபியுமல்ல, பந்தனுமல்ல, முத்தனுமல்ல, இவைகளுக்கெல்லாஞ் சாட்சியாயிருக்கிற பிரத்தியகான்மாவே நானானேன், நான் உட்பிரக்ஞனுமல்ல, வெளிப்பிரக்ஞனுமல்ல, பிரக்ஞனுமல்ல, அப்பிரக்ஞனுமல்ல, சிரவணப்படுகிறவனுமல்ல, மனனப்படுகிறவனுமல்ல, அறியப்படுகிறவனுமல்ல, சாட்சியாய்நித்தியனாயிருக்கிறபிரத்தியகான்மாவே நானானேன் — எனக்குத்தேதேகேந்திரியாதிகளுடைய கூட்டுறவுமில்லை, புண்ணியபாவமில்

றுமயில்லை, பசிதாகமுதலான சடூர்மிகளுக்கும் அப்படிப்பட்டு ச்சதாவிமுத்தமானசங்கசித்துருபமேதானேயென்று, என்றிப்ப டித்தன்னுடையசொரூபத்தைத்தானேயறிந்துகொண்டுகொள்ளப் பட்டதிருசியத்தையெல்லாந்தன்னிலேலயம்பண்ணிக்கொண்டு பிராரத்தியினால்தன்னிடத்தில்காணப்பட்டயாவஷ்டமாகவிபரீத பாவமானதைத்தவித்தவனாயிருக்கிறவன்விட்டொழிவான்;

வினா- அதெப்படியெனின்,

விடை- தேகத்துக்கு விபரீதபாவமாகியசுயம்பிரகாசமானஆ ன்மப்பிரகாசமேமுத்தியென்றுசொல்லியிருப்பதாற்சதாகா லமுமனதையடக்குகிறவனுக்கேயிந்தச்சமாதிசித்திக்கும்இல் லாவிட்டால் சித்தியாது-ஆனதால்சதாகாலமுமனதை யொடுக் கவேணும்அப்படிக்கில்லாமல்யாதொருவேஷபாஷையினாலும் இந்த அகண்டசச்சிதானந்த ஆத்துமானுபவ நிலைசித்திக்கமா ட்டாது அதுவருகிறதின்பொருட்டுச் சச்சிதானந்தமான தன் னிடத்தில்அகங்காரங்களையும்அகங்காரங்களுடையவிகாரங்களை யும் நிவிர்த்தி பண்ணவேணும்—யாதொரு புருஷனாலே யா ன்மதத்துவத்தை யவலம்பித்துக்கொண்டு பிரகிருதிநாசம்பண் ணப்படுகிறதோ அவனேமுத்தனாவான் அப்படியின்றிக்கோடிகர்ம ங்களைப்பண்ணினாலும் முத்தனாகமாட்டான், யசுர்வேதத்திலே யேதாசுவேதவுபநிஷத்தில் சுயம்பிரகாசமான ஆத்மாவை ய றிந்தவன்சகலஅஞ்ஞானபாசங்களையும் அறுத்துச் சென்மமிரு த்துக்களானசகலகிலேசங்களையும்விட்டொழிவனென்றுசொ ல்லுகிறதினால்சகலகிலேசங்களையும்விட்டொழிகிறதே சென்ம மொழிகின்றது, ஆனதால்அந்தநிலைமையேஜீவன்முத்தியென் றுசொல்லப்படும்-முத்தியென்பது திரும்பச்சென்னனமில்லாம லிருக்கிறதாகையால் அந்தச் சென்னன மின்மையுங்கிலே சங்க ளொழிகிறதினால் சித்திக்கும் கிலேசங்களொழிகிறதும் ஆத்து மநிட்டையினாற்சித்திக்கும் ஆதலால் முமூட்சுவாயிருக்கிறவன் ஆத்துமநிட்டையைச்சதாகாலமுஞ்செய்யவேண்டும்—யாதொ ருமனுஷனுக்குஞ் சென்மத்துக்குக்காரணமானதுகிலேசவாச னையேதவிர வேறில்லை ஆகையால்அந்தவாசனாரூபமாகியகிலே சங்களைஞானநிஷ்டையாகிற அக்கினியினால் தகித்துப்போடும் போது அந்தவாசனைகள்சென்மத்துக்கேதுவாகமாட்டாது.

வினா — அதேதெனின்,

விடை — அக்கினியில் வறுத்தவித்தானது முளைக்கின்றதற்கேது வெப்படியாகமாட்டாதோ அப்படியே ஞானாக்கினியினாலே தக்கப்பட்டவாசனாரூபமான கிலேசங்கள் புனர் ஜன்மத்துக்கு ஏதுவாகமாட்டாது — ஆகையால், மூடனானவனுக்கு அஞ்சேதனாசருட்சயமாய் விபரீதமானவை நிவிர்த்தியாருக்கப்பாருட்டுப்பிரயத்தனம் பண்ணியாகிலும் ஞானநிஷ்டை செய்யவேணும் — இந்த ஞானநிஷ்டாபரனாயிருக்கிற புருஷனுக்குக் கர்மங்களைச் செய்யக்கணக்கில்லை, கர்மங்களுக்கும் ஞானங்களுக்கும் ஒன்றுக்கொன்று கூட்டுறவு சித்தியாது, இப்படி ஒன்றுக்கொன்று கூட்டுறவில்லாததால் பின்னரூபாவங்களாயிருக்கிற கர்மஞானங்களுக்கு ஐக்கியங்கூடாது.

வினா — அதேன் கூடாதெனின்,

விடை — தேகாத்மபுத்தியோடே கூடின கர்த்திருத்துவபாவனையானது கர்மம் அந்தக்கர்த்திருத்துவபாவனையைக் கெடுப்பது ஞானம், கர்மரூபம் அஞ்ஞானத்தின் தூலமட்டு ஆகையால் அந்தக்கர்மம் ஞானங்களைக் கெடுக்கிறதே ஞானம் ஆகையால் ஒன்றுக்கொன்று விரோதிகளாயிருக்கிற ஞானகர்மங்களுக்கு ஐக்கியமெப்படி சித்திக்கும் — தேஜஸ் திமிரங்களுக்கும் கூட இசைந்து வருகிறதற்கு எப்படி கூட்டுறவு காணுமோ அப்படியே ஞானகர்மங்களுக்குக் கூட்டுறவில்லையென்றறி — மேற்று ரூபமாய்ப் பார்க்கிறவர்களுக்கு இடக்குருடாகப் பார்க்கிறதுகெப்படி கூடாதோ அப்படியே அந்தர்மூகமான ஞானநிஷ்டையைப் பொருந்தினவனுக்கு கர்மத்தினிடத்தில் எப்படி யோக்கியமுண்டாகப் போகின்றது — ஆகையால் ஞானநிஷ்டா நிரந்தரனாயிருக்கிற மூடனுக்குக் கர்மதந்திரத் தொழிலில் அவகாசமில்லை.

வினா — பின்னெதுவெனின்,

விடை — ஞானநிஷ்டையே கர்மம் ஞானநிட்டையே சந்தியாவந்தனம் ஞானநிஷ்டையே சகலகர்மமும் ஞானநிஷ்டையைத் தவிர வேறெயொரு கிருத்தியமுமில்லை — பகுவாக்குக்காயங்களினால் சாதிக்கப்படுகின்ற கர்மமெதுவோ அது அசத்தானதால் சத்தைப்பொய்யென்று சகலகிரியைத்தையும் பொழிந்து நிருகாகிய நித்தியசொரூபமான நிலையெதுவோ அதுவே சந்தியாவந்தனம் அதுவே அநுஷ்டானம் அதுவே ஞானம் அதுவே கிளகட

அநுவேபோசனம் ஆதலால் சத்தசத்துவம்பொருந்தியபரமா ர்த்தத்தையறிந்திருக்கிறசத்புருஷர்களுக்கும் சகலரூபம் சொரூப நிஷ்டையென்றறி — சகலத்தையும் விட்டொழிந்து ஞானநிஷ் டாபரர்களாயிருக்கிற சந்நியாசிகளுக்கு ஞானநிஷ்டையைத் தவிரவேறே செய்கையில்லைமேலும், கிரியாந்தரங்களான தொழில்களெல்லாமொழிந்து ஞானநிஷ்டாபரனாயிருக்கவே னும்-ஞானமாகிறமேடையின் மேலேறவேணுமென்றிச்சித் திருக்கிற மூமூட்சுவானவன் ஆத்மநிஷ்டையாகிற கர்மத்தைச ய்துக்கொண்டு சஞ்சலமில்லாமல் சதாத்யான பாராயணனாயா ன்மாவினிடத்தில் நிலைத்திருக்கவேணும் — ஆதலால் ஞானமா கிற உப்பரிகைமேலேறுகிற அப்பியாசிக்கு ஞானநிஷ்டாசாத னங்களானவே கர்மங்கள் — யோகமாகிறமேடையின் மேலேற வேணுமென்கிறயாதொருமூமூட்சுவுக்குயோகத்தைத்தவிரக் கிரியாந்தர மெவ்வளவுமில்லை யாதொருத்தன் யோகியாயிருந் தும் யோகத்தைத்தவிரவேறே கிரியாந்தரங்களை நினைக்கிறா னோ அவன் மரத்தின்மேலேறி விழுந்தவனெப்படி காயம்படு வானோ அப்படியே அதோகதியில் விழுந்துபோவான் — ஞா னமாகிற மேடைமேலேறியிருக்கிற கிருதகிருத்தியனான புத்தி சாலிக்கு வெளியில் செய்யவேண்டிய காரியமொன்றுமில்லை வெளிப்பார்வையுமில்லை ஆதலால்கர்மவாசனையவனுக்குத்தே வையில்லை — இனிசத்தானுவித்தசவிகல்பசமாதிசொல்லுகிறே ன்கேட்பாயாக.

அந்தர்சத்தானுவித்தம்.

வினா— அதேதெனின்,

விடை— சத்தசின்மாத்திரமாய்ச் சொல்லப்பட்ட சத்தத்தோ டேகூடிக்கொண்டு நான் அசங்கன் ஸ்வயம்பிரகாசன் அத்வைதனாய் தனென்கிற சத்தங்களைப்பொருந்தி அந்தச்சத்தங்களானு ப்பாவித்தபாவனையெதுவோ அதுவேசவிகற்பசத்தானுவி த்தசமாதியென்று சொல்லப்படும்.

வினா— இதற்குதாரணமேதெனின்,

விடை— சித்தனென்புத்தனென்பிரத்தியகான்மசொரூபனாயிருக் கிற நித்தியசித்தனென் சாந்தனென் ஆனந்தனென் சதாகாலரூபம் பரமானந்தக் கடலாயிருக்கிறவனென் — ஆதியுமந்தியும் நா ன்வாக்குமனசுகளினால் சாதிக்கப்பட்ட. வஸ்துவும் நான்வேதா ந்தவாக்கியங்களினால் அறியப்பட்டவனென் அளவில்லாத அக ண்டபோதரூபமே நான் அறிந்தேனறியே ...

ன்னியமானவனும்; மாயாகாரியலேசங்களில்லாதவனும், கேவலநித்திருக்குரூபமானவனும், ஞானசொரூபனும், ஏகப்பிரகாசமாய் விளங்குகிறவனும்—முன்பின்னென்கிற தில்லாதவனும், உள்ளும் புறம்பும் நிறைந்து பரிபூரணானந்தமாயிருக்கிற ஏகம் நான்சென்னமரணமில்லாதவன் நானே நித்தியானந்தமான அத்துவைதமே நான்—பிரத்தியக அபின்னமென்றும் அகண்டமென்றுஞ்சச்சிதானந்தலட்சணமென்றுஞ் சுத்தமென்றுஞ் சுருதியினால் சொல்லப்பட்டபரஞ்சோதியான பிரமமெதுவோ அதுவே நான்—என்கிற சத்தமாத்திர மாயிருக்கிற விருத்தியோடே கூடிக்கொண்டுசத்தமாத்திரம் பொருந்தின சத்தங்களுடன் கூடியேயாகியானவன் சஞ்சலமில்லாமலித்தச் சத்தானுவித்தமானபாவனையுஞ்சாக்ஷிக்கவேனும்—மேலும், காமாதிரியங்களைச்சொரூபத்திலே லயப்பண்ணின் சத்தோதயமுதலாகிய சத்தங்களுடன் கூடியிருக்கிற பிரதானமான பாவனையைப்பொருந்தின தேதுவோ அதுசத்தானுவித்த சவிகல்பசமாதியென்று சொல்லப்படும்.

அந்தர்நிருவிகற்பம்,

வினா- அந்தர்நிருவிகற்பமாவதேதெனின்,

விடை- இந்தக்கிரியானுவித்தசத்தானுவித்தசவிகற்பமென்கிற இரண்டும்விட்டொழிந்துமனதினுடையதொழில்களையுங்கடேடொட்டொழிந்துப்போடுகிறதேநிர்விகற்ப சமாதியென்றுசொல்லப்படும்—மேலும், முன்சொன்ன இருவகைச் சவிகற்பசமாதிகளில் அன்புடனே யிடைவிடாம லெவனொருநாட்பழகிவருகிறானோ அவனுக்கே இந்தநிர்விகல்பசமாதி சித்திக்கும்—எவன் நிர்விகல்பசமாதி நிஷ்டையைப் பொருந்தியிருக்கிறானோ அவனுக்கேவாசனாட்சயமுஞ் சித்தலயமுந்தடையற்ற நிச்சலானந்தமுஞ்சித்திக்கும்—இந்தலட்சணம் பொருந்தினவன் வித்துவான அவன் இதுவேனென்று உள்ளும்புறம்புங்காணாமல் ஆனந்தசமுத்திரத்தில் அழுந்தினவனாய்த்தன்னைவிட அன்னியமில்லாதவனாயிருப்பன்—ஆதலால் நிர்விகற்பமாயும் பரப்பிரமமாயுமிருக்கிற பிரமத்தினிடத்தில் நிஷ்டையைப்பொருந்தினவர்களாரோ அவர்களேமுத்தர் அவர்களேசிவத்தன்மைபொருந்தியும் பொருந்தாமலிருக்கிற பேர்களென்றறி—அப்பா, முன்சொன்ன சவிகற்பத்தில் சத்தகிரியானுவித்தங்களிரண்டு மிட்டொழு சொன்ன நிர்விகற்பசமாதியொன்றும் ஆ: மூன்றையுமெத்தனத்தினலுள்ளே எப்படியெப்படி பழகினும் அப்படியேயதனைக்குவெளியிலுந்தொடுத்தறிகிறத்

நியாயிருதின்பொருட்டு இம்மூன்றுசமாதியுஞ் செய்யப்படுவனவாம்,
பாகியதிரிசியானுவித்தம்.

வினா— அதெப்படி யெனின்,

விடை— அதிஷ்டானமாய் சச்சிதானந்தமான பரப்பிரமமான வஸ் துவினிடத்தில் கற்பிதமான நாமரூபாதிகளைக்கொண்டு விளங்கிய து, அதில் சத்துசித்து ஆனந்தங்கள் மூன்றும் பிரமசொரூ பம், கற்பிதமான நாமரூபமிரண்டும் செகத்சொரூபம், இ ந்தச்சச்சிதானந்த நாமரூபாதிகளைந்தும் ஒன்றாய்க் கூட்டி மூடர்கள்பிரமையினால்பிரபஞ்சமென்று சொன்னார்கள்.

வினா— அதெப்படி யெனின்,

விடை— குளிர்மையும் வெண்மையும் நெகிழ்ச்சியும் நீட்சியுந் நாமங்களென்கிற பெயரும் ஒன்றாய்க் கூடியசலத்துக்குத்தா மே அதையென்று எப்படிச்சொல்லப்பட்டதோ அப்படியே பா லென்றறி— இந்தச்சச்சிதானந்தமுன்றிலேயாரோபிதமான நா மரூபங்களிரண்டையுந் தள்ளியதிஷ்டானமான சச்சிதானந்த மாத்திரமாய்க்கிரகித்துக்கொண்டு அனுபவிக்கிறதே பா கியதிரிசியானுவித்த சவிகற்பசமாதி, இன்னமும் சச்சிதானந் தமான பிரமத்தைத்தவிர நாமரூபங்களில்லையென்று அந்த நாம ரூபங்களைவேறுபடுத்தி அதிஷ்டானத்தில் அந்த நாமரூபமா ன ஆரோபிதங்களை லயம்பண்ணி அதிஷ்டானமாகப்பார்க்கிற து— மேலும், சச்சிதானந்தமாகியும் அத்துவிதமாகியும் அதி ஷ்டானமாகியுமிருக்கிறபரப்பிரமசொரூபமெதுவோ அதுவே நானென்று சதாபாவனை பண்ணுகிறது.

வினா— இதற்கனுபவமே தெனின்,

விடை— இந்தப்பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயரூபம் நானல்ல இந்தப்பஞ்சபூதகாரியங்களு நானல்ல இவற்றுக்கெல்லாமதிட்டான மாகியும்விசுத்தமாகியும் ஏகமாகியும்பரமாகியுஞ் சத்தாகியுமிரு க்கிறயாதொருபரப்பிரமமுண்டோ அதுவே நானானேன்— நான் காணப்பட்டபதார்த்தங்களு மல்லகுணங்களுமல்லகிரியைகளு மல்லசாதியுமல்ல இவைகளுக்கெல்லாம் அதிட்டானமாகியும் விசு த்தமாகியும் ஏகமாகியும் சத்தாகியுமிருக்கிற பரமாத்மாவே நா னேயானேன்— நான் சத்தபரிசரூபரசகந்தமுமல்ல இவற்றுக்கெல்லாம் அதிட்டானமாகியும் விசுத்தமாகியும் ஏகமாகியும் பரமாகியுமி ருக்கின்றதே நானேயானேன்— நான் தேகமுமல்ல இந்திரியங்களு மல்லமனமும்புத்தியுமல்ல அகங்காரமுமல்ல இவைகளுக்கெல்லாப்

அதிஷ்டானமாயும் ஏகமாயும்விசுத்தமாயும் சத்தாயுமிருக்கிறபரமாத்மாவேநானேயன்றி— நான்தேசமல்லகாலமல்லதிக்குமல்ல வஸ்துவுமல்ல ஜாலருட்சம முதலாகியதுமல்ல இதற்கெல்லாமதிஷ்டானமாயும் விசுத்தமாயும் ஏகமாயும் பரமாயுஞ் சத்தாயுமிருக்கிற ஆன்மாவே நானேயென்— என்றிப்படிக்காணப்பட்ட நாமரூபாதிகளெல்லாம்போய்இதற்கதிஷ்டானமான பிரமமே சதாசத்திடமென்று பாவித்துநடக்கிறபோதுமிருக்கிறபோதுஞ்சயனித்துக் கொண்டிருக்கிறபோதுஞ்சதாகாலமுமிந்தப்பாகியதிரிசியானுவித்தசவிகற்பசமாதியே செய்யவேணும்- இனிபாகியசத்தானுவித்த சவிகற்பசமாதியையுஞ்சொல்லுகிறோம்.

பாகியசத்தானுவித்தம்.

வினா- அதேதெனின்,

விடை- அதிஷ்டானமான சச்சிதானந்தத்திற் கற்பிதமான நாமரூபாதிகளையப்பண்ணிநிருமலமாகியும் அத்வைதமாகியும்பரமானந்தமாகியுமிருக்கிறபிரமமே நானென்கிற பாவனை செய்வதேபாகியசத்தானுவித்தசவிகற்பசமாதி.

வினா- இதற்கனுபவமேதெனின்,

விடை- நிர்விகாரமாகியும்நிராகாரமாகியும் நிரஞ்சனமாகியும் அரூபமாகியும் ஆதியந்தமில்லாததாகியும் பூரணமாகியுமிருக்கிற பிரமமே நான் சமுசயமில்லை— நிஷ்களங்கமாகியும் நிராபாசமாகியுந்திரிவிதபரிச்சேத சூனியமாகியும் அனந்தமாகியுஞ் சமமாகியும் அவ்வியத்தமாகியுமிருக்கிற பிரமமே நான்சமுசயமில்லை— நிர்விசேஷமாகியும் நிர்விகாரமாகியும் நித்தியமுத்தமாகியும் நிஷ்கிரியமாகியும் பிரஞ்ஞானகாசமாகியுஞ்சத்தியமாகியுமிருக்கிறபிரமமேநான்சந்தேகமில்லை சாந்தமாகியும் ஆதியந்தஞ் சூட்சுமமாகியும் பத்திமாத்திரமாகியும்நிருவிகற்பமாகியுஞ்சத்தாகியுங்கேவலமாகியும் பரமாத்துவைதமாகியுமிருக்கின்ற பிரமமேநான்— சுத்தமாகியும் புத்தமாகியுஞ் சுசித்தமாகியும்பரமாகியும்பிரத்தியகசண்டமாகியும்அகண்டமாகியுஞ் சொப்பிரகாசமாகியுஞ் சிதாகாசமாகியுமிருக்கிற பிரமமே நான் சந்தேகமில்லை— என்று நிர்விகாரநிசத்தியகளுடன் கூடிக்கொண்டு கேவலமானவஸ்துலட்சியத்தில் மனதை நிறுத்தித்தியானம் பண்ணுகிறதே பாகியசத்தானுவித்தசவிகற்பசமாதியநுபவம்.

பாகியநிருவிகற்பம்.

வினா— பாகியநிருவிகற்பமாவதெனின்,

விடை— பிரமானந்தசுபாவத்தினாலே சொரூபத்தோடேயே
கமாயொன்றிப்புறம்பின் சகலதொழில்களுமற்று நிச்சலமா
யிருக்கிறதே பாகியநிர்விகற்பசமாதி யெனப்படும்—யோக
கியானவன் எழுந்திருக்கிறபோது மிருக்கிறபோது மறதியில்
லாமல் இந்திரியநிக்கிரகம்பண்ணிக்கொண்டு சர்வதாயிந்த ஆ
றுவகைச் சமாதியுஞ் சாவதானமாய்ச் செய்யவேணும்—மேலு
ம், விபரீதபாவனையானது கட்டோடே யெவ்வளவுகாலம் நிவி
ர்த்தியாகவில்லையோ அவ்வளவுகாலமட்டும் யிந்த அந்தரபாகியச
மாதிகளைச்செய்யவேணும்—தடையற்ற சொரூபானுபவப்பி
ரகாசமானது எதுபரியந்தஞ் சித்திக்கவில்லையோ அதுபரியந்
தமு மிந்த ஆறுவகைச் சமாதியினால் நிரந்தரம் பொழுதுபோ
க்கவேணும்—மோட்சம் வேணுமென்கிற இச்சையுள்ளவன்ச
மாதியைமறந்து ஒருக்காலுமிருக்கக்கூடாது சமாதியை மறந்
தானாகில் சூரியனில்லாதபோது இருளானது மூடுகிறது போ
லமாயையானது சொரூபமாகிற தன்னைமறைக்கும்—ஆகையா
ல்பெரியவர்களானபேர்களானுபவத்தை விட்டிருக்காமலிது
மிருக்கின்றதில்லை சுபானுபவத்தைமறந்திருக்கிறதேயிருக்கிறது
பயம் இதுவல்லாமல் தனக்குவேறேயில்லையென்று சுருதிகளா
ல் சொல்லப்பட்டிருக்கின்றது—இப்போது நாம் சொன்னச
மாதியில் எவன்பிரயாசைப்படுகிறானோ அவன்மனதுக்கு ஒரு
விகற்பமுந்தோணாது இந்த அப்பியாசத்தினால் சர்வாத்துமபா
வஞ்சித்திக்கும், சர்வாத்துமபாவமே கைவல்லியம்—மேலு
ம், யாதொருவித்துவான் சாதுக்குஞ் சர்வாத்துமபாவம்போ
றுந்தினதே பிரமவித்தைக்குப்பலமென்று பெரியவர்களறிந்
திருப்பார்கள், சீவன்முத்தனாயிருக்கிறவனுக்குச் சகலமுந்தா
னாயிருக்கிற ஆனந்தானுபவமேபலம்—நானென்கிற இதுவெ
ன்பது முதலாகிய அசத்தைக்கிரகிக்கிறதே இருதயக்கிரந்தி
இந்தஇருதயக்கிரந்தியானது வாசனையோடே கூடச்சமாதியி
னால தகிக்கிறபோது பிரமமேதானாயிருக்கிற அநுபவந்தடை
யற்று விளங்கும்—மோட்சத்துக்கு நிட்களங்கமாயிருக்கிற வ
ழிபிரமமேதானாயிருக்கிற நிலைப்பு, இதுசத்தியத்துக்காரணமாயி
ருக்கிற முமுட்சுக்களுக்குச் சதாகாலமுந்தோற்றும்படிக்கு
ருக்களுக்குந் தோற்றுது—ஆகையால் நீமறதியில்லாமல் விருந்
துக்கொண்டு இவ்வாறுவகைச் சமாதியுநன்றாயப்பியாசஞ்
செய்து இருதயக்கிரந்தியை ஞானக்கினியினால் தகித்து நிரந்

தாம்பிரமானந்தாமிர்தசமுத்திரத்தில் அமிழ்ந்திச் சந்தோஷமாயிரு—விருத்தி சஞ்சலமில்லாமல் நிச்சலமாயிருக்கிறதே நிர்விகற்பசமாதி, அந்த நிர்விகற்பசமாதியே யோகமென்று யோகசாத்திரார்த்தத்தை யறிந்தவர்கள் சொல்லுவார்கள். ஆதலால் இந்த யோகத்துக்கு அஷ்டாங்கங்களுண்டு.

அஷ்டாங்கம்.

வினா— அதேதெனின்,

விடை— இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதியெனப் பெரியவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினா— இயமமாவதேதெனின்,

விடை— அஹிம்சை சத்தியம் அஸ்தேயம் பிரமசரியம் அபரிக்கிரகம் சவுசம் சமம் சந்தோஷம் தபசு சுவாத்தியாயம் வணக்கமிவைகளே இயமமென்று சொல்லப்படும்.

வினா— நியமமாவதேதெனின்,

விடை— ஆகாரநித்திராசேதம் இந்திரியசேதம் சீதவாத வருஷவுஷ்ணச்சேதம் அபிமானதுக்கசேதம் சாந்திமுதலிய இவைகளே நியமமென்று சொல்லப்படும்.

வினா— ஆசனமாவதேதெனின்,

விடை— பதுமாசனஞ் சித்திராசன முதலாகிய ஆசனங்களில் அனுக்கூலந்த ஆசனத்திலிருந்தால் மனதுக்காயாசந்தோணுதோ அந்தச்சுகாசனத்தில் இருக்கிறதே தியான சாதனமான ஆசனமென்று சொல்லப்படும்.

வினா— பிராணாயாமமாவதேதெனின்,

விடை— அபானனைப் பிராணனுடன் கூட்டி இருதயத்திலொன்றாய் நிறுத்திக்கொள்ளுகிறதையே நிச்சலமான பிராணாயாமமென்று சொல்லப்படும்—மேலும், பிராணாபானர்களை யொன்றாக மனதிலே நிறுத்திக்கொண்டு கும்பகம் பண்ணினால் மனது நிச்சலமாகும் அப்படி பண்ணுதவனாயில் மனது சஞ்சலமாய் விடும்—ஆதலால் மனது நிச்சலமாகும்பொருட்டுப் பிராணாயாமம் பண்ணவேணும் இந்தப்பிராணாயாமமானது சகர்ப்பப் பிராணாயாமமென்றும் நிகர்ப்பப்பிராணாயாமமென்றுமிரண்டு விதமாகவிருக்கும் இதில் பிரணவத்தோடேகூடி வாயுவை நிறுத்துகிறதே சகர்ப்பப் பிராணாயாமமென்றும் பிரணவமில்லாமல் வாயுவை நிறுத்துகிறதே நிகர்ப்பப் பிராணாயாமமென்றுஞ்

சொல்லப்படும் இப்படி நிறுத்துகிற பிராணாயாமத்துக்குரேசகபூரககும்பகமென்று திரிவிதமாய்ச் சொல்லுவார்கள்.

வினு- அதேதெனின்,

விடை- பிரணவத்தையுச்சரித்து மூப்பத்திரண்டு மாத்திரைவரைக்கும் பூரிக்கிறது பூரகமென்றும், அறுபத்து நாலுமாத்திரைவரைக்குமுள்ளொடுக்குகிறது கும்பகமென்றும், இந்தப் பூரககும்பகங்களினால் நிறுத்தின வாயுவைப் பதினாறுமாத்திரைவரைக்குமெள்ளமெள்ளரேசிக்கிறது ரேசகமென்றுஞ் சொல்லப்படும்இப்படியிந்தப்பிராணாயாமத்தையோகியானவன் பிராதக்காலத்திலுமத்தியானகாலத்திலுஞ் சாயுங்காலத்திலுமஸ்தமனமானதின் பிறகும் அர்த்தராத்திரியிலும் விடியற்காலமும் எழுபத்திரண்டுவீதம்ரேசகபூரககும்பகங்களை அப்பியாசிக்கவேணும்—இப்படி தினந்தோறுஞ் சிலகாலத்திலும் பிராணாயாமத்திலேஅப்பியாசிக்கிற யோகிக்குப்பலன் மாசமொன்றிலேவாசஞ் செயமாகும், சுவாசஞ்செயமானமானது திரமமாகும்—மனது திரமமையானல் சொரூபானுபவஞ் சித்திக்கும் ஆதலால் இந்தப் பிராணாயாமத்தைப் பிரயத்தனம் பண்ணிச்சதாகாலமுமப்பியாசிக்கவேணும்—இந்தப்பிராணாயாமத்தினால் தேகத்திலுண்டான வாதபித்தசிலேஷ்மம் காரணமாயுண்டான க்ஷயமுதலான வியாதிகளாகிய சகலபாவங்களும் நசிக்கும்- இதுவல்லாமல் ஆயுசுதேஜஸ் காந்தி ஜடராக்கினி இந்திரியசத்துவங்களாகிய இவையெல்லாம் விருத்தியடையும், அவவிருத்திகளும் பறந்தோடிப்போம்- அப்பா! யோகசித்தியின் பொருட்டுப் பிராணாயாமத்துக்குச் சமானமான சாதனம் வேறேயில்லை ஆதலால் இந்தப் பிராணாயாமஞ் சதாகாலமுஞ்செய்யவேணும்,

வினு- பிரத்தியாகார மாவதேதெனின்,

விடை- புத்திவிருத்தியை இந்திரியங்களிற்போகாது படிக்குப்பிரமத்தினிடத்தில் நிறுத்துகிறதேபிரத்தியாகாரமென்று சொல்லப்படும்.

வினு- தாரணையாவதேதெனின்,

விடை- இப்படிப்பிரத்தியாகாரம்பண்ணின மனதைப் பிரத்தியகாத்மாவினிடத்தில் நிறுத்திவெளியிற் சஞ்சலமாய்ப் போகாமல் லட்சியத்தில் திடம்பண்ணுவதே தாரணையென்று சொல்லப்படும்.

வினா— தியானமாவதே தெனின்,

விடை— விசாதீயமாயிருக்கிற அகங்காராதி விருத்திகள் பிரவாக லௌகீக்கிச்சாதீயமாயிருக்கிற அநுசந்தானவட்டணமான விருத்தியோடேகூடியிருப்பதே தியானமென்று சொல்லப்படும்.

வினா— சமாதியாவதே தெனின்,

விடை— இப்படி லட்சியத்தைச் சவிருத்திகளெல்லாம் லட்சியமேதானுகிச் சரீரமறந்திருப்பதே சமாதியென்று சொல்லப்படும் — இப்படியோகத்தினுடைய அஷ்டாங்கங்கள் சொல்லப்படுகின்றது — ஆராய் இந்த இயமநியமங்களுடனே கூடி அநன்னியமான சித்திராசனத்திலிருந்து சதாகாலமும் பிராணாயாமஞ்செய்துகொண்டு விடயங்களில் இந்திரியங்கள் நாடாமல் பிரத்தியாகாரஞ்செய்து அதைவிட்டு லக்ஷ்யதாரணையுடனே நிஷ்களமாயிருக்கிற பரமதத்துவத்தைத் தியானம்பண்ணி நிர்விகற்பசமாதியில் நின்றுதன்தேகத்தைமறந்த யோகியானவன் பிறவியாகிற பந்தத்தைத் தகித்து ஆனந்தமடைவன் — இந்த நிர்விகற்பசமாதியில் இருக்கிறவன் குணத்திரயங்களையுங் கடட்டவன், வித்துவானுயிருந்தாலும் நிருவிகற்பசமாதியில்லாதவன் குணத்திரயங்களில கட்டுப்பட்டுச் சங்சாரத்தில் அடிபடுவன் — ஆனதால் நேத்திரகண்ட இருதய ஸ்தானமான சாக்கிரசொப்பன சுழுத்திகளைக் கடக்கிறதே குணத்திரயங்களைக் கடந்த சுகசமாதி, இதுனான நிஷ்டையுயிருக்கிற யோகிக்கேதுகவிகற்பனி அடைகிறதில்லை — ஆதலால், மைசழும் யாதொருமனுஷனானவன் அசத்தாயிருக்கிற விடயங்களை அநுசந்தானம்பண்ணுகிறானே அவன் பந்தனுவான், சத்தாயிருக்கிற அர்த்தத்தை யவன் அநுசந்தானம்பண்ணுகிறானே அவன் முத்தனுவான் என்று கோஷிக்கின்றதால் முமுட்சுவாயிருக்கிறவன் பிரயத்தனம்பண்ணியாகிலும் நிர்விகற்பசமாதியை அடையவேணும் நிர்விகற்பசமாதியையடைந்தவனே பவபந்தத்தினின்று விடுபட்டு முத்தனுவான்.

வினா— பந்தமாவதே தெனின்,

விடை— அவித்தியாகர்மசர்மங்களாகியமூன்றுமேகிவைசெந்துக் களுக்குப்பந்தங்கள் இந்தப்பந்தங்களுக்குமுத்திநிர்விகற்ப

சமாதியைத் தவிர வேறொன்றிலும் வசமாகாது, ஆனால் இந்த நிர்விகற்பசமாதிக்கு விகாதங்கள் நாலுவிதமாயுண்டு.

வினா- அதேதெனின்,

விடை- லயவிட்சேபகஷாயரசாஸ்வாதமென்று நாலுவிதமாயி யிருக்கும், இவற்றுள் அகண்டாகார விருத்திதமோகுணத் தோட்கூடி அகண்டவஸ்துவில் செல்லாமல் நித்திரையில் லயமடைகிறதே லயமென்றும்— அந்தவிருத்தியைப் பரத த்துவத்தில் நாட்டமாய் நிறுத்துகிறபோது ரசோகுணவேகத் தினால் அந்நாட்டத்தில் நிலையாமல் வேறே அன்னிய விஷயத் திற்போவதே விட்சேபமென்றும்— அகண்டாகாரவிருத்தியா னது ராகத்வேஷங்களினால் கூடப்பட்டு லட்சியப்பட்ட பரம தத்துவத்தையுமெட்டாமல் பாகியமாகிய பிரபஞ்சவிடயத்தை யும் நாடாமல் ஸ்தம்பம்போல் சுத்தமூடமாயிருக்கிறதே கஷா யமென்றும்— விருத்தியானது தான்வைத்த நாட்டத்திலேமன ஸ் பூர்வவாசனாவேகத்தினால் சகல விகற்பமான விஷயாசங்க ளைப் பொசிக்கப் போகின்றதே ரசாஸ்வாதமென்றுஞ் சொல் லுவார்கள்,

வினா- ஆனால் இந்தவிரோதங்களைப் போக்கிறதற்குபாயமே தெனின்,

விடை- யோகியானவன் சமாதியில் இருக்கிறபோது அகண்டா காரவிருத்திதமோகுணத்தோட்கூடி அகண்டவஸ்துவில் செல்லாதலயாவஸ்தைவருமாகில் அவன் பிராணாயாமத்தினா ல் லயத்தைப்போக்கிவிருத்தியை நிர்மலம் பண்ணி பிரத்திய காத்தும அபிமுகமாய் விருத்தியை நாட்டவேணும்— இந்தச் ச மாதிநிட்டனான யோகியின் விருத்தி நாட்டத்தில் நில்லாதபடி அன்னிய விடயத்தைக்கொண்டுவந்துவிடுகிற விட்சேப நிவி ர்த்திக்குவிரத்தியினால் அந்தவிடயங்களில் தோஷத்தையாலோ சித்துப்பிரத்தியக்காத்தும அபிமுகமாய் நாட்டவேணும்— சித்த விருத்தியானது லட்சியத்திலும் நில்லாமல் விடயத்திலு ஞ் செல்லாமல் சுத்தமூடமாயிருக்கிற கஷாய விரோதத்தைப் போக்கிறதற்கு அகண்ட வஸ்துவினுடைய சுகத்தையும் அதினு டையமகிமையையுஞ் சொல்லுகிறதாகவும் மனதுக்குச் சந்தோ ஷத்தைக்கொடுக்கிறதாகவுந் திரிவியங்களெல்லாந் துச்சங்களெ ன்று போதிக்கிற தாகவுமிருக்கிற வேதாந்தங்களையடிக்கடிவா க்கினால் பஜனை பண்ணவேணும்— மேலும், ரசாஸ்வாதமென்கி

றவிரோதத்தைப் போக்கிற தற்குயோகியானவன் வைராக்கியத்
தினால் விடயங்களிற் போனவிருத்தியைத் திருப்பி யேகாத்ம
அபிப்பிராயமாய்நிறுத்தவேணும் — இந்தச்சமாதிக்கு இந்தவிரோ
தங்களில்லாமல் பின்னும்பலவிரோதங்கள்வந்தாலும்யோகியா
னவன் நிதானத்தினாலும் சமாதியினாலும் விக்கினங்களைப்போ
க்கி நிர்விகற்பத்தை அப்பியாசிக்கவேணும் — விடய சந்நிதியி
ல் இந்திரியங்களைப்போகவொட்டாமல் மனதை நிக்கிரகம் ப
ண்ணுகிறவனே தீரன், அந்தத்தீரனே தீவிரமோட்சேச்சையு
டைத்தானவனும் சீதளுஷ்ணதொந்தங்களைச் சகிக்கிறவனாயி
ருக்கின்றதிதிட்சையுடைத்தானவனுஞ்சகலவிருப்பமற்றவனு
மாயிருப்பவன் இலைக்கணமாத்திரந்தாமதியாதுவிக்கினங்க
ளெல்லாம் பறந்துபோய்விடும் — சகல விக்கினங்களையுங் கெடு
த்துவொட்டிக்கிற வராயிருக்கிற ஈசுரன் பரமானந்தியாயிருக்கி
ற ஞானியினால் உபாசிக்கப்பட்டு முன்னிற்பார் — ஆனதால்
முமுட்சுவாயிருக்கிறவன் சகலவிக்கினபயங்களையும் போக்கித்து
ஈசுவரனிடத்தில் பாரத்தை வைத்து நிர்விகற்பத்தைச் செய்வா
னாகில் அதற்கொருவிக்கினமுமிலை — முன்சொன்ன அகண்
டாகாரவிருத்தி ரூபமான அப்பியாசயோகத்தினால் விருத்தி
யானது ஒருமைப்பாடடைந்ததாகவும் அலைவற்றதாகவும் பிரமா
காரமாகவுமிருக்கிற ஆனந்த சொரூபமான பரப்பிரமத்தினி
டத்தில் அத்துவிதமாகவேயிருக்கும் — இப்படிச் சொத்தரா
ன யோகியானவன் உள்ளும் புறம்புஞ்சொரூபமன்றி அன்னிய
மில்லாத பரப்பிரமத்தையேயடைந்து சகல ஆபத்தும் நீங்கிச் சுக
மாயிருப்பான் — இந்த நிலையே முத்திக்குச்சாதகமாயிருக்கிற அ
வத்தையை இந்த அவத்தையைக் கேவலமானவுன்மனியாவஸ்தை
யென்றுசொல்லுவார்கள்.

வினா — உன்மனியாவஸ்தையாவதேதெனின்,

விடை — நிர்விகற்பமாயிருக்கிற ஆன்மாவினிடத்தில் ஆத்துமா
காரமாயேகரூபமான அகண்டாகாரவிருத்தி நிலைபெற்றிரு
ப்பதே உன்மனியாவஸ்தையென்றுசொல்லப்படும் — மே
லும்; அத்துவைதபரப்பிரமப் பிரகாசத்தினால் அஞ்ஞானமா
கிற அந்தகாரம் நிவிர்த்தியாய்ப் பரப்பிரமமாயிருக்கிற தன்
னுமை தான் சாட்சாத்காரமாகிறபோது அனாத்மாவாயிருக்கிற
தேகாதிகளை நானென்பது முதலான இருதயக்கிரந்தியு
ம் சொரூபத்தைத் தெரியவொட்டாமல் மறைத்திருந்தசமுசய
ங்களுஞ்சஞ்சிதமான கர்மங்களுமாகிய அஞ்ஞானநாசமானவுடனே

பிரம வித்துக்களில் சிரேஷ்டன், அவனே அறுஷ்டையுடையார்க்குள் க்ஷேமெய்தியவன் — இந்தப்பிரமநிஷ்டன் பிரமாகாரமனவிருத்தியோட்டு கூடினவனாய்ச் சகலமும் பிரமமாகக்கண்டு பிரமத்தினிடத்தில் சதாகாலமும் விளையாடிக்கொண்டு ஆனந்தபரவசனாயிருப்பவன் — இந்தப் பிரமநிஷ்டனுக்குக் கர்த்திருத்துவ காரண காரியரூபமானபாவனை யெல்லாமொழிந்ததால் அவன் நானென்கிறதென்பது ரூபகலாகிய சரூபசாரபத்துக்குக்காரணம், பந்தத்தைக்கண்டவனுக்குச் சரூபசாரமே யெழுதிய னகத்தைக்கண்டவனுக்குச் சரூபசாரமில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- கர்த்தாவார், செய்யவேண்டியதென்ன, செய்தாலுதற்குப்பலமென்ன, இதற்குச்சாதனமென்ன வென்கிறநான்கும் கேவலமாயுஞ்சுத்தமாயுமேகமாயும் பரப்பிரமமாயிருக்கிற சொரூபத்தைத் தவிரவேறேயில்லை — ஆகலால் பரமகுருவினாலுஞ் சற்குருவினாலுஞ் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தவசனத்தாலத்தினாலுண்டான திவ்யஞானப்பிரகாசத்தாற் பிரத்தியக்ஷமாவென்றும் பிரமமென்றும் பேதமில்லாத வாரூபமான கேவலானந்தரூபத்தில் செய்யவேண்டியதென்ன, செய்தாலுதிலது, பலமென்னவிருக்கின்றது, கர்த்தாவாரென்கிறநான்குமில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- ஆகாரமாயிருக்கிறபூசையினிடத்திலுண்டாகிய அசுத்தாமடாம்பெண்கிறகுணகற்பனையின்பம் பெண்கிறபேர்மாத்திரமெப்படியிச்சமாயிருந்ததோ அப்படியே அதிஷ்டான சொரூபத்தினிடத்தில் நாமரூபகேதுவெங்கிறபேர்மாத்திரமாய்விளங்குகின்றது, இப்படிப்பட்ட நாமரூபத்தைத் துள்ளி அதிஷ்டானமாயுந் நிரவதிசமாயுமிருக்கிற சதானந்தமயிரிக்கடலில் அழுந்தியிருக்கிறவனுக்குக் கர்த்திருத்துவகாரண காரியமெல்லாமேயிருக்கின்றது — தொட்ட குணியமாயானருயிருக்கிற ஆகாசத்தில் கெந்தருவநகரந்தோன்றுகிறாப் போல் ஒன்றாய் அத்துவிதமாயிருக்கிற ஆன்மாவினிடத்தில் பிராந்தியினால் கர்த்தாவென்றுங் கன்மமென்றுங் காரணமென்றுஞ் சொல்லப்படுகின்றது, இப்படியுண்டானதெல்லாம் அழிந்து போய்க்கேவலமாய்ப் போதமாத்திரமாயிருக்குமளவில் கர்த்தவியகாரணமாக கர்த்தாவாகிய வித்துகளெல்லாமெங்கேயிருக்க

ப்போகின்றது—பிரகதாரணிய உபநிடத்தில் சகலமுமான்ம சொரூபமாகத்தானே பார்க்கிறவனுக்குக் கர்த்திருகாரணமேது மில்லையென்று சொல்லுகிறதாலும் சுருதியில் சர்வகாரணமும் லயித்திருக்கிறபோது ஒருபோகமுந்தோன்றாததாலும் அவன் தான் போகத்தைக்காணுவான் ஆதலால் நித்தியமாயும் நிர்க்குணமாயும் நிர்விகற்பமாயும் நிரவதிகமாயுமிருக்கிற ஆனந்தசமுத்திரத்தில் அழுந்தியிருக்கிறவனுக்குக்கர்த்தவ்வியமான பலகர்த்தா வென்பதொன்றுமில்லை—ஆதலால் புருஷனுக்கு விகிதமாயிருக்கிற சற்கர்ம துற்கர்ம மிரண்டும் பிரமநிஷ்டை பொருந்தினவன் செய்யவேண்டியதில்லை.

வினா— அதேதெனின்,

விடை— தேகமே நானென்று அபிமானித்த புருஷனுக்குச் சாதிவர்ணாச்சிரமகர்மங்களைச் செய்யவேணும், எல்லாமான்ம சொரூபமாயிருக்கிற பிரமநிஷ்டனுக்குச் செய்ய வேண்டியதொன்றுமில்லை—ஆகையால் தேகத்தினிடத்தில் ஆத்துமபுத்தியையுடையவன் சாதிவர்ணச் சிரமங்களை யபிமானிப்பான், சாதிவர்ணாச்சிரம அபிமானத்தைத் தவிர ஒருகர்மமுஞ்செய்யப்படுகிறதில்லை—ஆகலால் அநாத்துமாவாயிருக்கிற தேகத்தினிடத்தில் ஆத்துமபுத்தியை யொழித்து ஆன்ம சொரூபமே தேடித்திருந்தவனுக்குச் சாதிவர்ணமேது, ஆச்சிரமமேது, கிரியையேது, எல்லாமான்மசொரூபமேயென்றறி—கர்த்தா நான் போக்தா நானென்று சொல்லப்பட்ட அகங்காரப்பிரமையையுடையவனுக்கு யிருந்ததோ அவன் அதுவாயினும், நிருவிகேதோடமிருந்தவன் சுத்திர னிரவென்று கண்டாப்போலத்தோய்தவாசனையான பிரவிருத்தியிற் சுழலுவான்—பிரவிர்த்திக்குக்காரணம் ஆசை இந்த ஆசைக்குக்காரணம் அஞ்ஞானம் ஆனதால் அஞ்ஞானியென்பதுக் கடையாளம் ஆசை, ஞானியென்பதற்கடையாளம் நிராசையென்றறி—சொரூபசாட்சாத்காரமான ஞானியிடத்தில் ஆசையொழிந்து போமென்று சுருதியிற் சொல்லுகின்றது ஆதலால் ஆன்ம சாட்சாத்காரமுள்ள வித்துவானுக்கு ஆசையொருக்காலும் விருப்பாமென்றறி—பேதமெதிசயமுடையிருக்கிறவனுக்கு உலகவஸ்துக்கள் சத்தியமாகத் தோற்றும் இதற்குமூலம் ஆசை இந்த ஆசையினுடைய தொழில்கர்மம் இதுமுதலான சகலமும் ஆத்துமாவாய்ப் பார்க்கிறவனுக்கு இதுகளொன்றுமில்லை—ஆதலால் சகலமுஞ்சத்தமாத்திரமாயுமே

சுரூபமாயுங் காண்கிற கிருதார்த்தனுன பிரமவித்துக்குச் செய்யவேண்டியது அடையவேண்டியதொன்றுமில்லை — வித்துவானுகவிருக்கிறபிரமநிஷ்டன் இதுவிதியென்றொருதொழிலுஞ்செய்யாமல் இதுநிஷேதமென்றொருதொழிலையும் விலக்காமலிரண்டையுங்கடந்து நிஷ்கிரியனுகவேயிருப்பன் — தேகேந்திரியங்களை நானென்று அபிமானத்தவனெவனே அவனுக்கே விதி நிஷேதங்களென்றிப்பரதத்துவத்தைக் கண்டவனுக்கில்லை ஆதலால் அவனுக்கு, யதேச்ச சஞ்சாரமுமில்லை யதேச்ச சஞ்சாரமுந் தேகேந்திரியாபிமானத்தோடு கூடினவனுக்கே யல்லாமல் ஞானிக்கில்லை.

வினா- அதேதெனின்,

விடை- எவன்பேதமாகப் பார்க்கிறானே அவனுக்கேயதேச்ச சஞ்சாரதோஷமுண்டாம் அவனுக்கு ஞானவாசனையனுமாத்திரமும்வாராது, தேகாத்துமபுத்தியோடேகூடினவனாயிருக்கிறவனுக்கு யதேச்ச சஞ்சாரமாகும்போல ஞானிக்குயதேச்ச சஞ்சாரமிருந்தாலிவனும் போலொருத்தருக்கொருத்தர் ஏற்றத்தாழ்ச்சியில்லை.

வினா- அதெப்படியெனின்,

விடை- நாய் பன்றி கழுதையும் அன்னியனுல் விடப்பட்டமலத்தைப் பொசிக்கிறத்திலெதுதாழ்ச்சி எது ஏற்றம் அப்படிபோல ஞானியானவன் யதேச்ச சஞ்சாரவானுனுல் தன்னுல் விடப்பட்ட மலத்தைப் பொசிக்கிற நாய் பன்றிகழுதையை விடஎறிந்து போட்ட துன்மார்க்கனென்றறி.

வினா- அதேதெனின்,

விடை- ஒருவன் வாந்திபண்ணின அசனத்தைத்திரும்பப்பொசிக்கவேணுமென்றிச்சிப்பானு அதுபோல ஞானியானவன் தன்னுல் விடப்பட்ட விடயங்களைப் பொசிக்கிறதற்கு இச்சிப்பானு ஆதலால் ஞானியாகிய ஜீவன்முத்தனிச்சியான் — மேலும், அனந்தங்கோடி சென்மங்களிலுஞ் செய்தபுண்ணியபரிபாகத்தால் சந்தோஷித்த ஈசுவரப் பிரசாதத்தினுல் பிரமாதிதேவதைகளுக்குந் துர்லபமாயிருக்கிற பிரமானந்த ரசத்தையடைந்தபின் துச்சமாகியும் பொய்யாகிய லட்சியத்தைப்பொருந்தினதாகியுமிருக்கிற விடயத்தைப் பொசிக்கிறதற்கெவன் சந்தோஷிப்பான் ஆதலால்பிரவிருத்தியில் ஞானியானவன் சந்

தோஷிப்படான்—அத்வைதியானவன் இச்சாமயமாயும் அசத்
தாயுமிருக்கிற தேகாதி சகலப் பிரபஞ்சமும் பொய்யென்றுக
ண்ட பின் திரும்ப அதைவிரும்பித்தொழில் செய்யான், மேலு
ம், யாதாமொருவன் தேகாபிமானம் விடாமல் அதனோடுகூடி
யெதேச சஞ்சாரம் செய்கிறானோ அவன் மூடனுக்குள்ளே அ
தமனாயிரண்டு காலுடைய மாடென்று சொல்லப்படும்—மகா
த்துமாவாகவுங் கிருதார்த்தனாகவும் ஆனந்தசாரத்தைப்பா
னம்பண்ணிக் கொண்டிருக்கிறவனாகவுமிருக்கிற பிரமநிஷ்ட
ன் விடய யெதேச சஞ்சாரத்திலொருக்காலுங்கூடினவனல்ல—
ஆத்துமாராமனாயிருக்கிற யோகிக்கு யெதேச சஞ்சாரமான
து போகமுத்திகளினுடைய முத்திரவிரோசனைங்களிடத்திலுந்தவி
ர அன்னியசஞ்சார அவசரமில்லையென்றறி—ஞானியினுடை
ய தர்ம்மானது பிரமநிஷ்டையும் அஞ்ஞானியினுடைய தர்ம
மானது தேகாபிமானத்தோடே கூடின விடயபோகமுமென்
று சொல்லப்படும், இந்த ஆஷ்டினம்போல விபரீத லட்சணமான
தொழில்கள் ஒருபுருஷனிடத்திலொருக்காலுங்கூடாது.

வினா— அதெப்படியெனின்,

விடை— ஒன்றுக்கொன்று பிரிந்திரண்டிகாரங்களைப்பொரு
ந்தினதா யிருக்கிற சாம்பிராச்சியபட்டாபிஷேகமும் பி
ச்சாடனமு மொன்றாய்ப் பொருந்தமாட்டாது, ஆனதால்
ஞானியானவன் அனந்தபுண்ணியம் பொருந்தினமகிமையுடை
த்தானவனாய் ஆன்ம சாம்பிராச்சியத்தையனுபவித்துக் கொண்
டிருப்பன், மூடனானவன் சித்தத்திலுண்டான தோஷத்தினால் சக
லவிடயங்களையும் பிராந்தியினால் அனுபவிக்கப்பட்டு அபே
ட்சையபாயிவிடுவான்—ஆனந்தரசத்தைச் சுகமாய்ப் பான
ம்பண்ணிக்கொண்டு பிரத்தியகான்மாவாயிருக்கிற தன்னைச்சக
ல நாமரூபப்பிரபஞ்சத்துக்கும் அதிஷ்டானமாயிருக்கிற சச்சி
தானந்த பிரமமாகக்கண்டுகொண்டு அந்தர்முகமான அகண்
டாகாரவிருத்தியினால் இந்திரியவிடய ரூபமான கூட்டங்களை
க்கெடுக்கிறவனாகியும் பிரவிர்த்தியிற்பொறுமையடைந்தவனா
யுமிருக்கிற சர்வத்தியாகியான பிரம நிஷ்டனுக்குச் சொப்ப
னத்திலாகிலும் யெதேச சஞ்சாரபாவனைவரமாட்டாது.

வினா— அதேதெனின்,

விடை— நல்லபுத்தியுள்ளதாயும் பாலைப்பானம் பண்ணிக்கொ
ண்டுதேவதா சம்பந்தமாயுமிருக்கிற அம்சமானது சலத்தை

ப்பானம் பண்ண எப்படி யிச்சிக்கவில்லையோ அதுபோல ப்பிரம நிஷ்டனும்பெதேச சஞ்சாரமிச்சியான்—மேலும், விரமசரியாதி சாதனங்கள் வெகுகாலமனுசரித்தாலது பரிபக்குவமான பிரமநிஷ்டனை இயமாதிகுணங்களனுசரித்திருக்கும்.

வினா- அதெப்படியெனின்,

விடை—அக்கினியையுபாசிக்காந்தமுதலானதெப்படியனுசரித்திருக்கிறதோ அதுபோல இயமாதிகளனுசரித்திருக்கும் சூரமுசவுஞ் சத்துருசெயமுள்ளவனுகவும்யுத்தமுகத்திலமகாதேரிட்புள்ளவனுகவுமிருக்கிற சத்தவீரனுக்கு யுத்தத்தில் காயம் பட்டதும்புகளெப்படி பூடணங்களாயிற்றோ அதுபோல ஆத்துமஞான நிஷ்டையைப் பொருந்தியிருக்கிற ஞானிக்கு இயமாதிகுணங்களே பூடணம்—இந்தப்பிரம நிஷ்டனை சந்நியாசியானவன் பசியைப்போக்கடிக்கிற தொழிலான பிட்சாடன முதலானதுகளில் பிரவிர்த்தித்தபோதும் பிரபஞ்சமாய்ப் பாராதபடி செகத்தைப் பொய்யென்று தள்ளிச்சதா ஆத்துமபாவனையாயிருந்துக்கொண்டு சுரோத்திராதி பஞ்சேந்திரிய அந்தக்கரணமுதலானதுகளினுற் செய்யப்பட்டதொழில்களெல்லாவற்றையும், ஒருவர்க்கொருவர் எதிர்த்து அடித்துக் கொள்ளுகிறதைப் புறம்பாக நின்று சாட்சிக்காரன் பார்த்திருப்பதுபோல் பந்தமுத்தனுகச் சகலபந்தங்களையு மொழித்துத் திட சித்தனுகப்பார்த்துக்கொண்டிருப்பன்—ஆதலால் இப்படிப் பட்டசிரேஷ்டமானபிரமவித்தானவன்கண்ணில்லாதஅந்தகனுனுங்கண்தெரிந்தவன் போலச்சகலசனங்களிலுங்காணப்படுவன், காதில்லாதவனுனுங் காதுடையவன்போல் விளங்குவன் வாக்கில்லாதவனுனுலும் வாக்குள்ளவன்போல் விளங்குவன்—பிராணனில்லாதவனுனுலும் பிராணனுள்ளவனுவன் மனமில்லாத வனுனு மனமுள்ளவன்போலவும் தான்தானே சதாகாலமும் பிரமமாகவேயிருப்பன்.

வினா- இன்னமுமிந்த ஆத்துமஞானியானவன் எப்படியிருப்பானெனின்,

விடை— ஆத்துமதரிசனனுகவும் ஆன்மாதீதனுகவுஞ் சந்துஷ்டனுகவும் ஆத்மாராமனுகவும் ஆத்துமானந்தனுகவும் ஆத்துமசொரூபமே நாட்டமாகவுந் தன்னைவிடவேறேயன்னிய மில்லையென்கிற நாட்டம் பொருந்தினவனுகவுமிருப்பன்—மதவகங்காரங்களில்லாதவனுகவும், சாந்தனுகவும் நிருவிகற்பனுக

வும் நிர்விகற்பனாகவும் நிஷ்கிரியனாகவும் சும்மாயிருப்பன் — இத்தன்மையையே ஸ்ரீமான் பிரமநிஷ்டன் அஞ்ஞானத்தினால் கற்பிக்கப்பட்டிருக்கிற தேகாதிப் பிரபஞ்சங்களை விளங்கப்பண்ணுவித்துவருகிற ஞானிதாபாசவிடத்திலென்னவாமோ அப்படிப்பண்ணவேண்டும் பூரணமாய் நித்தியானந்த ஸ்வரூபமான தன்னிடத்தில் தானே அமிழ்ந்துகொண்டிருப்பனென்றறி — அப்பா! ஸ்ரீநிஷ்டப் பிரமவித்தானவன் மூர்த்தனைவிட்டு பெருமானத்திலும் அவமானத்திலும் சுகத்திலும் துக்கத்திலும் இதமகிதங்களிலும், உபரி விதாடுவனைக்கென்கிற புத்தியில்லாமல் சமமாயேகரூபமான மனதோடேகூடப் பொறுமையையடைந்தவனாய் அந்தர் முகமான ஆத்மானந்தத்தில் நிலைத்தவனாய்விடயமுகத்தனாயிருப்பன் — அவன் மூர்த்தனைவன் பிராரத்தகர்மமாகிற பெருங்காற்றினாலேயப்பட்டு விடயத்தில் பிரவிர்த்திவைத்தாலும் அந்த விடயங்களில் பொருந்தாமல் மனதைப்போலேக்கித்தேகேந்திரியங்களாகக்கண்டு ஆத்மானுபவமென்கிற அமிர்தரசத்தைப்பானம்பண்ணினவனாய் அநேகனுபான்மையரிபாலனச்சிதானந்தமாயிருப்பன் — அஞ்ஞானியுடைய இச்சையினால் கற்பிக்கப்பட்டிருக்கிற தேசவிருத்திகளோடுகூடினவனாகவும் நித்திரைபோகிறவனேப்போலவும் நிந்தாதிகளைச் சகிக்கச்செய்பவனாகவும் போதிக்கப்பட்டவனாகவும் நிந்தத் தொம்பதலட்சியார்த்த அபிக்கத்தைப் பிரயத்தனத்தினால் பண்ணினவனியதினுண்டான விசேடஞானப்பிரகாசனாய் ஸ்ரீநிஷ்டப்பிரமவித்தாகவேயிருப்பன், இவனறியும் அந்தர் பாகியபிரபஞ்ச விடயங்களிலும் ஆத்மஸ்வரூபமாகக்கண்டு கொண்டு அன்னியனால் கற்பிக்கப்பட்ட தேகமாத்திரத்தையுடைத்தானவனாகியும் ஏகாந்தமான சந்தானத்தினால் மடவிருத்தி பொருந்தினவனாகியயிருப்பன் — இதைக்கேட்டு, மடக்கென்கிற பிரிவுந்தான் வேறு பிறந்தியானிவன் றெனகிற பாவமுந்தன்னுடைய கொட்பமைசாக்ஷிரக்கனிலுண்டான அவிவேகப்பிரிவான புத்தியுமாதிக்கேகவும் நித்தனாகவிருந்துகொண்டு சஞ்சரிப்பன் — சர்மகர்மவிகார்க்கமார்க்கங்களைத் தள்ளிவைத்துச் சாரிகைகளற்றுச்சன்மார்க்கத்தில் சஞ்சரிக்கிறவனாய் சம்பிரஞ்ஞாத சமாதியில் அடையப்பட்டிருக்கிற பிராரத்தசேடத்தையுடைத்தானவனாகியவனும் சதானந்தரூபமானவனுமாய் மஹானுபாவனாகிய பிரமத்தினிடத்தில் விளங்குகிறபோது பிரமமேதானாகிய பிரமவித்தானவன் பிரமத்தையே யடைவன்,

வினா- அதெப்படியெனின்,

விடை- கடோபாதியினால் ஏற்பட்ட கடாகாசமானது கடோபாதிநீக்கமடைந்தபோது கடாகாசமும் மகாகாசமுமொன்றானது போல ஜீவன்முக்தனும் பிரமத்தில் ஐக்கியமாயிருப்பான்— இந்தப் பிரம நிஷ்டனானவன் முன்னமேகட்டுப் பட்டவனாதலால் இப்போது முக்தனுமாகான் பந்தனுமல் முக்தனுமாவானிந்தப்பந்தமுக்திகளிரண்டு மனதினுடைய தொழிலானபடியினால் அந்தமனதை நாசம்பண்ணினவனே பந்தமோட்சங்களை நாசம்பண்ணினவன் — இந்தமனதினுடைய பிரவிர்த்தியே புருடனுக்குப் பந்தம் இந்தமனதையான்மாவினிடத்தில் லயம்பண்ணுகிறதே முக்தி ஆகலால் இந்தத் தத்துவத்தை நன்றாயறிந்துகொண்டே முமுட்சவானவனாகையால் மனதைக்கெடுக்கிறதற்கு யத்தனம் பண்ணவேணும்.

வினா- மனமென்பதேதெனின்,

விடை- ஒன்றான ஆன்மசொரூபத்தைவிட்டுப் பலவாகிய பிரபஞ்ச கற்பனைகளைக் கற்பித்தது மனது, இப்படிக்கொத்த மனதையிருத்திச் சொரூபானுபவாக்கினியினால் தகிக்கிறவனெவனோ அவனே தீரன் அவனே ஞானபுருஷன் — அப்பா இந்தமனமே நாசம்பண்ணுகிற தற்குபாயம் சமாதியைத்தவிர வேறொரு சாதனமுங்காணோம் ஆதலால் சமாதியினால் சூட்சுமசரீரம் நாசமாய்ப்போகிற போதுயோகியானவன் விமுத்தனாவான்— ஆகையால் நீயும் அனுத்தமாவானதேகாதி வியாபாரங்களைவிட்டுப்பிரயத்தனம் பண்ணிச் சமாதியைச்செய்து இந்தச்சமாதியினால் மனதைக்கெடுத்துச் ஜீவன் முத்தனாய் நிர்ப்பயமாயிரு— பிராணிகளுக்குப்பிராரத்தகர்மத்தினுடைய வியல்பு ஆயாசகாசகங்களைக்கூட்டுவிக்கிறதேதவிர அன்னியமாக வொருபலனுஞ்சித்தியாது ஆகலால்பிராரத்த கர்மத்துக்குச் சரீரத்தையொப்புவித்து அல்லும்பகலுஞ்சரீரசிந்தையைவிட்டு நிச்சலமாய்வெகுகாலஞ்சமாதியைச்செய்துகொண்டு ஒருவிடத்திலும் நிலைக்கடையாயிராமல் சுகமாயிரு, பிரமநிட்டராயிருக்கிறபேர் ஒருவிடத்திலேயேவாசம் பண்ணக்கூடாது.

வினா- அதேதெனின்,

விடை- ராகத்துவேஷாதிகள் வந்துகூடும் கூடினால் அதினுண்டானமோகத்தினால் அடிபடப்பட்ட மனதோடேகூடித்தத்

னை நிஷ்டையை மறந்து சமுசாரமாகிற பாழுங்கிணற்றில் குருடனைப் போல் விழுவன்—ஆனால் ராகத்துவேஷங்களைப் போக்கடிக்கும்படி யெத்தனம் பண்ணுகிற சற்புருஷர்கள் ராகத்துவேஷங்களுண்டாகிற விடத்தில்வாசம் பண்ணக்கூடாது ஆகையால் நன்மையாகிலுந் தீமையாகிலுமெவ்விடமெவ்விடமிருந்தாலந்த நன்மை தீமையுடையதென மொட்டாதோ எவ்விடமெவ்விடத்தில் மனதுபிரசன்னமாகுமோ அவ்விடத்தில் இருக்கவேணும்—சீவன்முத்தனானவன் மானாபிமானங்களிலும்லாபநஷ்டங்களிலுந்தோத்திரநிந்தைகளிலும்பிரியாப்பிரியங்களிலும் நித்தியஞ் சமபுத்தியாயிருந்துக் கொண்டு சஞ்சரிப்பன் — இதுவன்றியுமொருவிடத்துமிருக்கப்புத்தி கொள்ளாமல் எவ்வளவெவ்வளவு கிடைத்ததோ அவ்வளவில் திர்ப்தியடைந்தவனாய் ஞான ஐயிஸ்வரியம் பொருந்தினவனாகவும்அசங்கதனாகவும் சமசெரிதியாகவுமிருப்பன்—பசிதீருகிற நிமித்தியம்போஜனமும் சீதநிவிர்த்தியின் பொருட்டு வஸ்திரமும் வியாபாரமொழிவதினிமித்த மவுனமும் ராகத்துவேஷங்கெடுக்கிற தத்துசஞ்சாரமுஞ்செய்துகொண்டிருப்பன்—அப்பா! விடயங்களை அமேத்தியம்போல் தோஷமாகவிசாரிப்பதும்மோட்ச இச்சையினால் சகலதுற்சங்கங்களைவிட்டொழிகிறதும்விடயநினைப்புவாராததும் ராகத்துவேஷாதிகளில்லாதபடிக்கிருக்கிறதும்மனதினுடைய நிர்மலமுமாகியவிவையெல்லாஞ்சம் பிரஞ்ஞாதசமாதியுள்ளவனுக்கே தவிரமற்றபேர்களுக்குண்டாகமாட்டாது—மனோநிர்மலத்தின் பொருட்டொடுங்கின சித்தவிருத்தியோடேகூடினவனாய் பகிர்முகவாசனையெல்லாம் நன்றாய் விட்டொழிந்தவனாய்சாந்தனாய்சர்வமும்பிரமமாகக்கண்டுகொண்டு மனோமயமான நாமரூபப்பிரபஞ்சத்தோற்றமும் கானற்சலம்போல் பொய் யென்றெண்ணிச் சொரூப நிஷ்டனாய் சுகமாயிரு—அப்பா! உள்ளடங்கினசமாதி நிஷ்டனுடைய ஆன்மானந்தமும் விசாலம் அவன்சஞ்சரிக்கிறதில் தேசமும் விசாலம் புண்ணியநதிகளும் விசாலம் ரட்சிக்கிறதில் தேவதாகடாட்சமும் விசாலம் சாந்தமும் விசாலம்சொரூபானுபவமும்விசாலம்—ஆனதால் சமாதியினால் ஞானமானது நன்றாய்ப்பிறக்கும் அதினால்முத்தியோகமாகிற அழுக்கைக்கழுவப்பட்டபிரமத்தைத்தவிர அன்னியமில்லாதபடி பிரமமாகவேசகலப்பிரதிபத்தனியனாய் சுகத்திலேயிரு—தேகமென்ன பிராணனென்ன இந்திரியமென்ன மனமென்ன புத்தியென்ன அகங்காரமென்ன இதுமுதலான கிரியங்களெல்லாம் ஞானாக்கினியினால்து

டு நிற்குணமாயும் அத்வைதமாயும் பூரணமாயுமிருக்கிற விசு த்த னிடத்திலே லயம்பண்ணிச் சுத்தமாய் அகண்டசச்சிதானந் தசொரூபமாகவேயிருந்துகொண்டு வேறொன்றும் நினையாம ல் சுகமாயிரு — சித்துரூபமாயும் சத்தியமாயுமிருக்கிறவென் னிடத்தில் இந்த நாமரூபப்பிரபஞ்சம் பிராந்தியினால் விபரீ தமாய்த்தோணுகின்றது ஆதலால் என்னைக்காட்டிலு மிந்தவி பரீதமான பிரபஞ்சம் பரமார்த்தமாய் வேறென்றுமில்லாமல் என்னுலேயே வியாபிக்கப்பட்டிருக்கிறதென்று நிர வதிகமாகவும் அவதியில்லாததாகவுமிருக்கிற ஆனந்தாமிர் தக்கடலின் அழுந்தின மனதுடனே கூடினவனாய்ப் பிராரத்த துக்குத்தேகவிருத்திகளை அல்லும்பகலு மொப்புவித்தவனாய் உண்மைபோல் பேசாமல் சுகமாயிரு — ஐயா, ஜீவனேயுனக் கும்பிரமத்துக்கும் பேதமில்லை பிரமமே நீயாய் இப்படிபிர மமாய்ச் சத்தாயிருக்கிறவுனக்கு ஒருக்காலும் மிருத்தியு பயமி ல்லை — அத்துவைதரூபப் பிரமமாயிருக்கிற வுனக்கு மிருத்தியு பயமெப்படி சேரப்போகிறது ஆனதால் மிருத்தியுவென்கி ற பயத்தையொழித்து அகம்பிரமாஸ்மியென்கிற ஏகநிஷ்டை யோடே கூடினவனாய் ஆனந்தாமிர்தரசத்தைப் பானம்பண்ணி க்கொண்டு நிர்விகற்பனாய்ச் சொச்சொரூபமான ஆத்மானந் தத்தில் விளையாடிக்கொண்டு சுகமாயிரு.

அனுபவமகிழ்ச்சி.

என்றிப்படி சொன்ன குருவசனத்தைக் கேட்டுச் சீஷ னவன் அநந்தகாரணப்பிரமைகளெல்லாந் தீர்ந்தவனாய் ஆனந்த மயம்பெற்றசத்தேகஷித்தினால் பத்தியுடன் குருவுக்கு நம ஸ்காரம்பண்ணிவாரு, ஸ்ரீ குருசுவாமீ! தேவரீருடைய க டாக்ஷத்தினால் என்னுடைய அவித்தியாரூபமான இருதயக் கிரந்தியானது பேதமாயிற்று, சகல சம்சயங்களுஞ் சகலது க்கங்களுந் தீர்ந்தது — தேவரீருடைய வாக்கியார்த்த வுபதேச சந்நிதியிலுண்டான ஞானமாகிற சூரியப்பிரகாசத்தினாலே அ ஞ்ஞான அந்தகாரமொழிந்து அஞ்ஞானகாரியமான விப ரீதபாவனைகள் சேதனமான சித்தவிகற்பங்களெல்லாந் தீர்ந்து நிர்ப்பந்தனானேன், சகலவுபாதிகளையுமொழித்தவனானேன் சகல ம் சாரபந்தங்களுந் தீர்ந்தவனானேன் நிற்குணமாயும் ஏக வஸ்துவாயும் சத்தியமாயுமிருக்கிற பரப்பிரமமே நானா னேன் — விவேகத்தினாலொத்துச் சங்கிர சொப்பனசிருஷ் டியிலுண்டானவைபோலாகிய பேதமெனக்கில்லை [illegible] மெனக்கில்லை சதாகாலமும் அத்துவைதமாயுமானந்தமாயு[illegible]

நித்தாகவுமிருக்கிற சொரூபமே நானாவேன்.

இப்படியிருக்கிறசீவன் முத்தனெனக்குச் சாயாரூபமாகவும் பிரதிபிம்பமாகவுந்தேகாதியுபாதிகளிருக்கட்டும் அந்தவுபாதிகளினாலுண்டானதொழில்களெல்லாஞ் சாட்சியாயுபாதியிலட்சணமான வென்னைத்தொடமாட்டாது — ஆகலால் விகிதமாய்ச் செய்கிறதொழிலும் நிமித்தமாய்ச் செய்கிற தொழிலும் அவைகளைச் செய்தாலும் நான் செய்தவனல்லசொப்பனத்தில் ஒருபுருஷன் செய்ததொழில் விழித்தவுடன் சாக்கிரத்திலேயப்படிப்பொய்யாய்ப்போகுமோ அப்படியே ஞானசாக்கிரத்தில் சர்வமுமித்தையே — இந்தச் சராசரமான பிரபஞ்சம் ஆன்மசொரூபமாயிருக்கிற என்னால்வியாபிக்கப்பட்டிருப்பதால் சர்வாவஸ்தைகளிலும் நான்சாட்சியாகவேயிருப்பன், இந்தத்தேகமென்பது அகங்காரத்துக்கேதுவிரசாட்சியாயிருக்கிற வென்னிடத்திலில்லை, சுகதுக்கமும் பந்தமோட்சமுமாயிருக்கிற சமுசாரமானது இந்த அகங்காரத்துக்கேயென்றறிந்தேன் — மலமாம்சபூரிதமாயும் ஞானத்தினால் ரட்சிக்கப்பட்டதாயும் நாய் நரிகளால் பட்சிக்கப்பட்டதாயுமிருக்கிற சரீரத்தினிடத்தில் அத்துவைதமாகியும் அகண்டமாகியுமிருக்கிற ஆனந்தபோதரூபமான நான் அகங்காரமமகாரங்களையேயெப்பண்ணுவேன்.

நான் வெகுகாலமாயிந்த அகங்காரமென்கிற பிசாசத்தினாற் பிடிக்கப்பட்டுச் சுபசொரூபமறைபட்டிருந்தேன் இப்போதிந்த அகங்காரமானசத்துருவைத்தேடித்தேடி நன்றாயறிந்து சமாதியாகிற அக்கினியில் வாசனைகளோடே கூடத்தகித்துப்போட்டேன் — சச்சிதானந்த சொரூபமாயிருந்து மயித்திரி முதிதைமுதலான குணங்களைப் பொருந்தியிருக்கிற வென்னை இத்தனைநாளு மகங்காரவாசனைகளானது வருஷாகாலத்தில் மேகமானது சூரியனையெப்படிமறைத்ததோ அப்படி மறைத்தது இப்படிமறைத்ததே பிரத்தியகான்மாவுக்குபாதி, இந்தவுபாதியாகியவகங்காரமே பிரத்தியகான்மாவுக்கு விரோதி, இந்தஅகங்காரத்தில் நின்றவன் விடுபடுகிறானோ அவனே முத்தனென்றும் எவனிதனிடத்தில்கட்டுப்படுகிறானோ அவனே பந்தனென்றுமறிந்தேன் — இந்தஅகங்காரபாவனையை நன்றாய் நாசம்பண்ணினாலொழிய அகண்டசச்சிதானந்தப்பிரகாசம்பிறக்கமாட்டாது ஆனதாலிந்த அகங்காரபாவத்தைச் சமாதிநிஷ்டையினால் நாசம்பண்ணுகிறேன் — இந்தக் காமக்குரோதாதிகளான பரிவாரங்களோடேகூடி அகங்காரரூபமான சத்துருவைச் சித்ரூபமாகிற அக்கினிக்குப் பூரணாகுதிகொடுத்துச் சொரூபத்

தை யடைந்தேன்—பிரம நிஷ்டையினுடைய லட்சணஞ் சகல விருத்திகளு மொழிந்த மகாமவுனமாதலால் அந்தமவுனத்தையே யாசிரயித்து உங்கள்கடாட்சத்தினால் சகஜவஸ்தையடைந்திருக்கிறேன்—ஜென்ம ஸ்திதிலயங்களைக் கெடுக்கிற அதற்குக் காரணமாகியுமொரு காரணங்களுமல்லாததாகியும் கேவலமேயாது லட்சணமாகியும் ஆனந்தகனமாகியும் நிரஞ்சனமாகியுமிருக்கிற பிரமமே நானென்னும் மௌனத்தையடைந்தேன்—யாதொரு சொரூபத்தினிடத்தில்வாக்குச் செல்லாதேமனமுஞ் செல்லாதோ டத்திலெல்லாதோ அப்படியாயிருக்கின்றசத்தபரிசரூப ரசகந்தங்களில்லாத பிரமமெதுவோ அதுவே நானுமானேன்—சொரூபத்தை விடக்காதிருந்தால் கேட்பேன் கண்ணிருந்தால் காண்பேன் வாக்கிருந்தால் வசனிப்பேன் மனதிருந்தால் நினைப்பேன் இவை யில்லாமல் ஆனந்தமாயும் அத்துவைதமாகியுமேகமாகியும் அமேயமாகியுமிருக்கிற சொரூபமே நானேன் யாதொருசொரூபமே இங்கேழு தெற்கும்வடக்கும்மேற்கும் கிழக்கு மங்கு நிறைந்திருக்கின்றதோ அந்தப்பரிபூரணஅகண்டச்சிதானந்த சொரூபமே நானானேன்—வாக்கினால் வசனிக்கப்படாத பிரமமானது சல்லாக்குடைய பிரவிருத்தியைக் கெடப்படுமானாகப் போகில் ஞானத்தினால் அறியப்படாத பிரமமானதுகாலபத்தின் விருத்திகள் பிரவிர்த்திக்கிறதற்குவிடமில்லை ஆதலால்சரீரவாலறும் அத்துவைதப் பிரமமாயிருந்துக்கொண்டு மவுனத்துடனே கூடிச்சொரூபானுபவநித்தியமடைந்திருக்கிறேன்—என்றிப்படி விண்ணப்பஞ்செய்து சற்குருவை அடிக்கடி நமஸ்காரம் பண்ணினவனைக்குறித்து சிஷியனைப்பார்த்துச்சற்குருவானவர் நிருவாணனிர்த்து சந்தோஷித்தவராயடிக்கடி குருவைக்கண்ணுறல் வீட்டித்த இவன்றன்றுயநிந்துபக்குவப்பட்டானென்று தாமுமப்ப கிரமகமானவிருத்தியையொழிந்து அந்தகிரமகமாயிருக்கிறநிர்குணசச்சிதானந்தப்பிரமமாயிருந்துவிளங்கினார்.

இந்த வேதாந்தசாரத்தினுடைய சுருக்ஷேசம் வைதமான தாற்பரியத்தைச் சற்புருஷாளாகவிருக்கிற பேர்களுக்குமோட்சசாதனமாய்ச் சொல்லப்பட்டது—ஆகையால் அத்துவைதானந்த குருசுவாமிகளைக்குறித்தும் அவர்களுடைய ஆசாரியரானசதானந்தகுருசுவாமிகளைக்குறித்தும் அவர்களுடைய ஆசாரியராகிய சங்கரானந்தகுருசுவாமிகளைக்குறித்தும் அடிக்கடி நமஸ்காரம்பண்ணுகிறேன்.

வேதாந்தசாரம்—முற்றிற்று.